
# திருக்குறள்

## தெளிவு



பேராசிரியர்

சுந்தர சண்முகனார்

# திருக்குறள் தெளிவு

## (குறளும் உரையும்)

உரையாசிரியர் :
ஆராய்ச்சி அறிஞர்
பேராசிரியர் **சுந்தர சண்முகனார்**
தமிழ் அகராதிக் கலை ஆசிரியர்
புதுச்சேரி

புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம்
8, இரண்டாம் தெரு, வேங்கட நகர்,
புதுச்சேரி - 605 011,
இந்தியா.
தொலைபேசி : 0413 - 2213110

## காணிக்கை

பேராசிரியர் சுந்தர சண்முகனார் அவர்களின்
துணைவியாரும் எங்கள் தாயாருமாகிய
திருமதி **சு.ச. விருத்தாம்பிகை அம்மையார்**
அவர்களுக்கு இந்நூலைக் காணிக்கையாக்கி
வணங்குகிறோம்.


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **திருக்குறள் தெளிவு** (குறளும் உரையும்) |
| முதல் பதிப்பு | : | 1966 |
| இரண்டாம் பதிப்பு | : | 2000 |
| மூன்றாம் பதிப்பு | : | 2005 |
| நான்காம் பதிப்பு | : | 2006 |
| உரிமை | : | சு.ச. அறவணன் |
| பக்கம் | : | 304 |
| விலை | : | 30 உருபாய் |
| வெளியீடு | : | பேராசிரியர் சுந்தர சண்முகனார் அறக்கட்டளை, 8, இரண்டாம் தெரு, வேங்கட நகர், புதுச்சேரி - 605 011. |
| விற்பனை உரிமை | : | புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுச்சேரி-11. |
| ஒளி அச்சு | : | சிவம்'ஸ், பேசி : 9444232005 |
| அச்சிட்டோர் | : | தேவா ஆப்செட், சென்னை-5 |



ஆராய்ச்சி அறிஞர்

பேராசிரியர் **சுந்தர சண்முகனார்**

உரையாசிரியர் பேராசிரியர் **சுந்தர சண்முகனார்**

பிறப்பு : 13.07.1922
இறப்பு : 30.10.1997
குரு : ஐந்தாம் பட்டத்து ஞானியாரடிகள்
பிறந்த ஊர் : புதுவண்டிப் பாளையம், கடலூர்

**படைப்புகள்:**

69 நூல்கள்: கவிதை நூல்கள்: 8, பெருங்காப்பியங்கள்: 2, முழு உரைநூல்கள்: 7, திருக்குறள் ஆய்வுகள்: 5, கம்ப இராமாயணத் திறனாய்வுகள்: 6, அறிவியல் ஆய்வுகள் : 6, பல்துறை ஆய்வு நூல்கள் : 35.

**சிறந்த படைப்புகள்:**

தமிழ் அகராதிக் கலை, கெடிலக் கரை நாகரிகம், தமிழ் நூல் தொகுப்புக் கலைக் களஞ்சியம், தமிழ் இலத்தீன் பாலம்.

**பெற்ற பட்டங்களில் சில:**

இயற்கவி, புதுப்படைப்புக் கலைஞர், ஆராய்ச்சி அறிஞர், திருக்குறள் நெறித் தோன்றல் முதலியன. பெற்ற விருதுகளில் சில: தமிழக அரசின் ‘திருவள்ளுவர் விருது’, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவைச் செம்மல் விருது, தமிழகப் புலவர் குழுவின் தமிழ்ச் சான்றோர் விருது, அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை விருது முதலியன.

**பெற்ற பரிசுகள்**

நடுவண் அரசு, தமிழக அரசு பரிசுகள் 7 பெற்றுள்ளார்

**பாடமாக அமைக்கப்பட்ட நூல்கள்:**

தமிழ் அகராதிக் கலை, வாழும் வழி, தமிழர் கண்ட கல்வி, திருமுருகாற்றுப்படை தெளிவுரை, கௌதமப் புத்தர் காப்பியம், மற்றும் History of Tamil Lexicography

# உரையாசிரியர் உரை

'திருக்குறள் தெளிவுரை' என்னும் பெயரில் 1948 ஆம் ஆண்டிலும், 'திருக்குறள் தெளிவு' என்னும் பெயரில் 1949 - ஆம் ஆண்டிலுமாகக் குறள் உரை விளக்க நூற்கள் சில யான் எழுதி வெளியிட்டுள்ளேன். பின்னரும் வெவ்வேறு ஆண்டுகளில் சில நூற்கள் எழுதி வெளியிடப்பட்டுள்ளன. இவையனைத்தும், குறிப்பிட்ட சிற்சில குறள்களின் விளக்க வெளியீடுகளே. ஆனால், மிக விரிவான விளக்கம் உடையவை.

இப்போதோ, "திருக்குறள் தெளிவு" என்னும் பெயரில் திருக்குறள் முழுவதற்கும் சுருங்கிய அளவில் தெளிவான கருத்துரை வழங்கும் இந்நூலை எழுதி வெளியிடுவிக்கிறேன். இந்நூல் ஒரு திங்கள் கால அளவுக்குள் எழுதப்பட்டு அச்சும் முடிக்கப்பட்டு விட்டது.

திருக்குறளுக்கு அன்றுதொட்டு இன்றுவரை பல உரைகள் வெளிவந்துள்ளன. எனது உரையும் வருகிறது. படித்துக் கருத்து அறிவிக்க வேண்டுகிறேன்.

**சுந்தர சண்முகன்**

28.8.1966

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அதிகார அகர வரிசை | | 7 |
| **1.** | **அறத்துப்பால்** | 11-88 |
| | 1. பாயிரம் | 12 |
| | 2. இல்லறவியல் | 20 |
| | 3. துறவறவியல் | 60 |
| | 4. ஊழியல் | 86 |
| **2.** | **பொருட்பால்** | 89-230 |
| | 1. அரசியல் | 90 |
| | 2. அமைச்சியல் | 140 |
| | 3. அரணியல் | 160 |
| | 4. கூழியல் | 164 |
| | 5. படையியல் | 166 |
| | 6. நட்பியல் | 170 |
| | 7. குடியியல் | 204 |
| **3.** | **இன்பத்துப் பால்** | 231-282 |
| | 1. களவியல் | 232 |
| | 2. கற்பியல் | 246 |
| | குறள் முதற்குறிப்பு அகர வரிசை | 283 |

# அதிகார அகரவரிசை


| | பக்கம் |
|---|---|
| அடக்கமுடைமை | 36 |
| அமைச்சு | 140 |
| அரண் | 162 |
| அருளுடைமை | 60 |
| அலர் அறிவுறுத்தல் | 244 |
| அவர்வயின் விதும்பல் | 268 |
| அவா அறுத்தல் | 84 |
| அவை அஞ்சாமை | 158 |
| அவை அறிதல் | 156 |
| அழுக்காறாமை | 44 |
| அறன் வலியுறுத்தல் | 18 |
| அறிவுடைமை | 98 |
| அன்புடைமை | 26 |
| ஆள்வினை யுடைமை | 136 |
| இகல் | 184 |
| இடன் அறிதல் | 112 |
| இடுக்கண் அழியாமை | 138 |
| இரவச்சம் | 226 |
| இரவு | 224 |
| இல்வாழ்க்கை | 20 |
| இறைமாட்சி | 90 |
| இனியவை கூறல் | 30 |
| இன்னா செய்யாமை | 74 |
| ஈகை | 56 |
| உட்பகை | 190 |
| உழவு | 220 |
| உறுப்பு நலன் அழிதல் | 262 |
| ஊக்கம் உடைமை | 132 |
| ஊடலுவகை | 280 |
| ஊழ் | 86 |
| ஒப்புரவறிதல் | 54 |
| ஒழுக்கமுடைமை | 38 |

# அதிகார அகரவரிசை


| | பக்கம் |
|---|---|
| ஒற்றாடல் | 130 |
| கடவுள் வாழ்த்து | 12 |
| கண்ணோட்டம் | 128 |
| கண்விதுப்பழிதல் | 250 |
| கயமை | 228 |
| கல்லாமை | 94 |
| கல்வி | 92 |
| கள்ளாமை | 68 |
| கள்ளுண்ணாமை | 198 |
| கனவுநிலை உரைத்தல் | 258 |
| காதற் சிறப்புரைத்தல் | 240 |
| காலம் அறிதல் | 110 |
| குடிசெயல் வகை | 218 |
| குடிமை | 204 |
| குறிப்பறிதல் (பொருட்பால்) | 154 |
| குறிப்பறிதல் (இன்பத்துப் பால்) | 234 |
| குறிப்பறிவுறுத்தல் | 270 |
| குற்றங்கடிதல் | 100 |
| கூடா வொழுக்கம் | 66 |
| கூடா நட்பு | 178 |
| கேள்வி | 96 |
| கொடுங்கோன்மை | 124 |
| கொல்லாமை | 76 |
| சான்றாண்மை | 210 |
| சிற்றினம் சேராமை | 104 |
| சுற்றந் தழால் | 118 |
| சூது | 200 |
| செங்கோன்மை | 122 |
| செய்ந்நன்றி அறிதல் | 32 |
| சொல்வன்மை | 142 |
| தகையணங்குறுத்தல் | 232 |
| தவம் | 64 |
| தனிப்படர்மிகுதி | 254 |

# அதிகார அகரவரிசை


| | பக்கம் |
|---|---|
| தீ நட்பு | 176 |
| தீவினை யச்சம் | 52 |
| துறவு | 80 |
| தூது | 150 |
| தெரிந்து செயல்வகை | 106 |
| தெரிந்து தெளிதல் | 114 |
| தெரிந்து வினையாடல் | 116 |
| நடுவுநிலைமை | 34 |
| நட்பாராய்தல் | 172 |
| நட்பு | 170 |
| நலம்புனைந்துரைத்தல் | 238 |
| நல்குரவு | 222 |
| நன்றியில் செல்வம் | 214 |
| நாடு | 160 |
| நாணுடைமை | 216 |
| நாணுத் துறவுரைத்தல் | 242 |
| நிலையாமை | 78 |
| நிறையழிதல் | 266 |
| நினைந்தவர் புலம்பல் | 256 |
| நீத்தார் பெருமை | 16 |
| நெஞ்சொடு கிளத்தல் | 264 |
| நெஞ்சொடு புலத்தல் | 274 |
| பகைத்திறம் தெரிதல் | 188 |
| பகைமாட்சி | 186 |
| பசப்புறு பருவரல் | 252 |
| படர்மெலிந் திரங்கல் | 248 |
| படைச் செருக்கு | 168 |
| படை மாட்சி | 166 |
| பண்புடைமை | 212 |
| பயனில சொல்லாமை | 50 |
| பழைமை | 174 |
| பிரிவாற்றாமை | 246 |
| பிறனில் விழையாமை | 40 |
| புகழ் | 58 |

# அதிகார அகரவரிசை


| | பக்கம் |
|---|---|
| புணர்ச்சி மகிழ்தல் | 236 |
| புணர்ச்சி விதும்பல் | 272 |
| புலவி | 276 |
| புலவி நுணுக்கம் | 278 |
| புலால் மறுத்தல் | 62 |
| புல்லறிவாண்மை | 182 |
| புறங்கூறாமை | 48 |
| பெண்வழிச் சேறல் | 194 |
| பெரியாரைத் துணைக்கோடல் | 102 |
| பெரியாரைப் பிழையாமை | 192 |
| பெருமை | 208 |
| பேதைமை | 180 |
| பொச்சாவாமை | 120 |
| பொருள்செயல் வகை | 164 |
| பொழுதுகண்டு இரங்கல் | 260 |
| பொறையுடைமை | 42 |
| மக்கட்பேறு | 24 |
| மடியின்மை | 134 |
| மருந்து | 202 |
| மன்னரைச் சேர்ந்தொழுகல் | 152 |
| மானம் | 206 |
| மெய்யுணர்தல் | 82 |
| வரைவின் மகளிர் | 196 |
| வலியறிதல் | 108 |
| வாய்மை | 70 |
| வாழ்க்கைத் துணைநலம் | 22 |
| வான் சிறப்பு | 14 |
| விருந்தோம்பல் | 28 |
| வினை செயல்வகை | 148 |
| வினைத்திட்பம் | 146 |
| வினைத்தூய்மை | 144 |
| வெகுளாமை | 72 |
| வெஃகாமை | 46 |
| வெருவந்த செய்யாமை | 126 |

# திருக்குறள் தெளிவு

## 1. அறத்துப்பால்

## 1. கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 2

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 4

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். 6

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 7

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. 8

கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 9

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். 10

# 1. கடவுளை வாழ்த்தி வணங்குதல்

எழுத்துக்களுக்கெல்லாம் 'அ' முதன்மை (மூலம்) ஆனதுபோல் உலகிற்குக் கடவுள் முதன்மையானவர். 1

தூய அறிவுருவான கடவுளின் நல்ல திருவடிகளை வணங்காராயின் ஒருவர் படித்ததனால் பயன் என்ன? 2

மலரனைய மென்மையான உள்ளங்களில் தங்கும் இறைவனின் சீரிய அடிகளை என்றும் இறைஞ்சுபவர் நிலவுலகில் நெடிது வாழ்வர். 3

விருப்பு வெறுப்பற்ற தேவனின் அடிகளைப் பணிவோர்க்கு எங்கும் என்றும் துன்பமில்லை. 4

தலைவனாங் கடவுளின் உண்மைப் புகழை விரும்பிப் போற்றுவாரிடம் அறியாமையொடு கூடிய நல்வினை, தீவினை என இருவினைகள் இரா. 5

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளால் தோன்றும், ஊறு, சுவை, ஒளி, மணம், ஒலி என்னும் ஐம்புல இன்பங்களை அடக்கிய கடவுளின் மாசற்ற திருநெறியில் ஒழுகுவோர் நெடிது வாழ்வார். 6

ஒப்பற்ற கடவுளின் திருவடியை விடாது தொழுவோர்க்கே மனக்கவலையைப் போக்கிக் கொள்ள முடியும். 7

அறக்கடலாகிய இறைவனின் அடியாகிய தெப்பத்தை அடைந்தோராலேயே பிற உலகப் பிணிப்புக் கடல்களைக் கடக்க முடியும். 8

மேற்கூறிய எட்டுக் குணங்களையும் உடைய கடவுளின் அடிவணங்காத தலைகள், குருட்டுக்கண் செவிட்டுக் காது முதலிய புலனற்ற பொறிகள் போல் பயனற்றனவாம். 9

இறைவனடியை நினைந்துவழி படாதார், பிறவியாம் பெருங்கடலைக் கடக்கார்; வழிபடுவோரே கடப்பர். 10

## 2. வான் சிறப்பு

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று. 11

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. 12

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின் றுடற்றும் பசி. 13

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். 14

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 15

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. 16

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். 17

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. 18

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின். 19

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு. 20

## 2. மழையின் மாண்பு

வான்மழை என்றும் நின்று உலகிற்கு வளங்களை வழங்கி வருதலால், அஃது அமிழ்தமென எண்ணத் தக்கது. 11

உண்போர்க்கு வலுவளிக்கும் உணவு விளைத்துத் தந்து, உண்டு கொண்டிருக்கும் அவர்க்குத் தானே நீருணவாகவும் உதவுவது மழை. 12

மழை பெய்யாது தவறுமாயின், பெரிய உலகை விரிந்த கடல் சூழ்ந்திருந்தும் பயனின்றி, பசி உள்ளே நிலைத்து நின்று வருத்தும். 13

மழை யென்னும் வருவாய் வளங்குன்றின், உணவு விளைக்கும் உழவர் ஏர் உழவியலாது. 14

ஒரு நேரம் பெய்யாது கெடுக்கினும், அதனால் வளங்கெட்டவர்க்கு ஈடு செய்ய மறுநேரம் பெய்து வாழ்வளிப்பதும் அம்மழையேதான்! 15

விண்ணிலிருந்து மழைத்துளி வீழ்ந்தால் தவிர, மற்றபடி தரையில் பச்சைப் புல்லின் தலையையுங் கூடக் காண முடியாது. 16

வானம் மின்னி யிடித்து மழை வழங்காதாயின், நீண்டு பரந்த கடலும் தன் வளங்குறையும். 17

மழை பெய்யாது வறண்டால், உலகில் தெய்வங்கட்கும் சிறப்பு விழாக்களும் நாள் வழிபாடுகளும் நடைபெறா. 18

இப்பெரிய உலகில் மழை பொழியாதாயின், கொடை, நோன்பு ஆகிய இரண்டுமே நிலைபெறா. 19

தண்ணீரின்றி உலகம் நடவாதெனில், தண்ணீரளிக்கும் மழையின்றி எவரிடத்தும் நல்லொழுக்கம் அமையாது. 20

## 3. நீத்தார் பெருமை

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு. 21

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. 22

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு. 23

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. 24

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. 25

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 26

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. 27

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 28

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது. 29

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான். 30

## 3. துறவியர் சிறப்பு

ஒழுக்க நெறிநின்று உலகப் பற்றைத் துறந்தவர்களின் பெருமையை மிக மிக மேலாக மதிப்பது உயர் நூற்களின் முடிபு. 21

துறவியரின் பெருமைக்கு அளவு கூறவேண்டின், உலகில் இதுவரை பிறந்து இறந்து போனவரின் தொகையை எண்ணிக் கூறுவது போன்றது அது. 22

இம்மை மறுமை என்னும் இரண்டு நிலைகளையும் ஆராய்ந்து இம்மையில் அறநெறி நிற்கும் துறவியரின் பெருமை உலகில் மிகச் சிறந்தது. 23

அறிவுப் படையால் ஐம்பொறியாங் களிற்றை அடக்கிக் காப்பவன், மேலானதாகிய வீடாகிய (முத்தி) நிலத்திற்கு ஒரு விதை போன்றவன். 24

ஐம்புலன்களை அடக்கிய துறவியின் வலிமைக்கு (துறவியரால் ஒடுக்கப்பட்ட) அகன்ற விண்ணரசனாம் இந்திரனே போதுமான சான்று. 25

செய்தற்கரிய உயர் செயல்கள் செய்பவரே பெரியர்; அத்தகு செயல்கள் செய்யவியலாதார் சிறியர். 26

உலகம், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்தின் திறத்தினை ஆராய்ந்தறிந்த மேலோனிடத்திலேயே அடங்கிக் கிடக்கும். 27

நிறை மொழியே கூறும் துறவியரின் சிறப்பை, உலகில் அவர்கள் அருளியுள்ள மறைமொழிகளே மெய்ப்பித்து விடும். 28

நற்பண்பு என்னும் மலைமேல் வைகும் துறவியர்க்குச் சினம் கணப் பொழுது தோன்றினாலும், அதைத் தடுத்துக் காத்தல் அரிது. 29

அறம் பேணும் துறவியர் எவ்வுயிரிடத்தும் குளிர்ந்த அருளே கொண்டொழுகலால் அவர்களே அந்தணர் எனப்படுபவர். 30

## 4. அறன் வலியுறுத்தல்

சிறப்புஈனும் செல்வமும்ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. 31

அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு. 32

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல். 33

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற. 34

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். 35

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. 36

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை. 37

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். 38

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. 39

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பால தோரும் பழி. 40

## 4. அறத்தின் வலிமையை வலியுறுத்தல்

சிறப்பையும் செல்வத்தையும் ஒருசேர நல்கும் அறத்தை ிட உயிர்க்கு நன்மையானது வேறு யாது? 31

ஒருவர்க்கு அறத்தினும் சிறந்த நன்மையும் இல்லை; ்வ்வறத்தை மறந்து நெகிழவிடுவதினும் பொல்லாத கடுதியும் இல்லை. 32

அறச் செயல்களை மிகவும் முடிந்த அளவுக்குச் செய்யக் டிய வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் விடாது செய்க. 33

மனத்திலே குற்றம் இல்லாதிருத்தல் ஒன்றேகூட முழு அறமாகும்; மனத்தில் களங்கமுடன் நல்லன போல் செய்யும் ிற செயல்கள் வெற்று ஆரவாரத் தன்மையனவே. 34

பொறாமை, ஆவல், சினம், கொடுஞ்சொல் ஆகிய நான்கு ிழுக்குகளுக்கும் இடமின்றிச் செய்வது அறம். 35

அப்புறம் பார்த்துக் கொள்வோம் என்றெண்ணாது ிப்போதே அறம் செய்யத் தொடங்கிவிடுக; உடல் அழியும் ்பாது உயிர்க்கு அழியாத் துணை அவ்வறமே. 36

பல்லக்கு சுமப்பவன், அதன்மேல் ஏறிச் செல்பவன் ஆகியோரிடையே அறத்தின் பயன் வேலை செய்வதை ேரில் கண்டு கொள்ளலாம்; சொல்ல வேண்டிய தில்லை. 37

ஒருவன் எந்நாளையும் வீணாள் ஆக்காது நல்லறம் புரியின், அவ்வறம் அவன் மீண்டும் பிறந்து வாழாதவாறு பிறப்பின் வழியை அடைக்கும் கல்லாகும். 38

அறம் செய்வதால் வரும் பயனே உண்மையின்பம், அல்லாத தீச் செயல்களால் வருவன இன்பத்திற்குப் புறம்பான துன்பங்களே; இகழன்றிப் புகழ் தரா. 39

ஒருவன் என்றும் செய்ய வேண்டியது அறச் செயலே. செய்யாது நீக்க வேண்டியது பழிச் செயல். 40

## 5. இல்வாழ்க்கை

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. 4

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 4

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. 4

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். 44

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 45

அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன். 46

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை. 47

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. 48

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று. 49

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். 50

# 5. இல்லற (குடும்ப) வாழ்க்கை

குடும்பத்தான் எனப்படுபவன், இயற்கையாக உரிமையுடைய பெற்றோர், மனைவி, மக்கள் ஆகிய மூவகையார்க்கும் நன்முறையில் நிற்கும் துணை. 41

துறவியர்க்கும் ஒன்றும் துய்க்கவியலாத எளியோர்க்கும் ஆதரவின்றி இறந்து போனவர்க்கும் இல்லறத்தான் தக்க துணை. 42

தென்புலத்தில் இருப்பதாகக் கூறப்படும் முன்னோர்கள், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்னும் ஐந்திறத்தாரையும் நெறிமுறைப்படிப் போற்றுதல் தலையாய கடன். 43

இல்வாழ்க்கை பழிக்கு அஞ்சிப் பலர்க்கும் பங்கிட்டு உண்ணுதலை உடையதாயின், அந் நல்வாழ்க்கையின் தொடர்ச்சி என்றும் அறுவதில்லை. 44

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாய்த் திகழ்ந்தால், அஃதே இல்வாழ்க்கையின் இலக்கணமும் தன்மையும் ஆகும். 45

அறவழியில் இல்லறம் நடத்தி வந்தால், அதனினும் பிறவழியில் சென்று பெறத்தக்க நன்மை வேறு யாது. 46

இயல்பான ஒழுக்க முறையுடன் குடும்ப வாழ்க்கை நடத்துபவன், வேறு நன்மை பெற முயல்பவர்களுக்குள் எல்லாம் முதன்மையானவன். 47

பிறரையும் நல் வழியில் நடக்கச் செய்து தானும் அறம் தவறாது நடத்தும் இல்வாழ்க்கை, தவஞ்செய்வார் வலிமையினும் மிக்க தவவலிமை உடையதாம். 48

அறநெறி என்று சொல்லப்படுவதே இல்வாழ்க்கை யொன்றுதான்! அவ்வாழ்க்கையும் மற்றொருவன் பழிக்க இடமில்லாததாயின் மிக நல்லது. 49

உலகில் வாழ வேண்டிய முறைப்படி இல்வாழ்க்கை நடத்துபவன் விண்ணில் இருக்கும் தெய்வங்களுள் ஒரு தெய்வம் போல் மதிக்கப்படுவான். 50

## 6. வாழ்க்கைத் துணைநலம்

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 51

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். 52

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. 53

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். 54

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. 55

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 56

சிறைகாக்குங் காப்புஎவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை. 57

பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புட்
புத்தேளிர் வாழும் உலகு. 58

புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. 59

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. 60

## 6. வாழ்க்கைத் துணையாம் மனைவியின் மாண்பு

மனைவாழ்க்கைக் கேற்ற நற்குண நற்செய்கை உடையவளாய், தன் கணவனது வருவாய் வளத்திற்கேற்பச் செலவு செய்பவளே வாழ்க்கைக்கு உண்மையான துணைவி. 51

மனைவியிடம் மனையறத்திற்கு வேண்டிய சிறப்புப் பண்புகள் இல்லையெனில், வேறு எச் சிறப்பு இருப்பினும் குடும்ப வாழ்க்கை பயனற்றதே. 52

இல்லாள் நற்பண்பு உடையவளானால் அவ்வில்லில் இல்லாத பொருள் என்ன? அவளிடம் நற்பண்பு இல்லையெனில் அங்கே உள்ள பொருள் என்ன? 53

கற்பென்னும் கலங்கா வன்மை இருந்தால், உலகில் பெண்ணை விட மேலான பொருள்கள் யாவை? 54

கடவுளையும் வணங்காதவளாய்த் தன் கணவனையே கடவுளாய் வணங்கிக் கொண்டே துயிலெழுபவள், பெய்யென்றால் மழை பெய்யும் அளவுக்குச் சிறந்தவளாவாள். 55

தன்னையும் வழுவாது காத்துத் தன் கணவனையும் அன்புடன் போற்றித் தகுதிமிக்க புகழை நிலைநிறுத்தித் தளர்ச்சி கொள்ளாதவளே சிறந்த குடும்பப் பெண். 56

பெண்டிரை வீட்டுச் சிறைக்குள் இட்டுக் காவல் காப்பதால் யாது பயன்? அவர்கள் கற்பு நிறைவால் தம்மைத் தாம் காத்துக் கொள்வதே தலையாய காவல். 57

மகளிர் தம் கணவரின் நல்லன்பையும் நன் மதிப்பையும் பெறும்படி நடந்து கொள்ளின், தேவர் வாழும் விண்ணுலகில் பெரும் பேறு பெறுவர். 58

புகழ்ச் செயல்புரியும் மனைவியைப் பெறாதவர்க்கு, தம்மை இகழும் எதிரிகளின் முன் ஆண் சிங்கம் போல் இறுமாந்து நடக்கும் பெருமித நடை இருக்க முடியாது. 59

மனைவியின் மாண்புடைமையே மனைக்கு மங்கலம் என்பார் பெரியோர்; மற்றபடி அம் மங்கலத்திற்கு நல்லணியாகத் திகழ்வது நன் மக்களைப் பெறுதலாம். 60

## 7. மக்கட் பேறு

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற. 61

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். 62

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். 63

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ். 64

மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. 65

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். 66

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல். 67

தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 68

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். 69

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல். 70

## 7. மக்களைப் பெறுதல்

ஒருவர் பெற வேண்டிய பேறுகளுள், அறிய வேண்டியவைகளை அறியவல்ல நன் மக்களைப் பெறுதலைத் தவிர வேறு பேறுகளை யாம் மதிப்பதில்லை. 61

பழிக்கு இடமில்லாத பண்புமிக்க பிள்ளைகளைப் பெற்றின், எதிராலே ஏழு பிறவிகளிலுங் கூடத் தீமைகள் அணுகா. 62

ஒருவர்க்குத் தம் பிள்ளைகளே தம் சொத்துக்கள் என்பர் பெரியோர்; பிள்ளைகளின் சொத்துக்களோ, தாம் தாம் செய்யும் செயலுக் கேற்பச் சேரும். 63

தம் பிள்ளைகள் சிறு கைகளால் துழவிப் பிசைந்தஉணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தினும் மிக இனிக்கும். 64

குழந்தைகளின் உடலைத் தொடுதல் பெற்றோர்களின் உடலுக்கு இன்பம்; அடுத்து அவர்தம் சொற்களைக் கேட்டலோ காதுக்கு இன்பமாம். 65

தம் பிள்ளைகளின் மழலை மொழியைக் கேட்டறியாதவர்களே, குழலிசை இனியதென்றும் யாழிசை இனியதென்றும் சொல்லிக் கிடப்பார்கள். 66

தகப்பன் தன் மகனுக்குச் செய்ய வேண்டிய நன்மையாவது, கற்றவர் கழகத்தில் அவன் கல்வியறிவில் முன்னணியில் திகழும்படியாகச் செய்தலாம். 67

தம் பிள்ளைகள் அறிவுத் திறமையால் செய்யும் ஆக்க வேலைகள், தம்மை விட, பெரிய உலகில் என்றும் வாழும் உயிர்கட்கெல்லாம் இனிய நன்மை பயக்கும். 68

தன் மைந்தனைப் பற்றிக் கல்வியறிவொழுக்கங்கள் நிறைந்தவன் எனப் பிறர் புகழக் கேட்ட தாய், அவனைப் பெற்ற போதினும் பெரிதும் மகிழ்வாள். 69

மகன் தன் தந்தைக்குச் செய்ய வேண்டிய பதிலுதவி, இவனைப் பெற்ற இவன் தந்தை என்ன நோன்பு நோற்றானோ என்று பிறரைச் சொல்லச் செய்யும் புகழுரையாகும். 70

## 8. அன்புடைமை

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். 71

அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 72

அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. 73

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 74

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு. 75

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 76

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 77

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. 78

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு. 79

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. 80

# 8. அன்புடையவரா யிருத்தல்

அன்பு வெளிப்படாதபடி அடைக்கும் தாழ்ப்பாள் உண்டா? அன்புடையவர் சிந்தும் சிறு கண்ணீரே அவரது உள்ளன்பை ஆரவாரப்படுத்தி விடும். 71

அன்பிலாதவர் எல்லாப் பொருளையும் தங்கட்கே உரியனவாக்கிக் கொள்வர்; அன்புடையோரரோ தம் எலும்பையும் பிறர்க்கு உரித்தாக்குவர். 72

அருமையான உயிர்க்கு எலும்புடைய உடம்போடு உள்ள தொடர்பு, பிற உயிர்களிடத்து அன்பு கொண்ட வாழ்விற்காக உண்டானது என்பர். 73

அன்பு எல்லாரிடத்தும் ஆர்வத்தை விளைவிக்கும்; அவ்வார்வம் நட்பு என்னும் அடைதற்கரிய சிறப்புப் பயனை அளிக்கும். 74

உலகில் மகிழ்வுடன் வாழ்பவர் அடைந்துள்ள சிறப்பு, பிறரிடம் அன்பு கொண்டு வாழ்ந்து வருவதால் பெற்றது என்பர் அறிஞர். 75

அறச் செயலுக்கு மட்டுமே அன்பு துணையானது என்று அறியாதார் கூறுவர்; ஒறுத்தல் போன்ற மறச் செயலுக்கும் அந்த அன்பே காரணம். 76

எலும்பில்லாத புழு பூச்சியை வெய்யில் பொசுக்குவது போல், அன்பில்லா உயிரை அறநெறி ஒறுக்கும். 77

உள்ளத்தில் அன்பில்லாத உயிர் வாழ்வதென்பது, வன்மையான பாறையில் பட்டமரத்தை நட்டுத் தழைக்கச் செய்யும் கதைதான்! 78

உடம்பின் உள்ளுறுப்பாகிய அன்பை யிழந்தவர்க்கு, கை கால் முதலிய வெளியுறுப்புக்கள் என்ன நன்மை விளைவிக்க முடியும்? 79

உடம்பிலே உயிர் நிலைத்துநிற்பது, அன்புவழியைப் பின்பற்றுவதைப் பொறுத்திருக்கிறது. அன்பிலார் உடம்போ எலும்பைத் தோல் மூடிய ஒரு கூடே. 80

## 9. விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. 81

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 82

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று. 83

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். 84

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். 85

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 86

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். 87

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். 88

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. 89

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 90

# 9. விருந்தினரைப் போற்றுதல்

இல்லத்தில் குடும்பத்துடன் தங்கிப் பொருள்களைக் காத்து வாழ்வதெல்லாம் வரும் விருந்தினரைப் பேணி உதவி செய்வதற்கேயாம். 81

சாவா மருந்து எனப்படும் அமிழ்தமே கிடைத்திருப் பினும், விருந்தினர் வெளியே யிருக்கத் தான் மட்டும் தனித்து உண்ணும் செயல் விரும்பத் தகாதது. 82

நாள்தோறும் வரும் விருந்தினரைப் போற்றுபவனது வாழ்வு ஏழ்மையால் வருந்திக் கெடுதல் இல்லை. 83

நல்ல விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற் பவனுடைய வீட்டில், திருமகள் உள்ளங் குளிர்ந்து தங்கியிருப்பாள். 84

விருந்தினர்க்கு முதலில் உணவிட்டு மிஞ்சியிருந்தால் தான் உண்பவன், விதை நெல்லையும் விருந்தினர்க்கு ஆக்காமல் நிலத்தில் விதைக்க விரும்புவானா? 85

முதலில் வந்த விருந்தினரைப் போற்றி மேலும் வரும் விருந்தினரை எதிர்நோக்கி நிற்பவன், விண்ணுலகத் தேவர்க்குச் சிறந்த விருந்தினனாவான். 86

விருந்து வேட்டலின் (உதவியதின்) பயன் இவ்வள வினது என்னும்படி அதற்கு ஓர் அளவில்லை; விருந்தினரின் தகுதியின் அளவைப் பொறுத்ததே அது. 87

விருந்தினரைப் போற்றி உதவுதல் என்பதையே அறியாத கருவிகள், (யாம் செல்வத்தை) வருந்திக் காப்பது போல் காத்துச் சிறு பற்றும் (பசையும்) இல்லாவாறு இழந்துவிட் டோம் என்று (பின்னொரு கால்) வருந்துவர். 88

ஒருவர்க்குச் செல்வம் உள்ளபோதும் வறுமை உள்ளதென்றால், அது விருந்தோம்பாத மடத்தனமாகும். அம்மடமை அறிவிலிகளிடம் இருக்கும். 89

அனிச்சம் பூ நெருங்கி மோந்தால்தான் வாடும்; விருந்தினரோ, தொலைவில் முகத்தைச் சுளித்துப் பார்த்த அளவிலேயே வாடிவிடுவர். 90

## 10. இனியவை கூறல்

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 91

அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொல னாகப் பெறின். 92

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். 93

துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 94

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றுப் பிற. 95

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின். 96

நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். 97

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும். 98

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. 99

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. 100

## 10. இனிய சொற்களைப் பேசுதல்

அன்பு கலந்து வஞ்சனை இல்லாதவனாகி, உண்மைப் பொருள் உணர்ந்த உயர்ந்தோர் வாயினின்றும் வெளிப்படும் சொற்கள் இன்சொற்கள் எனப்படும். 91

முகமலர்ந்து இன்சொல் பேசுபவனாக விளங்கின், உளங் குளிர்ந்து ஒன்று கொடுத்தலினும் சிறந்தது. 92

முகத்தால் மகிழ்ந்து இனிமையாகப் பார்த்து உள்ளத் தோடு தோய்ந்து வரும் இன்சொல் பேசுவதே அறம். 93

எல்லோரிடத்தும் இன்பமளிக்கும் இன்மொழியே பேசுபவர்க்கு, துன்புறுத்தும் துய்க்க முடியா ஏழ்மை இராது. 94

பணிவு உடையவனாகவும் இன்சொல் பேசுபவனாகவும் இருத்தலே ஒருவனுக்கு நல்லணி; மற்ற பிற அணிகள் அணிகளாகா. 95

நல்லனவற்றில் நாட்டங் கொண்டு இனிய சொற்களைப் பேசின், தீயவை அழிய அறம் வளரும். 96

கேட்பவர்க்குப் பயன் விளைத்து நற்பண்பினின்றும் விலகாது பேசும் இன்மொழி, பேசுபவர்க்கும் இன்பம் ஈந்து நன்மையும் அளிக்கும். 97

சிறுமைப்படுத்தும் கீழ்த் தன்மையிலிருந்து விலகிய இன்மொழி, பேசுபவர்க்கு மறுவுலகிலும் இவ்வுலகிலும் இன்பம் கொடுக்கும். 98

இன்சொல் இன்பம் தருதலை நேரில் காண்பவன், அதை விட்டு, துன்பம் தரும் வன்சொல் பேசுவது எதற்காகவோ? 99

இனிய சொற்கள் இருக்க அவற்றைப் பேசாமல் இனிமையற்ற கடுஞ் சொற்களைப் பேசுதல், இனிய பழம் இருக்கவும் காயை விரும்பிப் பறித்து உண்பது போலாம். 100

# 11. செய்ந்நன்றி அறிதல்

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது. 101

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 102

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது. 103

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். 104

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. 105

மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 106

எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. 107

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று. 108

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும். 109

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 110

## 11. ஒருவர் செய்த உதவியை மறவாது உணர்தல்

தாம் ஓர் உதவியும் செய்யாதிருக்கவும் தமக்குப் பிறர் செய்த உதவிக்குப் பதில் உதவியாக, மண்ணுலகையும் விண்ணுலகையும் கூட ஈடுகட்ட முடியாது. 101

நெருக்கடியான காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவால் சிறியதாயினும், பயனால் அது உலகினும் மிகப் பெரியதாம். 102

கைம்மாறு கருதாதவராய் ஒருவர் செய்த உதவியின் இனிமையை ஆராயின், அதன் நன்மை கடலினும் மிகப் பெரிதாம். 103

ஒருவர் தினையளவு சிறிய உதவி செய்தாலும், அதன் அரிய பயனை ஆராய்ந்தறிந்தவர்கள், அதனைப் பனையளவு பெரிய உதவியாகக் கொண்டு மதிப்பர். 104

உதவியின் அருமை, எவ்வளவு உதவி செய்தாரென்று உதவியின் அளவைப் பொறுத்ததன்று; உதவியைப் பெற்றுக் கொண்டவரின் பெருந்தன்மையின் அளவைப் பொறுத்ததே. 105

குற்றமற்ற தூயோரின் உறவை மறக்கவே கூடாது; துன்ப காலத்தில் ஆதரவளித்தவரின் தொடர்பை விடவே கூடாது. 106

தமக்குற்ற துன்பத்தைப் போக்கியவரின் நட்பை ஏறேழு பிறவியிலும் மறவாது நினைப்பர் நல்லோர். 107

ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்லதாகாது; அவர் செய்த தீமையையோ செய்த அந்நேரமே மறந்து விடுவது நல்லது. 108

ஒருவர் கொன்றது போன்ற கொடுந்துன்பம் செய்தாலும், அவரே முன்பு செய்த ஒரு நன்மையை இப்போது நினைத்தால் கொடுந்துன்பம் மறையும். 109

எந்த அறத்தை ஒழித்தவருக்கும் உய்யும் (தப்பும்) வழி இருக்கக் கூடும். ஒருவர் அளித்த உதவியை மறந்து கெடுத்தவனுக்கு மட்டும் உய்யும் வழி இல்லவே இல்லை. 110

## 12. நடுவுநிலைமை

தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின். 111

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து. 112

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 113

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும். 114

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 115

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின். 116

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 117

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 118

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். 119

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின். 120

# 12. நடுநிலை உடைமை

ஒவ்வொரு துறையிலும் முறையுடன் கூடி நடந்து கொண்டால்தான், நடுவு நிலைமை என அழைக்கப்படும் ஒரு பண்பு நல்லதெனப் பெயர் வாங்கும். 111

யார்மாட்டும் நடுநிலை உடையவனது செல்வம் அழியாமல் அவன் வழித் தோன்றல்கட்கும் காப்பளிக்கும். 112

நடுநிலை தவறிப் பெறத்தக்க செல்வம் நன்மையே தருமாயினும் (தராது) அச் செல்வத்தை அப்போதே கைவிடுக. 113

நேர்மையாளர், நேர்மையில்லாதவர் என்பது, அவரவர் தமக்குப் பின் விட்டுச் சென்றிருப்பவைகளால் அறியப்படும். 114

அழிவும் ஆக்கமும் வாழ்க்கையில் வாராதவையல்ல; எனவே உள்ளத்தில் கோணா உறுதி கொள்ளலே உயர்ந்தோர்க்கு அழகு. 115

நெஞ்சில் நேர்மையைத் துறந்து தீயன செய்தால் நான் கெட்டு விடுவேன் என்பதை ஒருவன் அறிவானாக. 116

நடுநிலையுடன் நன்னெறியில் ஒழுகுபவனது தாழ்ந்த ஏழ்மையை, உண்மையில் ஒரு கேடாக உலகம் எண்ணாது. 117

தன்னையும் சமப்படுத்திப் பொருளின் அளவையும் ஒழுங்காக வரையறுக்கும் துலாக்கோல் போல் விளங்கி ஒருவர்க்கு ஒருவிதமாய்ச் சாயாதிருத்தலே சான்றோர்க் கழகு. 118

ஒருசேர உள்ளத்திலும் கோணல் இல்லாதிருந்தால்தான், சொல்லில் கோணல் இல்லாமல் பேசுவது நடுவு நிலைமையாகும். 119

பிறர் பொருளையும் தம் பொருள்போல் போற்றி ஒழுகினால்தான் வாணிகம் நடத்துபவர்க்கு அவ்வாணிகம் செழிக்கும். 120

## 13. அடக்கமுடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 121

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதினினூஉங் கில்லை உயிர்க்கு. 122

செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். 123

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. 124

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 125

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. 126

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 127

ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும். 128

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு. 129

கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. 130

# 13. அடக்கம் உடைமை

அடக்கம் தேவருள் ஒருவனாக்கி உயர்த்தும்; அடக்கம் இல்லாமை கொடிய இருளனைய தீ நெறியில் திருப்பி விடும். 121

அடக்கத்தை உயர் பொருளாக மதித்துக் காக்க வேண்டும்; அவ்வடக்கத்தினும் சிறந்த ஆக்கப் பொருள் உயிர்க்கு வேறில்லை. 122

அடங்குதலே அறிவுடைமை என்பதறிந்து நன்முறையில் அடங்கி ஒழுகின், அவ்வடக்கத்தின் திண்மை அனைவராலும் அறியப்பட்டுச் சிறப்பளிக்கும். 123

உறுதியில் தளராது அடங்கியொழுகுபவனது தோற்றப் பொலிவு உயர்ந்த மலையினும் மிகப் பெரிதாம். 124

பணிவுடைமை பொதுவாக மக்கள் எல்லார்க்குமே நல்லதாம்; எல்லாருள்ளும் சிறப்பாகச் செல்வர்க்கே செல்வத் தகுதியை உரித்தாக்க வல்லது. 125

உறுப்புக்களை உள்ளடக்கும் ஆமை போல் ஐம்பொறி இன்பங்களையும் ஒரு பிறவியில் அடக்கினாலேயே அவ்வடக்கம் ஏழு பிறவிகளிலும் காப்பளிக்கும். 126

எவற்றைக் காக்காதுவிடினும் நாக்கையாவது அடக்கிக் காப்பாராக; அங்ஙனம் காக்காராயின் சொற் குற்றத்தில் அகப்பட்டுத் துன்பப்படுவர். 127

பேசும்போது சொல்லடக்கம் இன்மையால் ஒரு சொல்லாலாயினும் தீய சொற் பொருளாம் தீப்பயன் உண்டானால், முழுப் பேச்சுமே கெட்டதாகி விடும். 128

நெருப்பால் சுட்ட காயம் உள்ளே ஆறிவிடும்; ஆனால் நாக்கு சொல்லால் வைதுசுட்ட மனப்புண்ணோ என்றுமே ஆறவே ஆறாது. 129

சினத்தைத் தடுத்துக் காத்து நன்னூற்களைக் கற்று அடங்கி யொழுக வல்லவனது நற்காலத்தை அறக் கடவுள் உரிய வழியில் புகுந்து உற்று நோக்கி யிருக்கும். 130

## 14. ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 131

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை. 132

ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 133

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். 134

அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. 135

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 136

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. 137

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். 138

ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். 139

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். 140

# 14. நல்லொழுக்கம் உடைமை

ஒழுக்கமே உயர் சிறப்பு அளிப்பதால், அவ்வொழுக் த்தை உயிரினும் உயர்ந்ததாகப் போற்ற வேண்டும். 131

ஒழுக்கத்தைப் பாடுபட்டுப் பேணிக் காப்பீராக! எப்படி ஆய்ந்து போற்றித் தேர்ந்து நோக்கினும் அவ்வொழுக்கமே உயிர்க்கு நற்றுணை. 132

ஒழுக்கம் உடைமையே உயர்குடிப் பிறப்பின் இயல்பாகும். இழுக்கமோ (ஒழுக்கம் இன்மையோ) இழிகுடிப் பிறப்பின் இயல்பே யாகும். 133

மறையை (வேதத்தை) மறந்தாலும் மறுபடியும் படித்துக் கொள்ளலாம்; ஆனால் மறையோதும் பார்ப்பனனது குடிப்பிறப்பு ஒழுக்கம் குன்றினால் கெட்டு விடும். 134

பொறாமை யுடையவனிடத்தில் வளர்ச்சி இல்லாதது போல் ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்வு இராது. 135

திண்ணிய அறிவாளிகள் ஒழுக்கக் கேட்டால் குற்றம் விளைவதறிந்து நல்லொழுக்கத்தினின்றும் தளராது நிற்பர். 136

எவரும் ஒழுக்கத்தால் உயர்புகழ் அடைவர்; இழுக்கத்தாலோ அடையக் கூடாத பழியை அடைவர். 137

நல்லொழுக்கம் நன்மை விளைவதற்கு இட்ட விதையாகும்; தீ யொழுக்கமோ என்றென்றும் துன்பமே விளைக்கும். 138

தீய சொற்களைத் தவறியும் தம் வாயாற் பேசுதல் நல்லொழுக்கம் உடையோர்க்கு இயலாது. 139

பல கலைகள் கற்றிருப்பினும் உலகத்தோடு ஒட்டி நடத்தலைக் கல்லாதவர்கள் அறிவில்லாதவர்களே. 140

# 15. பிறனில் விழையாமை

பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல். 141

அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல். 142

விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்துஒழுகு வார். 143

எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல். 144

எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி, 145

பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். 146

அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். 147

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. 148

நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்
பிறற்குரியாள் தோள்தோயா தார். 149

அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. 150

# 15. பிறன் மனைவியை விரும்பாமை

உலகில் அறம் இன்னது - இப்பொருள் இத்தகையது என்று ஆராய்ந்து கண்டவரிடம், பிறன் உடைமைப் பொருளாயுள்ள ஒருத்தியைக் காதலித்துத் திரியும் மடமை இராது. 141

அறத்திற்குப் புறம்பான கெடுவழியில் நின்றவர் எல்லாருக்குள்ளும், பிறன் மனைவியை எதிர்பார்த்து அவன் கொல்லைப் புறத்தில் நின்றவரினும் மடையர் யாரும் இல்லை. 142

நம்பியவரின் மனைவியிடம் தீது செய்து நடப்பவர் செத்தவரினும் வேறாக மாட்டார். 143

ஒருவர் எவ்வளவு சிறப்பு உடையவரானாலும், தம்மைத் தினையளவு ஐயுறாதவனுடைய மனைவியிடம் செல்லுதல் அவர்க்கு என்ன விளைக்குமோ? 144

எளிதாக எண்ணிப் பிறன் மனைவியிடம் முறைதவறி நடப்பவன், என்றும் அழியாது நிலைக்கும் பழியடைவான். 145

பிறன் மனைவியிடம் முறை தவறி நடப்பவனை விட்டுப் பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கும் விலகா. 146

அறப் பண்போடு இல்வாழ்பவன் எனப்படுபவன். பிறன் மனைவியின் பெண்மையை விரும்பாதவனே. 147

பிறன் மனைவியை ஏறெடுத்தும் பாராத பெரிய ஆண்மை உயர்ந்தோர்க்கு நல்லறம் மட்டுமன்று, நிறைந்த நல்லொழுக்கமும் ஆகும். 148

மிகுதியான நீர் (கடல்) சூழ்ந்த உலகில் நன்மை பெறற்கு உரியவர் யார் எனில், பிறனுக்கு உரியவளின் மார்பைத் தழுவாதவரே. 149

அறத்தைக் கடைப்பிடிக்காது, தீமைகள் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமை நல்லது. 150

## 16. பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 151

பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று. 152

இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 153

நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். 154

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 155

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 156

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று. 157

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல். 158

துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர். 159

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின். 160

## 16. பொறுமை உடைமை

தன்னைத் தோண்டுபவரையும் தாங்கிக் காக்கும் நிலத்தைப் போல், தங்களை இகழ்ந்து பேசுபவரையும் பொறுத்துக் கொள்ளுதல் தலையாய பண்பு. 151

பிறர் முறை கடந்து செய்யும் தீமையை எப்போதும் பொறுத்துக் கொள்க; அத்தீமையை அப்போதே மறந்து விடுதல் பொறுத்தலினும் நல்லது. 152

ஏழ்மைக்குள் கொடிய ஏழ்மையானது விருந்தினரை விலக்குதலாம். வலிமைக்குள் மிக்க வலிமையாவது அறிவிலிகளைப் பொறுத்து மன்னித்தலாம். 153

முழு நிறைவு நீங்கா திருக்க வேண்டின், பொறுமையைப் போற்றிக் கடைப்பிடிக்க வேண்டும். 154

தீமை செய்தவரைப் பதிலுக்கு வருத்தியவரை உலகினர் ஒரு பொருளாகப் போற்றார்; வருந்தாது பொறுத்தவரையோ, பொன்போல் போற்றி உள்ளத்தில் பதித்துக் கொள்வர். 155

பொறுக்காது ஒறுப்பவருக்கு அன்றொரு நாளைக்குத்தான் மகிழ்ச்சி; பொறுத்தவர்க்கோ உலகம் அழியும்வரையும் புகழ் நிலைக்கும். 156

முறையற்ற பொல்லாங்குகளைத் தனக்குப் பிறர் செய்தாலும், அதற்காக அவர்க்கு வரும் துன்பத்திற்கு வருந்தி, தான் அறமல்லாத தீமைகளைப் பதிலுக்குச் செய்யாமையே நல்லது. 157

இறுமாப்பால் மீறிய தீமைகள் செய்தவரைத் தாம் தமது பொறுமைச் சிறப்பால் வென்று விடுக. 158

அளவு கடந்து நடப்பவரின் வாயிலிருந்து வரும் இனிமையற்ற கொடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் துறவிகளினும் தூயவர் ஆவர். 159

பிறர் பேசும் கடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்பவருக்கு அடுத்தபடியாகவே, உண்ணாமல் நோற்கும் நோன்பிகள் பெரியராவர். 160

## 17. அழுக்காறாமை

ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு. 161

விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின். 162

அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணாது அழுக்கறுப் பான். 163

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து. 164

அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது. 165

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 166

அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். 167

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 168

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 169

அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதுஇல்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல். 170

# 17. பொறாமை கொள்ளாமை

தன் நெஞ்சில் பொறாமையில்லாத தன்மையை ஒருவன் ஒழுக்க நெறியாகக் கொள்வானாக. 161

எவரிடத்தும் பொறாமை கொள்ளாதிருக்கப் பெற்றால், அடைய வேண்டிய சிறந்த பேறுகளுக்குள் அப்பண்பை ஒத்த பேறு வேறில்லை. 162

தனக்காக அறத்தையும் ஆக்கத்தையும் விரும்பாதவன் என்று சொல்லப்படுபவனே, பிறன் வளர்ச்சியைக் கண்டு போற்றாது பொறாமைகொள்வான். 163

தவறான வழியில் துன்பம் உண்டாதலை அறிந்திருத்தலால், பெரியோர் பொறாமையால் அறமல்லாத தீமைகளைச் செய்யார். 164

பொறாமை யுடையவர்க்குப் பகைவர் கேடு செய்யத் தவறினாலும் தான் கேடு தருவதாகிய அப்பொறாமை யொன்றே பகையாகப் போதும். 165

ஒருவர் மற்றொருவருக்கு உதவுவதைக் கண்டு பொறாமைப்படுபவனுடைய சுற்றத்தாரும் உடையும் உணவும் இல்லாமல் கெட்டழிவர். 166

திருமகள் பொறாமைக்காரனைக் கண்டு புழுங்கி அவனுக்குத் தன் தமக்கையாகிய மூதேவியைக் காட்டி விடுவாள். 167

பொறாமை என்னும் ஒரு கொடிய பாவி, பொறாமை கொண்டவனது செல்வத்தை யழித்து அவனைத் தீய வழியில் திருப்பி விடும். 168

பொறாமை கொண்ட நெஞ்சத்தானது வளர்ச்சியும், பொறாமையற்ற நேர்மையாளனது கேடும் இயற்கைக்கு மாறாதலின் ஆராயப்பட வேண்டியவை. 169

பொறாமையுற்று அகலமாய் வளர்ந்தாரும் இல்லை; அப்பொறாமை இல்லாதவரானதால் வளர்ச்சியினின்றும் நீங்கினவரும் இல்லை. 170

## 18. வெஃகாமை

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 171

படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். 172

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். 173

இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். 174

அஃகி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். 175

அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். 176

வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். 177

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். 178

அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந் தாங்கே திரு. 179

இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னுஞ் செருக்கு. 180

# 18. பிறர் பொருளைக் கவர விரும்பாமை

நடுநிலை தவறிப் பிறரது நல்ல பொருளை ஒருவன் கவர விரும்பினால், அவனது குடியை அழித்துக் குற்றச்சாட்டையும் அப்போதே கொடுக்கும். 171

நடுநிலை தவறுதலுக்கு நாணியஞ்சுபவர், திருட்டு வழியில் வரும் பயனை விரும்பிப் பழிச் செயல்கள் செய்யார். 172

மற்ற பேரின்பத்தை விரும்புபவர் தீய சிற்றின்பத்தை விரும்பி அறமல்லாச் செயல்கள் புரியார். 173

ஐம்புலங்களை வென்ற சிறுமையற்ற பேரறிவாளர் 'யாம் ஒன்றும் உடைத்தாயில்லோம்' என்று கருதிப் பிறர் பொருளை விரும்புதல் செய்யார். 174

யாரிடத்தும் உள்ள பொருளை விரும்பி வீண் செயல்கள் புரிந்தால், நுணுகி விரிந்த அறிவினால் என்ன பயனாம்? 175

அருளை விரும்பி நன்னெறியில் ஒழுகத் தலைப்பட்டவன், இடையே பிறர் பொருளை விரும்பிப் பொல்லாதன புரிய எண்ணினால் கெட்டு விடுவான். 176

பிறர் பொருளைக் கவர்வதால் வரும் செல்வத்தை விரும்பற்க; அச்செல்வம் விளைவளிக்கும்போது பயன் சிறத்தல் இயலாதாம். 177

செல்வத்திற்குச் சுருக்கம் இன்மை என்பது எது வெனில், பிறன் கைப்பொருளை விரும்பாதிருக்க வேண்டுவதே. 178

அறம் உணர்ந்து பிறர் பொருளை விரும்பாத அறிஞரை அடையும் வகையறிந்து அப்போதே திருமகள் சென்றடைவாள். 179

ஆராயாது பிறர் பொருளை விரும்பின் அவ்விருப்பம் அழிவைத் தரும். பிறர் பொருளை விரும்பாமை என்னும் பெருமிதம் வாழ்க்கைக்கு வெற்றியளிக்கும். 180

## 19. புறங்கூறாமை

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. 181

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை. 182

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும். 183

கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்நின்று பின்நோக்காச் சொல். 184

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். 185

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும். 186

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 187

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு. 188

அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. 189

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. 190

# 19. புறம் பேசாதிருத்தல்

ஒருவன் அறம் பேசானாய் அறம் அல்லாத தீமைகளைச் செய்தாலும், பிறரைப் பற்றிப் புறம் பேசமாட்டான் என்ற பெயரெடுத்தல் நல்லது. 181

அறத்தை ஒழித்துத் தீமைகள் புரிவதை விட, ஒருவரைப் பின்னாலே இழித்துப் பேசி நேரிலே பொய்யாகச் சிரித்து நடிப்பது கொடிது. 182

புறத்திலே பழித்துப் பேசி நேரிலே பொய்யாகப் புகழ்ந்து நடித்து உயிர் வாழ்தலை விட இறந்தொழிதல் அறநூல் கூறுகின்ற ஆக்கத்தைக் கொடுக்கும். 183

கண்ணெதிரில் நின்று கண்ணிரக்கம் இன்றிக் கடுஞ்சொல் சொல்லினும், முன்னால் இல்லாமல் பின்னால் விளைவதறியாத சொல் மட்டும் சொல்லலாகாது. 184

ஒருவன் அறம் பேசும் உள்ளத்தான் அல்லன் என்பது அவன் புறம் பேசும் சிறுமைத் தன்மையால் அறிந்து கொள்ளப் படும். 185

வேறொருவனைப் புறங் கூறிப் பழிப்பவன், தன் பழிகளுக்குள்ளும் கொடுந்தன்மை உடையவை அறியப்பட்டுப் பிறரால் பழிக்கப்படுவான். 186

மகிழப் பேசி நட்பு வளர்த்தலை அறியாதவர், விலகும்படிப் புறந்தூற்றி நண்பரைப் பிரித்து விடுவர். 187

நெருங்கிப் பழகுபவரின் குற்றத்தையும் புறத்தே தூற்றிப் பேசும் தன்மையுடையவர், அயலார் செய்தியில் யாது செய்வரோ? 188

இல்லாத இடம் பார்த்து இழிமொழி பேசுபவனது உடல் சுமையை, இஃதும் ஓர் அறம் என்றெண்ணி உலகம் சுமக்கிறது போலும்! 189

அயலார் பிழையை ஆய்வது போல தமது பிழையையும் ஆராய்ந்து பார்த்தால், பின்னர் நிலை பெற்ற உயிர்க்குத் தீமையென ஒன்றுளதோ? 190

## 20. பயனில சொல்லாமை

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 191

பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது. 192

நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை. 193

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து. 194

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். 195

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல். 196

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. 197

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். 198

பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர். 199

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 200

# 20. பயனற்றவற்றைப் பேசாமை

பலரும் வெறுக்குமாறு பயனற்ற மொழிகளைப் பேசுபவன் எல்லாராலும் இகழப்படுவான். 191

பயனற்ற பேச்சுக்களைப் பலர்முன் பேசுவது, இனிமையற்ற செயல்களை நண்பரிடையே செய்தலினும் தீயதாம். 192

ஒருவன் பயனில்லாத செய்திகளைப் பற்றிப் பலபட விரித்துப் பேசும் பேச்சு, அவன் நலமற்றவன் என்பதை எடுத்துக் காட்டும். 193

பலரிடையே பயன்சேராத பண்பில்லாத சொற்களைச் சொல்லுதல் இன்பமும் இல்லாமல் நன்மையினின்றும் நீங்கச் செய்யும். 194

நற்பண்புடையோர் பயனற்றவற்றைப் பேசின், அவருடைய சீரும் சிறப்பும் ஒரு சேர நீங்கும். 195

பயனில்லாத சொற்களைப் பெரிதுபடுத்திப் பேசுபவனை மாந்தன் என்று சொல்லற்க; மாந்தருக்குள் ஒரு பதர் என்று சொல்லுக. 196

பெரியோர் நயப்பற்ற பேச்சுக்களைப் பேசினாலும் பேசுக; ஆனால் பயனற்ற பேச்சுக்களை மட்டும் பேசாதிருத்தல் நன்று. 197

அடைதற்கரிய நற்பயனை ஆராய்ந்து நாடும் நல்லறிஞர், பெரிய பயனளிக்காத பேச்சுக்களைப் பேசார். 198

அறியாமை மயக்கத்தினின்றும் நீங்கிய குற்றமற்ற அறிவு பெற்றவர்கள், பயனற்ற மொழிகளை மறந்தும் மொழியார். 199

சொல்வதானால் பயன்தரும் சொற்களையே சொல்லுவீராக, சொற்களுக்குள் பயன்தராச் சொற்களைச் சொல்லவே வேண்டா. 200

# 21. தீவினையச்சம்

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு. 201

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 202

அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல். 203

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு. 204

இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 205

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான். 206

எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும். 207

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று. 208

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். 209

அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின். 210

# 21. தீமை செய்ய அஞ்சுதல்

தீச்செயல் புரிதலாகிய அகந்தைக்குத் தீச் செயலே செய்து பழகியவர் அஞ்ச மாட்டார்; பெரியோரே அஞ்சுவர். 201

தீச் செயல்கள் தீமையே விளைத்தலால், அத்தீச் செயல்கள் நெருப்பினும் கொடிதென அஞ்சப்பட வேண்டியதாம். 202

தம்மைத் துன்புறுத்துவோர்க்கும் தீமை செய்யாதிருத்தல், அறிவுடைய செயல்களுக்குள்ளெல்லாம் சிறந்தது என்பர் அறிஞர். 203

மறந்தும் பிறனொருவனுக்குக் கேடு எண்ணலாகாது. எண்ணினால், எண்ணியவனுக்கு அறக்கடவுள் கேடு எண்ணும். 204

'யான் ஒன்றும் இல்லாதவன்' என்று கருதித் தீவினை செய்யலாகாது; செய்தால் மறுபடியும் மீண்டும் இல்லாதவனாகி விடுவான். 205

துன்பம் தரும் தீச் செயல்கள் தன்னை வருத்துதலை விரும்பாதவன், தானும் பிறரிடம் தீவினைகள் புரியாதிருப்பானாக. 206

வேறு எப்பகையைப் பெற்றவரும் தப்பித்துக் கொள்வர்; தீவினை என்னும் பகை மட்டும் நீங்காது பின் தொடர்ந்து வந்து வருத்தும். 207

தீவினை செய்தவர் அழிதல், தன் நிழல் தன்னை விட்டு நீங்காமல் தன் காலடியிலேயே தங்கியிருத்தல் போல் தவறாது. 208

ஒருவன் உண்மையில் தன்னைத் தான் விரும்புவானாயின், தீவினை வகைக்குள் எவ்வளவு சிறியதொரு தீச் செயலையும் நெருங்காதிருப்பானாக. 209

ஒருவன் தீவினைப் பக்கமே ஓடித் தீமை புரியாதிருப்பானாயின், அவன் கேடு அற்றவன் என்பதைத் தெரிந்து கொள்க. 210

## 22. ஒப்புர வறிதல்

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு. 211

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. 212

புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற. 213

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 214

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 215

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். 216

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். 217

இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர். 218

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு. 219

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 220

## 22. உலகொடு ஒத்து உதவி வாழ்தலை அறிதல்

நீர் உதவும் மழைக்கு உலகம் என்ன பதிலுதவி செய்கிறது? எனவே, தம் கடமையெனப் பிறர்க்குச் செய்யும் உதவிக்குப் பதிலுதவி வேண்டியதில்லை. 211

ஒருவன் முயற்சி செய்து ஈட்டிய பொருளெல்லாம் தகுந்தவர்க்கு உதவி செய்தற் பொருட்டேயாம். 212

பிறர்க்கு உதவி ஒத்து வாழ்வதினும் சிறந்த பேறுகளைத் தேவர் உலகத்திலும் சரி - இவ்வுலகத்திலும் சரி, பெற முடியாது. 213

ஒப்புரவு அறிந்தவனே உயிர் வாழ்பவனாகக் கருதப்படுவான்; அங்ஙனம் வாழாத மற்றவன் இறந்தவருள் ஒருவனாக வைத்தே எண்ணப்படுவான். 214

உலகம் விரும்பும் பெரிய அறிவாளி செல்வம் பெற்றிருப்பது, ஊரார் நீருண்ணும் குளம் நீர் நிரம்பி யிருப்பது போன்றது. 215

ஒப்புரவாம் நலம் உடையானிடத்துச் செல்வம் உண்டானால், அது, பயன்மிக்க மரம் ஊர்க்குள்ளே பழம் பழுத்திருப்பது போன்றதாம். 216

பெருந்தன்மை உடையவனிடம் செல்வம் சேரின், அது, தன் உறுப்புக்கள் பலவும் மருந்தாகி ஒன்றும் வீணாகாமல் பயனளிக்கும் மரம் போன்றதாம். 217

உதவும் கடமையை உணர்ந்த நல்லறிவாளர்கள் உதவ வாய்ப்பில்லாத போதும் உதவுவதற்குச் சோர மாட்டார்கள். 218

ஒப்புரவாம் நலம் உடையவனாயிருந்தவன் ஏழையாகுதல் என்பது (என்ன தெரியுமா) தான் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய முடியாமையால் மனம் அமைதி பெறா நிலைதான். 219

ஒப்புரவு செய்வதால் கேடு நேரும் என்றால், அக்கேடு, ஒருவன் தன்னை விற்றாயினும் பெற்றுக் கொள்ளத் தக்கதாம். 220

## 23. ஈகை

வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 221

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. 222

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள. 223

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு. 224

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். 225

ஆற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 226

பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது. 227

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வனக ணவர். 228

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல். 229

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை. 230

## 23. ஈதல்

ஏழைக்கு ஒரு பொருள் ஈதலே ஈகை; மற்றவர்க்கு ஈவதெல்லாம் பதிலுக்குப் பதில் எதிர்பார்த்துக் கொடுக்கும் இரவல் தன்மையுடையது. 221

வாங்குதல் நன்னெறி என்று எவரேனும் சொன்னாலும், அது தீயது; கொடுப்பதால் மேலுலகம் கிடைக்காது என்றாலும் கொடுத்தலே நல்லது. 222

என்னிடம் இல்லை என்னும் துன்ப மொழியைக் கூறி மறுக்காது, கொடுக்கும் பண்பு, நற்குடியில் பிறந்தவனிடத்தே இருக்கும். 223

கொடுக்கும்படி (யாசித்தவரின்) கேட்டவரின் நிறைவான இனிய முகத்தைக் காணும் வரைக்கும் கேட்கப்பட்டவரின் நிலை துன்பமானது. 224

எதையும் தாங்கும் வலிமை உடையவர்க்கு உண்மை யான வலிமை பசியைத் தாங்கிக் கொள்வதுதான். அவ்வலிமையும் பிறர் பசியை உணவு தந்து போக்குபவர்க்குப் பிற்பட்டதே. 225

வசதியற்றவரின் கடும் பசியைப் போக்க வேண்டும்; அதுதான். பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளை வைத்துக் காக்கும் வழிமுறையாகும். 226

பலர்க்கும் பங்கிட்டுத் தந்து உண்ணப் பழகியவனைப் பசி என்னும் கெட்ட நோய் நெருங்குவதில்லை. 227

தமது உடைமைப் பொருளைப் பிறர்க்கு ஈயாது வைத்திருந்து பின்பு இழந்து விடும் கொடியவர், பிறர்க்கு உதவி மகிழும் உவகையை அறியாரோ? 228

தம் வயிற்றைக் குறைவின்றி நிரப்புவதற்காகத் தாம் மட்டும் தனிமையராய் உண்ணுதல், பிறரிடம் சென்று இரத்தலினும் இழிந்தது. 229

சாவை விடத் துன்பம் தருவது வேறொன்றும் இல்லை; அச்சாவுங் கூட ஒருவர்க்கு ஒன்று உதவ முடியாதபோது இனியதே. 230

## 24. புகழ்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. 231

உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ். 232

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல். 233

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு. 234

நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது. 235

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. 236

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன். 237

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். 238

வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். 239

வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 240

# 24. புகழ்

ஏழைகட்குக் கொடுப்பீராக; கொடுத்துப் புகழ் பெற வாழ்வீராக; அப்புகழைத் தவிர உயிருக்கு உறுபயன் வேறில்லை. 231

(உலகில் கும்பலாகக் கூடிப்) பேசுபவர் பேசுபவை யெல்லாம், இரந்தவர்க்கு ஒன்று ஈந்தவரிடம் நிலைத்து நிற்கும் புகழைப் பற்றித்தான். 232

எதுவும் நிலைத்துத் தங்காத உலகத்திலே, சிறந்த புகழைத் தவிர, அழியாது நிலைத்து நிற்கக் கூடியது வேறொன்று மில்லை. 233

ஒருவர் நிலவுலகில் நெடிது நிற்கும் புகழ்ச் செயல் புரிந்தால், அவரைத் தவிரப் புலவர்களைக் கூட விண்ணுலகம் போற்றி மதிக்காது. 234

புகழ் என்னும் ஆக்கத்தை அளிப்பதான பொருள் இழப்பும், செத்தாலும் புகழுடம்புடன் வாழ்வதாகவே கருதக் கூடியதான சாவும் திறனுடையோர்க்கன்றி மற்றவர்க்குக் கிடைப்பதரிது. 235

பிறந்தால் புகழ்ச் செயல் புரிபவர்களாகப் பிறக்க வேண்டும்; அது முடியாதவர்கள், பிறந்ததை விடப் பிறவாதிருந்திருந்தாலே நல்லது. 236

புகழ் பெற வாழத் தெரியாதவர்கள் அதற்காகத் தம்மைத் தாமே நொந்து கொள்ளாமல் தம்மை இகழ்பவரை நோவது எதற்காக? 237

தனக்குப் பிற்காலம் எஞ்சியிருக்கும் புகழ் என்னும் எச்சத்தை ஒரே ஒருவன் பெறாவிட்டாலும், உலகத்தார் அனைவர்க்குமே இகழ்ச்சி என்பர் அறிஞர். 238

புகழ்ச் செயல் புரியாதவரின் உடலைச் சுமந்த மண் பழியற்ற வளமான விளைவு இன்றிக் குன்றி விடும். 239

இகழ் நீங்க வாழ்பவரே உண்மையில் உயிர் வாழ்பவர்; புகழ் போக வாழ்பவரே உயிர் வாழாதவர். 240

## 25. அருளுடைமை

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள. 241

நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை. 242

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல். 243

மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. 244

அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. 245

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். 246

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. 247

பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது. 248

தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம். 249

வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து. 250

## 25. உயிர்களிடம் பேரிரக்கம் உடைமை

அருளுடைமையாகிய செல்வம் செல்வங்களுள் சிறந்ததொரு செல்வமாகும். பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்துந்தான் உள்ளன. 241

நன்முறையில் ஆராய்ந்து அருளைக் கையாள்வீராக. பல வழிகளில் ஆராய்ந்து நோக்கினும் அவ்வருளே உயிர்க்குத் துணை. 242

இருள் பொருந்திய துன்ப (நரக) உலகை அடைதல், அருள் பொருந்திய உள்ளம் உடையார்க்கு இல்லை. 243

உலகில் உள்ள பிற உயிர்களைப் பேணி அருள் செலுத்துபவனுக்குத் தன் உயிர் அஞ்சும்படியான கெடுவினை நேராது என்பர். 244

அருளுடையவர்க்குத் துன்பம் நேராது; காற்று வீசும் வளமான இப்பெரிய உலக நிகழ்ச்சிகள் பல அதற்குச் சான்று. 245

பொருள் இன்றி வாழ்க்கையில் நெகிழ்ந்தவர் என்று சொல்லப்படுபவர், அருள் இன்றித் தீமைகளைச் செய்து ஒழுகியவராவர். 246

பொருள் இல்லாதவர்க்கு இந்த உலக இன்பம் இல்லாததுபோல, அருள் இல்லாதவர்க்கு அந்த வீட்டுலக (முக்தி) இன்பம் இல்லை. 247

பொருள் அற்றவர் இன்னொரு காலம் செல்வம் பூத்துப் பொலிவர்; அருள் அற்றவரோ அற்றவர் அற்றவரே; மற்று ஒரு காலமும் அவர் வளர்தல் என்பது இல்லை. 248

உண்மையில் அருள் இல்லாதவர் செய்யும் போலி வெளிப்பகட்டு அறம், அறிவுத் தெளிவு இல்லாதவன் உண்மைப் பொருள் உணர்ந்த தன்மை போன்றது. 249

ஒருவன் தன்னினும் மெலிந்தவரைத் தாக்கச் செல்லும்போது, தன்னினும் வலியவர்முன் தன் நிலை எத்தகையது என்று எண்ணிப் பார்ப்பானாக. 250

## 26. புலால் மறுத்தல்

தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். 251

பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு. 252

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம். 253

அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
பொருளல்லது அவ்வூன் தினல். 254

உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு. 255

தினற்பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல். 256

உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ணது உணர்வார்ப் பெறின். 257

செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன். 258

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. 259

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். 260

## 26. ஊன் உண்ணாது மறுத்தல்

தன் உடம்பு பருப்பதற்காகத் தான் பிறிதோர் உயிரின் உடம்பைத் தின்னுபவன் எவ்வாறு அருளைக் கையாள முடியும்? 251

பொருளை ஆளுதல் அதனை வைத்துக் காப்பாற்றாதவர்க்கு இல்லை; அருளை ஆளுதல் ஊன் உண்ணுபவர்க்கு அங்கே இல்லையாம். 252

ஓர் உயிரின் ஊனை உண்டு சுவை கண்டாரின் உள்ளம், கொலைக் கருவியைக் கையில் கொண்டவரின் உள்ளம் போல் நல்லறத்தில் ஊக்கம் கொள்ளாது. 253

அருளற்ற செயல் எது என்றால், கொல்லக் கூடாத உயிர்களைக் கொல்லுதல் ஆகும்; கொன்ற அவ்வுடம்பைத் தின்பது பொருளற்ற செயலாகும். 254

உடம்பில் உயிர் நிலைத்திருப்பது ஊன் உண்ணாமையைக் குறியாகக் கொண்டது; ஊன் உண்டால் உண்டவனை நரகம் விழுங்கி வெளிவிடாது. 255

உலகினர் உண்ணுவதற்காக உயிர்களைக் கொல்ல மாட்டாரெனில், விலைப் பணத்திற்காக ஊன் விற்பவர் எவரும் இரார். 256

புலால் புசியாதிருக்க வேண்டும்; உண்மையுணர்ந்தவர் இருப்பாராயின், அப்புலால் வேறு ஓர் உயிரின் புண் என்பது விளங்கும். 257

பிழையின் நீங்கிய பேரறிவாளர், ஓர் உயிரினிடமிருந்து பிரிந்துபோன உடம்பை உண்ண மாட்டார். 258

இறைச்சி முதலாகிய அவிப் பொருள்களை வேள்வித் தீயில் கொட்டி ஆயிரக்கணக்கான வேள்விகள் செய்வதை விட, ஒன்றின் உயிரைக் கொன்று உடலைத் தின்னாதிருத்தல் நல்லது. 259

ஒருயிரையும் கொல்லாதவனாய்ப் புலால் உண்ணவும் மறுத்தவனை உலகத்து உயிர்களெல்லாம் கைகுவித்து வணங்கும். 260

## 27. தவம்

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. 261

தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது. 262

துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம். 263

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும். 264

வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும். 265

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு. 266

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. 267

தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாம் தொழும். 268

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. 269

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். 270

# 27. தவம் (நோன்பு)

தமக்கு நேர்ந்த துன்பத்தைத் தாங்கிக் கொள்ளுதலும், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவினதே தவத்திற்கு வடிவு ஆகும். 261

உண்மையான நோன்பிகளுக்கு நோன்பு பொருந்தும்; அல்லாதார் அந்நோன்பைக் கைக் கொள்வது வீணே. 262

நோற்கும் துறவிகளுக்கு ஊட்டம் தர வேண்டியே மற்ற இல்லறத்தார் தவத்தை மறந்தார்கள் போலும்! 263

கெட்ட பகைவரை அழித்தலும் இன்புறு நண்பரை ஆக்குதலும் எண்ணிய அளவில் தவ வன்மையால் முடியும். 264

விரும்பியவற்றை விரும்பியவாறு பெற முடியுமாதலால் இவ்வுலகில் தவம் முயன்று செய்யப்பட வேண்டியதாம்! 265

தவம் செய்பவரே தமக்கேற்ற நற்செயல் செய்பவராவர்; மற்றையோர் உலகியல் ஆசைக்குள் அகப்பட்டு வீண் செயல் செய்பவரே. 266

புடம் போட்டுக் காய்ச்சக் காய்ச்ச ஒளிமிகும் பொன்னைப் போல், துன்பம் வருத்த வருத்த நோன்பு செய்பவர்க்கு அறிவொளி பெருகும். 267

நோன்பின் சிறப்பால் தன் உயிர்க்குத் தான் என்ற அகந்தை இன்றி நீங்கப் பெற்றவனை உலகத்துள்ள மற்ற உயிர்களெல்லாம் வணங்கும். 268

தவத்தினால் மிக்க வலிமை பெற்றவர்க்கு எமனைக் கடந்து வெல்லுதலும் கைகூடப் பெறும். 269

உலகில் பலர் இல்லாதவராகத் துன்புறுதற்குக் காரணம், நோற்பவர் சிலர் மட்டும் இருக்க, நோற்காதவர் மிகப் பலராயிருப்பதே. 270

## 28. கூடா ஒழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். 271

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றப் படின். 272

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. 273

தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. 274

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று
ஏதம் பலவுந் தரும். 275

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். 276

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து. 277

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். 278

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல். 279

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். 280

## 28. கூடாத போலிப் பொய் ஒழுக்கம்

மனத்தில் வஞ்சகம் உடையவன் வெளியில் உண்மையானவன் போல் நடிக்கும் பொய் நடத்தையைக் கண்டு, அவனது உடலில் ஒன்றியிருக்கும் ஐந்து பூதங்களும் உள்ளே எள்ளி நகையாடும். 271

தன்மனம் தான் நன்கறிந்த குற்றத்தில் ஈடுபடின் விண் போல் உயர்ந்து தோன்றும் தவக்கோலம் என்ன பயன் தரும்? 272

மனத்தை வெல்லும் வலிமையற்றவன் வலிந்து கொண்டுள்ள தவ வடிவம், பசு யாரும் நெருங்காதபடிப் புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு புலியுருவில் பயிரை மேய்ந்தாற் போன்றது. 273

தவ உருவத்தில் மறைந்து கொண்டு தீமைகளைச் செய்தல், வேடன் புதரில் மறைந்து கொண்டு பறவைகளைப் பிடிப்பது போன்றது. 274

உலகப் பற்றுக்களை ஒழித்து விட்டோம் என்று சொல்பவரின் வஞ்சக நடத்தை, 'என் செய்தோம் என் செய்தோம்' என்று பின்பு அவரே வருந்தும்படிப் பல்வகைத் துன்பங்களையும் விளைவிக்கும். 275

உள்ளே துறவாமல் வெளியே துறந்தவர் போல் வஞ்சனையாக நடப்பவரை விடக் கொடியவர் இல்லை. 276

வெளியில் குண்டுமணி போல் சிவந்த காவி உடையுடன் காணப்படினும், மனம் குண்டுமணியின் மூக்குப் போல் கறுத்திருப்பவரையும் உலகம் கொண்டுள்ளது. 277

மனத்திலே குற்றமிருக்க மாண்புடையவர் போல் நன்னீராடி வஞ்சித்து நடக்கும் மாந்தர் பலருளர். 278

நேராயிருக்கும் அம்பு செயலால் கொடியது; வளைவாயிருக்கும் யாழின் தண்டு செயலால் இனியது. அவ்வாறே நோன்பிகளையும், உருவால் மதியாது செய்யும் செயல் வகையால் மதிப்பிடுக. 279.

உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தைக் கைவிடின் மொட்டையடித்தலும் முடியை நீட்டி வளர்த்தலுமாகிய வெளித் தோற்றம் வேண்டியதில்லை. 280

## 29. கள்ளாமை

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. 281

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 282

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். 283

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும். 284

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். 285

அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர். 286

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல். 287

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு. 288

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். 289

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு. 290

## 29. களவு செய்யாமை

எவராலும் இகழப்படாதிருக்க விரும்புபவன், எப்பேர்ப்பட்ட ஒரு பொருளையும் களவாட எண்ணாத படி தன் மனத்தைக் காப்பானாக. 281

மாற்றான் பொருளை வஞ்சகமாகக் களவாடுவோம் என்பதாக மனத்தால் நினைத்தலும் தவறே. 282

வஞ்சக வழியால் வரும் ஆக்கம் அளவு கடந்து வளர்வது போல் தோன்றிப் பின் கெட்டு விடும். 283

வஞ்சக வழியில் முற்றி முதிர்ந்த அவா, பின் பயன் விளைக்கும்போது அழியாத் துயரை அளிக்கும். 284

பிறர் பொருளை விரும்பி அவர் சேரும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவரிடம், அருளைக் குறியாகக் கொண்டு எவ்வுயிரிடத்தும் அன்புடையவராயிருக்கும் பண்பு இராது. 285

களவு வழியில் முதிர்ந்த வேட்கையுடையவர், எதிலும் அளவு முறையுடன் நடந்து கொள்ள மாட்டார். 286

அளவறிந்து வாழும் ஆற்றல் உடையவரிடம், களவு என்னும் இருண்ட அறிவுச் செயல் இராது. 287

அளவு முறை அறிந்து ஒழுகுபவரின் உள்ளத்தில் அறம் நிலைத்து நிற்பதைப் போல, களவு செய்து பிழைப்பவரின் உள்ளத்தில் வஞ்சகம் நிலைத்து நிற்கும். 288

களவாடுதலைத் தவிர வேறு நல்லனவற்றை அறியாதவர்கள், அளவு முறை கடந்த தீமைகளைச் செய்து அங்கேயே அழிந்து போவார்கள். 289

களவு செய்வார்க்கு உடம்பிலே நீண்ட நாள் உயிர் நிலைத்து நிற்கும் உலக வாழ்வும் (ஆயுளும்) தவறிப் போகும்; களவு செய்யாதோர்க்கோ தேவர் உலக வாழ்வும் தவறாது கிடைக்கும். 290

## 30. வாய்மை

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 291

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். 292

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 293

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன். 294

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. 295

பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும். 296

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 297

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். 298

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 299

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. 300

## 30. உண்மை உடைமை

உண்மை எனப்படுவது யாதென்றால், யார்க்கும் யாதொரு தீமையும் தராத சொற்களைப் பேசுதலாம். 291

யார்க்கும் தீங்கு தராத நன்மையைக் கொடுக்கும் என்றால், பொய்ச் சொற்களும் உண்மையின் இடத்தில் வைத்து எண்ணத் தக்கனவாம். 292

தன் மனமறிந்த பொய்யைப் பேச வேண்டா; அவ்வாறு பொய் பேசின், அதனால் தன் மனமே தன்னைச் சுட்டு வருத்தும். 293

ஒருவன் தன் மனமறியப் பொய் பேசாது ஒழுகினால், உலகத்தாரின் உள்ளங்களில் எல்லாம் புகழுடன் நிலைத்திருப்பான். 294

ஒருவன் தன் உளத்தொடுங் கூடி உண்மை பேசினால், தவத்துடன் தானமும் ஒருசேரச் செய்வாரினும் உயர்ந்தவனாவான். 295

பொய்யாதிருத்தலைப் போன்ற புகழ் ஒருவனுக்கு வேறில்லை; அப்பொய்யாமை அவன் அறியாமலேயே அவனுக்கு எல்லா அறங்களையும் ஈயும். 296

பொய்யாத பண்பை உறுதியாகக் கடைப்பிடித்தால், வேறு அறங்கள் செய்யவே செய்யாதிருந்தாலும் தவறில்லை, நல்லதே. 297

உடலின் வெளித் தூய்மை தண்ணீரால் செய்யப்படும்; உள்ளத் தூய்மையோ உண்மை பேசுதலால் தான் உண்டாக முடியும். 298

உயர்ந்தோர்க்குப் புகழொளி வீசும் பொய்யாமை என்னும் விளக்கே உண்மையான விளக்காகும்; மற்ற விளக்குகள் எல்லாம் விளக்குகள் ஆகா. 299

யாம் உண்மையாய்க் கண்ட பண்புகளுள் வாய்மை என்னும் பண்பை விட எவ்வகையிலும் நல்லதாக வேறு ஒரு பொருள் இல்லை. 300

## 31. வெகுளாமை

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அவ்விடத்துக்
காக்கின்என் காவாக்கால் என். 301

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற. 302

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும். 303

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற. 304

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 305

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புனையைச் சுடும். 306

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. 307

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 308

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். 309

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 310

# 31. சினம் கொள்ளாமை

செல்லக் கூடிய இடத்திலே சினம் வராமல் தடுப்பவன் தான் உண்மையில் சினம் காப்பவனாவான். செல்லாத இடத்திலே காத்தால் என்ன? காவாமற் போனால் என்ன? 301

செல்லாத வலியவரிடத்திலே சினம் காட்டுதல் தீமை தரும்; செல்லக் கூடிய எளியவரிடத்திலும் சினத்தலினும் தீய செயல்கள் வேறில்லை. 302

எவரிடமும் சினத்தை மறந்துவிடுக. அச்சினத்தால் தீமையே பிறக்கும். 303

சிரிப்பையும், களிப்பையும் அழிக்கினற சினத்தினும் கொடிய பகையும் வேறு உண்டோ? 304

ஒருவன் தன்னைத் தான் காத்துக் கொள்ள விரும்பினால் தனக்குச் சினம் வராமல் தடுத்துக் காப்பானாக; காக்கா விடின் அச்சினம் தன்னையே அழிக்கும். 305

சேர்ந்தாரைக் கொல்லும் சினம் என்னும் நெருப்பு தன் இனத்தாராகிய இன்பக்காவல் தெப்பத்தைச் சுட்டெரிக்கும். 306

சினத்தை ஒரு பொருளாகக் கொண்டவன் கெடுதல். தரையைத் தாக்கி அறைந்தவனுடைய கை தவறாது கெடுவது போன்றது. 307

பல கிளைகள் விட்டெரியும் நெருப்பில் தோய்ந்தாற் போன்ற துன்பத்தை ஒருவன் செய்தாலும், முடியுமானால் அவனைச் சினவாமையே சிறந்தது. 308

ஒருவன் நெஞ்சில் சினத்தை நினையாதிருந்தால், அவன் நினைத்த நன்மைகள் யாவும் உடனே கைகூடும். 309

அளவிறந்து சினங்கொண்டவர் செத்தவர்க்கு நேர் ஆவர்; சினத்தைத் துறந்தவரோ துறவிகட்கு ஒப்பாவர். 310

## 32. இன்னா செய்யாமை

சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னா
செய்யாமை மாசற்றார் கோள். 311

கறுத்துஇன்னா செய்தவக்*கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள். 312

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். 313

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 314

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. 315

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 316

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. 317

தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல். 318

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும். 319

நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 320

## 32. துன்பம் செய்யாமை

பிறர்க்குத் துன்பம் செய்வதால் சிறப்பளிக்கும் செல்வம் பெறலாமானாலும், துன்பம் செய்யாதிருத்தலே குற்றமற்ற தூயோரது கொள்கை. 311

ஒருவர் மிகச் சினந்து தமக்குத் துன்பம் செய்த போதும், திரும்ப அவருக்குத் துன்பம் செய்யாதிருத்தலே குற்றமற்ற தூயோரது கோட்பாடு. 312

தாம் துன்பம் செய்யாதிருக்கவும் தமக்குத் துன்பம் செய்தவர்க்கும் திரும்பத் துன்பம் செய்தால் பிறகு தப்ப முடியாத துன்பம் விளைக்கும். 313

துன்பம் செய்தவரைத் தண்டித்தல் என்பது, (இப்பேர்ப்பட்டவர்க்குத் துன்பம் செய்து விட்டோமே என்று) அவர் வெட்கப்படும்படியாக அவருக்கு நல்ல நன்மைகளைச் செய்து விடுவதுதான். 314

வேறு ஓர் உயிரின் துன்பத்தைத் தன் துன்பம் போல் கருதிக் காவாதபோது அறிவு பெற்றதனால் ஆகக் கூடிய பயன் உளதோ? 315

துன்பத்திற்குரியவை எனத் தான் பட்டறிந்தவற்றைப் பிறனிடம் செய்வதை மேவாதிருக்க வேண்டும். 316

எவ்வளவு சிறிதும் எப்பொழுதும் எவர்க்கும் மனம் அறிந்ததான துன்பத்தைச் செய்யாதிருத்தலே சிறப்பு. 317

தன் உயிருக்குத் துன்பம் என்பதாக உணர்பவன் பிற உயிர்க்குத் துன்பம் செய்வது எதற்கோ? 318

முற்பகலில் பிறர்க்குத் துன்பம் செய்தால், பிற்பகலில் தங்கட்குத் துன்பங்கள் யாரும் செய்யாமலேயே தாமாகவே வந்து சேரும். 319

துன்பங்கள் எல்லாம் பிறர்க்குத் துன்பம் செய்தவரிடமே போய்ச் சேரும்; எனவே, துன்பம் இல்லா நிலையை விரும்புபவர் பிறர்க்குத் துன்பம் செய்ய மாட்டார். 320

## 33. கொல்லாமை

அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும். 321

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை. 322

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. 323

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி. 324

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை. 325

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணுங் கூற்று. 326

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. 327

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. 328

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. 329

உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர் உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். 330

## 33. கொலை செய்யாமை

அறச் செயல் யாதென்றால் எவ்வுயிரையும் கொல்லா திருத்தலாம்; கொல்லுதலோ, பிற தீச் செயல்கள் யாவற்றையும் உடன் விளைவிக்கும். 321

பலருக்கும் பங்கிட்டுக் கொடுத்துச் சாப்பிட்டு, பல உயிர்களையும் கொல்லாது காத்தல், மேலானவை என அறநூலோர் தொகுத்துச் சொல்லியிருக்கும் அறங்களுக்குள் எல்லாம் சிறந்தது. 322

கொல்லாமை தனியொரு நற்சிறப்பினதாம்; பொய் யாமை கூட அடுத்து அக் கொல்லாமையின் பிற் பட்டதாகவே நல்லது. 323

நல்வழி என்று சொல்லப்படுவது எது எனில், யாது ஓர் உயிரையும் கொல்லாமையை உயர்வாகக் கருதும் ஒழுக்கமாம். 324

உலக நிலை கண்டு அஞ்சிப் பற்றைத் துறந்தவர்க்குள் எல்லாம் கொலை செய்ய அஞ்சிக் கொல்லாமையை உயர்வாகப் போற்றுபவனே சிறந்தவன். 325

கொல்லாமையைக் கைக் கொண்டு ஒழுகுபவனது வாழ்நாளின் மேல், உயிர்களைப் பிடித்துண்ணும் எமன் செல்ல மாட்டான். 326

தன்னுயிர் போவதாயினும், அதைக் காப்பதற்காகத் தான் பிறிதொன்றின் இனிய உயிரைப் போக்கும் செயலைச் செய்ய வேண்டா. 327

நன்மையான ஆக்கம் பெரிதாகக் கிடைக்குமெனினும், உயிரைக் கொன்று கிடைக்கும் ஆக்கம் உயர்ந்தோர்க்குக் கீழானதே. 328

கொலைத் தொழில் செய்யும் இழிமக்கள், அதன் கீழ்மையை உணர்ந்த நல்லோரிடையே, புலைத் தொழிலினராகத் தாழ்த்தப்படுவர். 329

பிணியுற்ற உடலுடன் இன்னும் சாகாத தீய வாழ்க்கையினர், முன்பு உடம்பினின்றும் உயிரைப் பிரிக்கும் கொலைத் தொழில் செய்தவர் என்று கூறுவர் அறிஞர். 330

## 34. நிலையாமை

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. 331

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. 332

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். 333

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின். 334

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். 335

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு. 336

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. 337

குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு. 338

உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 339

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு. 340

# 34. ஒன்றும் நிலைத்து நில்லாமை

நிலையில்லாத பொருள்களை நிலைத்தவை என்று நம்பும் புல்லறிவு உடைமை கீழானது. 331

பெரிய செல்வம் குவிதல், கூத்தாடும் அரங்கில் கூட்டம் வந்து கூடுவ்து போன்றது; அச் செல்வம் நீங்குவதும், கூத்து முடிவுற்றதும் கூட்டம் கலைதல் போன்றது. 332

செல்வம் நிலையாத் தன்மையது; எனவே அச் செல்வம் கிடைத்தால், அதைக் கொண்டு நிலையான நற்செயல்களை அப்போதே செய்க. 333

ஒருநாள் எனப்படுவது நல்ல ஒரு பொருள் போல் தோற்றிச் சிறிது சிறிதாக உயிரின் வாழ்வுக் காலத்தை அறுக்கும் ஒரு வகை வாள் என்பது உணர்பவர் இருந்தால் புரியும். 334

பேச முடியாமல் நாக்கை அடக்கி விக்குள் தோன்றுவதற்குமுன் நல்லறங்கள் முந்திச் செய்யப்பட வேண்டும். 335

நேற்று உயிர் வாழ்ந்தவன் ஒருவன் இன்றைக்கு இல்லை என்று சொல்லும்படியான பெருவியப்பு உடையது இந்த உலகம். 336

சிறு பொழுதும் வாழ்வது நிலையில்லாதவர்கள் எண்ணும் எண்ணங்களோ ஒரு கோடியும் அல்ல; மேலும் மிகப் பல. 337

உடலோடு உயிருக்கு இடையே உள்ள உறவு, தங்கியிருந்த கூடு தனித்து விடும்படி அதினின்றும் பறவை பறந்துவிட்டாற் போல் நிலைக்காதது. 338

கண் மூடித் தூங்குவது போன்றது இறப்பு; தூங்கிக் கண் விழிப்பது போன்றது பிறப்பு. 339

உடம்புக்குள்ளே ஒதுங்கி ஒண்டு குடி யிருக்கும் உயிருக்கு நிலையாகத் தங்கி வாழும் இருப்பிடம் இன்னும் அமரவில்லை போலும். 340

## 35. துறவு

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். 341

வேண்டின் உண்டாகத் 'துறக்க துறந்தபின்
ஈண்டு இயற்பால பல. 342

அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு. 343

இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து. 344

மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை. 345

யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகும் புகும். 346

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. 347

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். 348

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். 349

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 350

# 35. உலகப் பற்றைத் துறத்தல்

எப்பொருளிலிருந்து எப்பொருளிலிருந்து ஒருவன் பற்று நீங்கியிருக்கிறானோ அப்பொருள் அப்பொருள் தொடர்பாக அவன் துன்புறுதல் இல்லை. 341

துறவு கொண்டபின் இவ்வுலகில் இயலக் (சாதிக்கக்) கூடிய நற்பணிகள் மிகப் பல; அவற்றை விரும்பினால் உள்ளபடியாகத் துறவு கொள்க. 342

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புல நுகர்ச்சிகளையும் ஒழித்தல் வேண்டும். உள்ளம் விரும்புகிற எல்லா உலக இன்பங்களையும் ஒருசேரத் துறக்க வேண்டும். 343

ஒரு பற்றும் இல்லாமையே நோன்புக்கு உரிய இயல் பாகும்; பற்று உடைமையோ, மீண்டும் மீண்டும் உலக மயக்கத்திற்கு இடமாகும். 344

பிறவியை நீக்கப் பாடுபடும் துறவியர்க்கு உடம்பே மிகையான சுமை என்றால், மற்றுமுள்ள உலகப் பொருள்களோடு தொடர்பு கொள்வது ஏன்? 345

இதைச் செய்தவன் யானே, இது என்னுடையதே என்னும் ஈர் அகந்தைகளையும் நீக்கியவன், தேவர்க்கும் கிட்டாதுயர்ந்த வீட்டுலகை அடைவான். 346

பற்றுக்களை இறுகப் பற்றிக் கொண்டு விடாத வரைத் துன்பங்களும் பற்றிக் கொண்டு விட மாட்டா. 347

முற்றத் துறந்தவரே தலைமை நிலையை எய்தியவர் ஆவர்; மற்றையோரோ, பிறவி வலைக்குள் சிக்கியவர் ஆவர். 348

பற்று நீங்கிய போதே துறவறம் பிறப்பைப் போக்கும்; மற்றில்லாவிடில், அத்துறவறம் நிலைக்காமல் ஆட்டம் காணப்படும். 349

பற்றற்றவனாகிய கடவுட் பற்றை மட்டும் பற்றிக் கொள்க; அக்கடவுட் பற்றையும், மற்ற உலகப் பற்றுக்களை விடுங் குறிக்கோளுக்காகப் பற்றுக. 350

## 36. மெய்யுணர்தல்

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. 351

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. 352

ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து. 353

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு. 354

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. 355

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. 356

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. 357

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு. 358

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். 359

காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். 360

## 36. உண்மைப் பொருள் உணர்தல்

உண்மைப் பொருள் அல்லாதவற்றை உண்மைப் பொருள் என்று கருதும் திரிபு மயக்கத்தால் மாட்சிமையற்ற பிறவி மீண்டும் தோன்றும். 351

திரிபுமயக்கம் நீங்கிக் குற்றமற்ற மெய்யறிவு உடையராயினார்க்கு அம்மெய்யறிவு அறியாமையிருள் நீங்கப் பேரின்பம் நல்கும். 352

இதுவா அதுவா என்னும் ஐயத்தினின்றும் நீங்கி உண்மைப் பொருள் உணர்ந்தவர்க்கு, மண்ணுலகிலிருந்து விண்ணுலகம் மிக அண்மையில் உள்ளதாம். 353

ஐம்பொறிகளால் அறியும் ஐந்து அறிவு பெற்றிருந் தாலும், ஆறாவது அறிவாகிய மெய்யறிவு - பகுத்தறிவு இல்லாதவர்க்கு ஒரு பயனும் இல்லை. 354

வெளித் தோற்றத்திற்கு எந்தப் பொருள் எந்த மாதிரியாய்த் தோன்றினும், அதைக்கொண்டு ஒரு முடிவுக்கு வராமல் அந்தப் பொருளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்தறிவதே மெய்யறிவு. 355

மெய்ந் நூற்களைப் படித்து இவ்வுலகில் மெய்ப்பொருள் அறிந்தவர், மற்றொரு முறை, இவ்வுலகில் வந்து பிறவாப் பெருவழி அடைவர். 356

உள்ளம் உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிந்தால், அறிந்தவர்க்கு மறுபடியும் பிறப்பு இருப்பதாக உறுதியாக நம்ப வேண்டா. 357

மீண்டும் பிறத்தல் என்னும் மடமைச் செயல் நீங்கும்படி சிறந்த வீடு என்னும் செவ்விய நிலையை ஆராய்ந்தறிவதே மெய்யறிவு. 358

சார வேண்டிய உண்மைப் பொருளை உணர்ந்து, சார்ந்துள்ள மற்ற பற்றுக்கள் கெடும்படி ஒழுகினால், சாரக் கூடிய நோய்கள் மீண்டும் வலித்துச் சாரா. 359

நோய்க்குக் காரணமான விருப்பு வெறுப்பு அறிவுக் குழப்பம் ஆகிய மூன்றின் பெயர்களும் இல்லாத படிக் கெடுத்தால் நோய்களும் கெடும். 360

## 37. அவா அறுத்தல்

அவாஎன்ப எல்லா உயிர்க்குஎஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. 361

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். 362

வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்பது இல். 363

தூஉய்மை என்பது அவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். 364

அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர். 365

அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. 366

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். 367

அவாஇல்லார்க் கில்லாகுந் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். 368

இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின். 369

ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். 370

## 37. ஆசையைத் தவிர்த்தல்

எல்லா உயிர்கட்டும் எப்போதும் நீங்காத பிறவித் துயரை விளைக்கும் விதை அவா என்று சொல்வர். 361

ஒன்றை விரும்புவதென்றால் பிறவாப் பெரு நிலையை விரும்ப வேண்டும். மற்றபடி அந்நிலையும் எதையும் விரும்பா நிலையை விரும்பினால்தான் கிடைக்கும். 362

எதையும் விரும்பா நிலையைப் போன்ற சிறந்த பேறு இவ்வுலகில் இல்லை. இவ்வுலகில் என்றென்ன! வேறு எங்கும் அதுபோன்றது ஒன்றுமில்லை! 363

தூய்மையாய் இருத்தல் என்றால் அவா இல்லாது இருத்தல்தான். மற்றபடி அந்நிலையும் உண்மையை விரும்பினால் உளதாகும். 364

எல்லாம் அற்றவர் என்று சொல்லத் தக்கவர்கள் ஆசையற்றவர்களே; ஆசையறாத மற்றையோர் அப்படியொன்றும் அற்றவர் ஆகார். 365

அவா ஒருவனை வஞ்சித்துக் கெடுக்கக் கூடியது; எனவே, அந்த அவாவைக் கொள்ள அஞ்சுவதே அறமாகும்; ஓர்ந்துணர்க! 366

ஒருவன் அவாவான செயல்களை முற்றிலும் நீக்கி விட்டால் அழிவற்ற நற்செயல்கள் தான் விரும்புகிறபடி யெல்லாம் வந்தெய்தும். 367

அவா இல்லாதவர்க்குத் துன்பங்களும் இல்லையாம்; அவா இருந்தாலோ, துன்பங்கள் நீங்காது மேலும் மேலும் தொடரும். 368

துன்பங்களுக்குள் கொடிய துன்பமாகிய அவா என்பது நீங்கி விடின், இன்பங்கள் இடை விடாமல் வந்து குவியும். 369

எப்போதும் நிரம்பாத இயல்புடைய அவாவை நீக்கிவிடின், நீக்கிய அந்நிலையிலேயே என்றும் மாறா இயல்பினதான பேரின்பம் வாய்க்கும். 370

## 38. ஊழ்

ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி. 371

பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. 372

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும். 373

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. 374

நல்லவை எல்லாஅந் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு. 375

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம. 376

வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. 377

துறப்பார்மன் துப்பர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின். 378

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். 379

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். 380

## 38. ஊழின் வலிமை

கைப்பொருள் வளர்வதற்குரிய நல்லூழ் இருந்தால் சோர்வில்லாத முயற்சி உண்டாகும்; தொலைவதற்குரிய தீயூழ் இருந்தால் சோம்பல் உண்டாகும். 371

பொருளை இழக்கச் செய்யும் தீயூழ் அறியாமைக்கு உள்ளாக்கும்; ஆகப்படுத்தும் நல்லூழ் வந்தாலோ அறிவை அகலமாகப் பெருக்கும். 372

நுட்பமான கருத்துள்ள நூற்கள் பலவற்றை ஒருவன் கற்றாலும், மற்றபடி ஊழிற்கு ஏற்ப அவனுக்கு முன்னமே உள்ள அறிவுதான் முற்பட்டுத் தோன்றும். 373

உலகின் இயல்பு இருவேறு வகையானது: (அதாவது அறிவு இருந்தால்தான் செல்வம் இருக்கும் என்பதில்லை) ஊழால் செல்வம் உடையவரா யிருப்பதும் அறிவுடையவரா யிருப்பதும் வெவ்வேறானவை. 374

செல்வம் தேடுங்கால், தீயூழால் நல்லவையெல்லாம் தீமை பயப்பனவாக மாறும். நல்லூழால் தீயவைகளும் நன்மை பயப்பனவாக மாறும். 375

நல்லூழுக்கு உரியவை யல்லாத பொருள்களை வருந்திக் காத்தாலும் வளராவாம்; ஊழின்படி தமக்குரிய பொருள் களை வெளியில் கொண்டு போய்க் கொட்டினாலும் போகாவாம். 376

கோடிக் கணக்கான செல்வங்களைக் குவித்து வைத்திருப் பவர்களும், இன்னார்க்கு இவ்வளவு என்று வகுத்த இறைவன் வகுத்த அளவுக்கு மேல் நுகர முடியாது. 377

ஊழின்படி வரக் கூடிய துன்பங்கள் துறவு கொள்வதால் வந்துறுத்தாது நீங்குமென்றால், ஊட்டமில்லாத ஏழைகள் துறவை மேற்கொள்வரே! 378

நல்லூழால் நன்மை வருங்கால் இன்பமாய் நுகர்பவர், தீயூழால் தீமை வருங்கால் துன்புறுவது ஏன்? 379

ஊழினும் மிகுந்த வலிமையினவாய் வேறு எவை உள்ளன? ஊழை வெல்ல வேறொரு வழியை எண்ணினாலும் ஊழே முந்திக் கொள்ளும். 380

# திருக்குறள் தெளிவு

## உ. பொருட்பால்

## 39. இறைமாட்சி

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு. 381

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு. 382

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு. 383

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு. 384

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு. 385

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். 386

இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு. 387

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும். 388

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. 389

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி. 390

## 39. மன்னனின் மாண்பு

படைவலிமை, நற்குடி மக்கள், உணவு வளம், நல்லமைச்சர், நல்ல நண்பர், காவல் நிலைகள் ஆகிய ஆறும் உடையவனே மன்னருக்குள் ஆண்சிங்கம் அனையவன். 381

அஞ்சாத உறுதி, ஈதல், அறிவு, ஊக்கம் ஆகிய இந்த நான்கு மாண்புகளும் குறையாதிருத்தலே அரசனுக்கு அழகு. 382

காலந் தாழ்க்காத சுறுசுறுப்பு, படிப்பு, துணிச்சல் ஆகிய இந்த மூன்று சிறப்புக்களும் நாடாளும் வேந்தனுக்கு நீங்காதிருக்க வேண்டுவனவாம். 383

அரச அறத்திலிருந்து பிழையாமல், தீய செயல்களை விலக்கி, வீரம் குறையாத மானம் உடையவனாயிருப்பவனே அரசன். 384

செல்வம் வருவதற்குரிய முயற்சிகளைச் செய்தலும், செய்து செல்வம் சேர்த்தலும், சேர்த்ததை அழியாமல் காத்தலும், காத்ததைப் பலர்க்கும் பங்கிட்டு வழங்கலும் செய்ய வல்லவனே சிறந்த வேந்தன். 385

மன்னன் எளிதில் காணத் தக்கவனாயும் கொடுஞ் சொல் பேசாதவனாயும் இருந்தால், உலகம் அவனை உயர்த்திப் புகழும். 386

இன்சொல்லுடன் வேண்டியதைக் கொடுத்துக் காக்க வல்ல மன்னனுக்கு, நான் சொல்லுகிறபடி - தான் நினைக்கிறபடி இவ்வுலகம் ஒத்து வரும். 387

நடுநிலையுடன் நீதி புரிந்து குடிகளைக் காக்கும் வேந்தன் மக்களுக்குக் கடவுள் என்று மதிக்கப்படுவான். 388

காது கசக்கும்படி கூறும் குறைச் சொற்களைப் பொறுத்துக் கொள்ளும் நற்பண்புடைய மன்னனது குடை நிழலின் கீழ் உலகம் இனிது வாழும். 389

கொடுத்தல், அருள், செங்கோல் ஆட்சி, குடிகளை நன்கு காத்தல் ஆகிய நான்கு பண்புகளும் உடையவனே அரசர்க்குள் ஒளி வீசும் அரசனாவான். 390

## 40. கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 391

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 392

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். 393

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். 394

உடையார்முன் இல்லாதார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர். 395

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. 396

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு. 397

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. 398

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 399

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. 400

# 40. கல்விச் சிறப்பு

கற்கக் கூடிய நூற்களைக் குற்றமறக் கற்பீராக, கற்றாலோ, அக்கல்விக்கு ஏற்ப உயர் நெறியில் நிலையாய் ஒழுகுவீராக. 391

ஒன்றை எண் என்று சொல்வர்; மற்றொன்றை எழுத்து என்று சொல்வர்; உண்மையில் இந்த இரண்டு கல்விப் பொருள்களும், உயிர் வாழ்பவராக நம்பப்படும் மக்களுக்குக் கண்கள் என்று சொல்லத்தக்கனவாம். 392

உண்மையில் கண்கள் உடையவராகச் சிறப்பித்துச் சொல்லப்படுதற்கு உரியவர் கற்றவரே; கல்லாதவரோ, முகத்தில் - கண்கள் அல்ல- இரண்டு புண்கள் உடையவராகவே கருதப்படுவர். 393

மகிழும்படி ஒன்று கூடி உரையாடி, மீண்டும் எப்போது கூடுவோம் என்று எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கும்படி பிரிவது புலவர்கட்கு இயற்கை. 394

செல்வர்முன் வறியவர்போல் கற்றவர் கடைவாயிலிலே கல்லாதவர் ஏங்கித் தாழ்ந்து நிற்றற்கு உரியர். 395

மணலிலுள்ள கிணற்றில் தோண்டிய ஆழம் அகலத்திற்கு ஏற்ப நீர் சுரக்கும்; அதுபோல் கற்ற நூல் அளவு - கால அளவிற்கு ஏற்ப மக்கட்கு அறிவு விரியும். 396

கற்றவர்க்கு எந்த நாடும் சொந்த நாடாகுமாதலாலும், எந்த ஊரும் சொந்த ஊராகுமாதலாலும் இவ்வளவு சிறப்பளிக்கும் கல்வியை ஒருவன் சாகும் வரை படிக்காமல் இருப்பது ஏன்? 397

ஒரு பிறவியில் தான் படித்த படிப்பு ஒருவனுக்கு ஏழு பிறவிகளிலும் காப்பளிக்கும் சிறப்புடையது. 398

கல்வி பெற்றவர், தாம் பெற்று மகிழ்வதை உலகமும் பெற்று மகிழச் செய்து அதுகண்டு மேலும் மகிழ்வர். 399

ஒருவனுக்கு அழியாத சிறந்த செல்வம் கல்வியே; மற்ற உடைமைகள் செல்வம் ஆக மாட்டா. 400

## 41. கல்லாமை

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். 401

கல்லா தான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று. 402

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின். 403

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார். 404

கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும். 405

உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர். 406

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று. 407

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு. 408

மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு. 409

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். 410

# 41. கல்வி கற்காமையின் இழிவு

நிரம்பிய நூலறிவு இன்றிக் கற்றோர் அவையில் பேசுதல், சூதாடுதல், அரங்கக் கோடு கிழிக்காமல் சூதாடு காயை உருட்டி விளையாடுவது போன்றதாம். 401

கல்வியில்லாதவன் கற்றோர் அவையில் பேச விரும்புதல், இரண்டு முலைகளும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினாற் போன்றது. 402

படித்தவர் முன்னே வல்லவர் போல் வாய் பேசாதிருந்தால் படிக்காதவரும் மிகவும் நல்லவரே. 403

படிக்காதவனது அறிவு ஒர நேரம் மிகவும் நன்றாயிருப்பது போல் காணப்படினும் கல்வியறிவுடையவர் அதனை உயர்ந்ததாக ஏற்றுக் கொள்ளார். 404

கல்லாதவனது 'தடபுடல்' தன்மை, கற்றவர் சார்ந்து பேச்சுக் கொடுத்துப் பார்த்தால் இருக்குமிடம் தெரியாமல் சோர்வுபட்டு விடும். 405

கற்காதவர் உயிரோடு இருக்கின்றனர் என்ற அளவினரே தவிர மற்றபடி ஒரு பயனும் விளைக்காத களர் நிலத்திற்கு ஒப்பானவரே. 406

நுட்பமான சிறப்பான ஆராய்ச்சி அறிவு இல்லாதவனது அழகுப் பொலிவு, மண்ணால் அழகாகச் செய்யப்பட்ட பொம்மையின் பொலிவு போன்றது. 407

கல்லாதவரிடம் உள்ள செல்வம், கற்றுள்ள நல்லவரிடம் உள்ள ஏழ்மையை விட வெறுக்கத்தக்கது. 408

கல்லாதவர் மேல் குலத்தில் பிறந்திருந்தாலும், கீழ்க் குலத்தில் பிறந்தும் கற்றிருப்பவரது அளவுக்குப் பெருமை இல்லாதவரேயாவர். 409

அறிவு விளங்கச் செய்யும் நூற்களைக் கற்றவரை நோக்கக் கல்லாத மற்றவர், மாந்தரை நோக்க விலங்குகளுக்கு உள்ள அறிவு வேறுபாடு உடையவர் ஆவர். 410

# 42. கேள்வி

செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை. 411

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். 412

செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து. 413

கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை. 414

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல். 415

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 416

பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர். 417

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. 418

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராதல் அரிது. 419

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என். 420

# 42. செவியால் கேட்டறியும் சிறப்பு

செல்வங்களுள் செவியால் கேட்டறியும் செல்வம் ஒருவகைச் செல்வமாகும். அச்செல்வமோ செல்வங் களுக்குள் எல்லாம் தலைமையானது மாகும். 411

கேட்டலாகிய உணவு காதுக்குக் கிடைக்காத போது மட்டும், (பிறகு கேட்கும் தெம்பு பெற) சிறிதளவு வயிற்றுக்கும் உணவு இடப்படலாம். 412

செவியால் உண்ணும் கேள்வி உணவு உடையவர் நிலவுலகில் இருந்தபடியே, வேள்வி (யாகத்து) உணவு உண்ணும் தேவர்க்கு நிகராவர். 413

ஒருவன் தானே கற்க முடியாவிடினும், கற்றவர் சொல்லும் கருத்துக்களைக் காதால் கேட்பானாக; அக்கேள்வி யறிவு, வாழ்வில் சோர்வு ஏற்படும்போது அவனுக்கு ஊன்றுகோல் போல் துணைபுரியும். 414

ஒழுக்கமுடைய உயர்ந்தோர் வாய்மொழி, வழுக்குதல் உடைய தரையிலே நடக்க உதவும் ஊன்றுகோல் போன்றதாம். 415

எவ்வளவு சிறிதளவாயினும் நல்ல கருத்துக்களைக் கேட்க வேண்டும்; அந்த அளவுக்கே கேள்வி நிறைந்த பெருமையளிக்கும். 416

நுட்பமாய் உணர்ந்து நிறையப் பெற்ற கேள்வியறிவினர், தவறியுணர்ந்தும் மடமையானவற்றைப் பேசார். 417

கேள்வி என்னும் கருவியால் துளைக்கப்படாத காதுகள், இயற்கையாய்த் துளை பெற்றுக் கேட்கும் வன்மை பெற்றிருந்தாலும், கேட்காத செவிட்டுத் தன்மை உடையனவே. 418

நுண்ணிய கேள்வியறிவு பெறாதவர், வணங்கிப் பேசும் வாயுடையவராயிருத்தல் இயலாது. 419

காதால் கேள்விச் சுவை நுகராமல் வாய்ச்சுவை ஒன்று மட்டும் நுகரும் இழி மக்கள் செத்தால்தான் என்ன? உயிரோடு வாழ்ந்தால்தான் என்ன? 420

# 43. அறிவுடைமை

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண். 421

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு. 422

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 423

எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. 424

உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு. 425

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. 426

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். 427

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். 428

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய். 429

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். 430

## 43. நல்லறிவு உடைமை

அறிவு கேட்டினின்றும் காக்கும் ஒரு வகைக் கருவியாம், அழிக்கும் பகைவராலும் அழிக்க முடியாத உள்காவல் நிலையும் ஆகும் அது. 421

மனம் போகும் போக்கெல்லாம் போக விடாமல், தீமையினின்றும் விலக்கி, நன்மையான வழியில் செலுத்த வல்லதே உண்மை அறிவாகும். 422

எப்பொருளைப் பற்றி யார் யார் வாயிலிருந்து கேள்விப்பட்டாலும், (கேட்டது கொண்டு முடிவு செய்யாமல்) அப்பொருளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து காண்பதே அறிவாகும். 423

எளிதில் புரியக் கூடியனவாக, கேட்பவர் உள்ளத்தில் நன்கு பதியும்படி தான் கருத்துக்களைப் பேசி, பிறர் வாயிலிருந்து வரும் நுண்ணிய அரிய கருத்துக்களையும் புரிந்து கொள்ள வல்லதே அறிவாகும். 424

உலகினரைத் தழுவிக் கொண்டு ஒத்துப் போவதே உயர் அறிவு; இன்பத்தில் விரிவதும் துன்பத்தில் குவிவதும் இல்லாததே நல்லறிவு. 425

உலகம் எவ்வாறு அமைந்து வாழ்கிறதோ, அவ்வாறே உலகத்தோடு அமைந்து வாழ்வது அறிவாம். 426

அறிவாளிகள் எதிரே நடக்கவிருப்பதை முன் கூட்டி அறிவர்; அறிவிலிகள் அதனை அறிய மாட்டார்கள். 427

அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாதிருப்பது மடமையாகும்; அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவது அறிஞர்க்கு இயற்கை. 428

எதிரே வரவிருக்கும் துன்பத்தை முன்கூட்டி அறிந்து தடுத்துக் காக்கும் அறிவாளிகளுக்கு, அதிர்ச்சி தரும்படி வரக் கூடிய துன்பம் ஒன்றும் இலது. 429

(வேறொன்றும் பெறா விடினும்) அறிவு பெற்றிருப்பவர் எல்லாம் உடையவராகவே மதிக்கப்படுவார்; வேறு என்ன பெற்றிருப்பினும் அறிவு பெறாதவர் ஒன்றும் இல்லாதவராகவே கருதப்படுவார். 430

## 44. குற்றங் கடிதல்

செருக்குஞ் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. 431

இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. 432

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 433

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை. 434

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 435

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு. 436

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும். 437

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று. 438

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை. 439

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல். 440

# 44. குற்றம் செய்யாது விலக்கல்

அகந்தையும் சினமும் இழி தன்மையும் ஆகிய குற்றங்கள் இல்லாதவரது வளர்ச்சி பெருமிதத்தன்மை யுடையது. 431

பிறர்க்கு உதவாத கருமித்தன்மையும் சிறப்பில்லாத வறட்டு மானமும் மாண்பற்ற மகிழ்ச்சியும் அரசனுக்குக் குற்றங்களாம். 432

பழிக்கு நாணுபவர், தினையளவு சிறிய குற்றம் நேரிடினும் அதனைப் பனையளவு பெரிதாகக் கருதி அஞ்சுவர். 433

ஒருவர்க்கு அழிவைத் தரும் பகை குற்றம் புரிதலே; ஆதலின், அதே குறிக்கோளாக நின்று குற்றத்தினின்றும் காத்துக் கொள்க. 434

தீங்கு வருவதற்குமுன் காத்துக் கொள்ளாதவனது வாழ்வு, நெருப்பின் எதிரே உள்ள வைக்கோல் போர் போல் கெட்டொழியும். 435

முதலில் தன் குற்றத்தைப் போக்கிப் பிறகு பிறர் குற்றத்தைக் கண்டு போக்கத் தொடங்கின், அரசனுக்கு என்ன தீங்கு நேர முடியும்? 436

செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்யாமல் கருமித்தனமாய் இறுக்கி வைத்திருப்பவனது செல்வம் தப்பி நிலைக்கும் தன்மையின்றிக் கெட்டுவிடும். 437

உள்ளம் பொருளை இறுகப் பற்றிக் கொள்ளுதலாகிய கருமித்தன்மை, எக்குற்றத்தோடும் இணைத்து எண்ணப்படக் கூடிய தல்லாத ஒரு பெருங் குற்றமாம். 438

எப்போதும் தன்னைத்தானே மேலாகப் பெருமை யடித்துக் கொள்ளலாகாது. நன்மை தராத குற்றமான செயலை விரும்பவும் கூடாது. 439

நுகர விரும்பிய பொருள்களைத் தான் விரும்பியதைப் பிறர் அறியாதபடி நுகர்ந்தால், கெடுக்கும் பகைவரின் போர் நூலறிவு பயனற்றுப் போகும். 440

# 45. பெரியாரைத் துணைக்கோடல்

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல். 441

உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். 442

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 443

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை. 444

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல். 445

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். 446

இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர். 447

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும். 448

முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாஞ்
சார்பிலார்க்கு இல்லை நிலை. 449

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். 450

# 45. பெரியோரைத் துணைக் கொள்ளுதல்

அறங்களை அறிந்து அறிவில் மூத்த பெரியவரின் தொடர்பைத் தேர்ந்தறிந்து, கொள்ளும் வழிமுறையறிந்து கொள்ளுக. 441

உள்ள துன்பத்தைப் போக்கி மேலும் துன்பம் வராதவாறு முன்கூட்டிக் காக்கவல்ல பெரியோரின் உறவைப் போற்றிப் பெற்றுக் கொள்க. 442

பெரியவரைப் போற்றித் தம் உறவினராகக் கொள்ளுதல் அரிய வாய்ப்புக்களுக்குள் மிக அரியதாகும். 443

எல்லா நிலைகளிலும் தம்மைவிடப் பெரியவரா யிருப்பவர் தம் உறவினரா யிருக்க வாழ்தல், வலிமைகளுக்குள் எல்லாம் மிக்க வலிமையாகும். 444

(ஆட்சியின் வெற்றிக்கு உரிய வழிகளை) ஆராய்ந்து கூறுபவரையே கண்ணாகக் கொண்டு ஆட்சி நடத்த வேண்டியிருத்தலின், அரசன் அத்தகு சூழ்ச்சி வல்ல பெரியவர்களைச் சுற்றிச் சூழ்ந்து வாழ்வானாக. 445

தகுந்த பெரியோர் குழுவைச் சேர்ந்து ஒழுக வல்லவனைப் பகைவர் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை. 446

இடித்து அறிவுரை கூறித் துணை செய்யும் பெரியவரைப் பெற்றிருப்பவரைக் கெடுக்கும் தகுதி யுடையவர் யார் உளர்? 447

குற்றம் கண்டவழி இடித்துப் பேசும் பெரியவரைப் பெற்றில்லாத காப்பற்ற அரசன், கெடுக்கும் பகைவர் இல்லாமலேயே தானே கெடுவான். 448

முதலீடு இல்லாத வணிகர்க்கு ஊதியம் (இலாபம்) இல்லை; அதுபோல, தூண்போல் தாங்கும் துணை யில்லாதவர்க்கு நிலைத்த வாழ்வு இல்லை. 449

நல்ல பெரியவரின் உறவை இழத்தல், பொல்லாத பலருடைய பகையைப் பெறுவதினும் பத்து மடங்கு தீங்குடைத்ததாகும் 450

## 46. சிற்றினம் சேராமை

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். 451

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. 452

மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ் சொல். 453

மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு. 454

மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும். 455

மனந்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை. 456

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும். 457

மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து. 458

மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து. 459

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல். 460

## 46. சிறு தன்மையினரின் குழுவைச் சேராமை

பெருந்தன்மை உடையவர் சிறுதன்மையினரின் குழுவைச் சேர அஞ்சுவர்; சிறு தன்மையினரோ, சிறியோர் குழுவை உறவாகச் சூழ்ந்து கொள்வர். 451

தண்ணீர் தான் சேர்ந்துள்ள தரையின் தன்மையால் வேறுபட்டு நிறம் சுவை முதலியனவற்றில் அவ்வாறே இருக்கும்; அதுபோல, மக்கட்கு அறிவு சேர்ந்துள்ள குழுவின் தன்மையை உடையதாக இருக்கும். 452

மக்கட்கு உணர்ச்சி மனநிலைக்கு ஏற்பத் தோன்றும்; இவன் இப்பேர்ப்பட்டவன் என்னும் சொல்லோ, சேர்ந்து பழகும் இனத்திற்கேற்ப அமையும். 453

ஒருவனுக்கு அறிவு அவனது மனத்தைப் பொறுத்ததுபோல் வெளிக்குத் தோன்றி, உண்மையில் கூடிப் பழகும் இனத்தைப் பொறுத்ததாகவே இருக்கும். 454

உள்ளத்தின் தூய்மை, செய்யும் செயலின் தூய்மை ஆகிய இரண்டும் பழகும் இனத்தின் தூய்மையை அடிப்படையாகக் கொண்டே அமையும். 455

உள்ளம் தூய்மையானவர்க்குப் பிள்ளைகள் நல்லவரா யிருப்பர்; தூய இனத்தில் சேர்ந்தவர்க்கு நன்மையாய் முடியாத செயலே இல்லை. 456

உள்ளத் தூய்மை உயிர்க்கு உறுதி பயக்கும்; இனத்தின் தூய்மை எல்லாப் புகழும் சேர்க்கும். 457

நல்ல மனப்பாங்கு உடையவரா யிருப்பினும், உயர்ந்தோர்க்கு நல்ல இனச் சேர்க்கை மேலும் காப்பளிக்கும். 458

மனத்தின் சிறப்பால் மறுமை யின்பம் கிடைக்கும்; மற்று அதுவும் பழகும் இனத்தின் சிறப்பால் காப்புடையதாகும். 459

நல்லோர் குழுவினும் சிறந்த துணை வேறில்லை; தீயோர் குழுவை விடத் தொல்லை தருவதும் வேறொன்றும் இல்லை. 460

## 47. தெரிந்து செயல்வகை

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல். 461

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். 462

ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார். 463

தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர். 464

வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு. 465

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். 466

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. 467

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். 468

நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 469

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு. 470

## 47. எதையும் ஆராய்ந்து செய்யும் திறம்

ஒரு செயல் செய்தால் அழியக் கூடியது, பெருகக் கூடியது, பெருகிப் பின்னால் வரக் கூடிய ஊதியம் ஆகிய நிலைகளை ஆராய்ந்து செய்யத் தொடங்குக. 461

தெரிந்தெடுத்த நல்லோர் குழுவுடன் ஆராய்ந்து சூழ்ந்து செயல் புரிவார்க்குக் கிடைக்க முடியாத பொருள் யாதொன்றும் இல்லை. 462

பின்னால் ஊதியம் வருமென ஆராயாது எண்ணி முன்னால் முதலையே இழந்து விடக் கூடிய செயல்களில் அறிவுடையவர் ஊக்கங் கொள்ளார். 463

இழிவு தருவதான குற்றத்திற்கு அஞ்சுபவர், ஆராய்ந்து தெளியாத செயலில் இறங்க மாட்டார். 464

செயல் திறங்களை முற்ற ஆராயாமல் போர் போன்ற வினைமேற் செல்லுதல், பகைவரை வளரும் பாத்தியில் பதித்து வளர விடுவதான ஒரு வழியாகும். 465

ஒருவன் செய்யக் கூடாத செயல்களைச் செய்வதனாலும் கெடுவான்; செய்ய வேண்டிய செயல்களைத் தெரிந்து செய்யாமையாலும் கெடுவான். 466

எச் செயலையும் நன்கு ஆராய்ந்தே செய்யத் துணிய வேண்டும்; செய்யத் துணிந்தபின் ஆராய்ந்து கொள்வோம் என எண்ணுவது தவறு. 467

உரிய வழியில் வருந்தித் தொடங்காத முயற்சி, பிறகு பலர் துணையாக நின்று முட்டுக் கொடுத்துக் காத்தாலும் பொத்துக் கொண்டு போய்விடும். 468

அவரவருடைய இயல்பை ஆராய்ந்து அறிந்து அவரவர்க் கேற்ப நடந்து கொள்ளா விடின், நற்செயல் புரிவதிலும் தவறு நேரக் கூடும். 469

தம் நிலைக்கு ஒவ்வாத செயல் முறைகளை உலகம் ஏற்றுக் கொள்ளாது; ஆதலின் எவரும் இகழாத செயல்களாக ஆராய்ந்து பார்த்துச் செய்ய வேண்டும். 470

## 48. வலியறிதல்

வினைவலியும் தன் வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். 471

ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல். 472

உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 473

அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும். 474

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். 475

நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும். 476

ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி. 477

ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை. 478

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். 479

உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும். 480

## 48. வலிமை அறிந்து நடத்தல்

எடுத்துக் கொண்ட செயலின் வன்மையும் தன் வலிமையும் பகைவனது வலிமையும் இருவர்க்கும் துணையாயினார் வலிமையும் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படுக. 471

தன்னால் இயலக் கூடியது தொடர்பாக அறிய வேண்டியதை அறிந்து அந்நிலையில் பொருந்தி வினைமேற் செல்வார்க்குக் கைகூடாதது ஒன்று மில்லை. 472

தமக்கு உள்ள வலிமையை எடைபோட்டு அறியாமல் வெற்று ஊக்கத்தால் உந்தப்பட்டு வினை முடிக்க முடியாமற் நடுவிலே சிதைந்தவர் பலர். 473

ஆங்காங்கு உள்ள நிலைமைக்கு ஏற்ப அமைந்து ஒழுகாதவனாய், தன் வலிமையின் அளவையும் உணராதவனாய், தன்னை மிக உயர்வாக வியந்து கொண்டிருப்பவன் விரைவில் கெட்டு விடுவான். 474

மெல்லிய மயில் தோகை ஏற்றிய வண்டியும், தாங்கும் வலிமைக்கு மேல் மிகுதியாக அப்பண்டம் ஏற்றப்படின் அச்சு முறிந்து விடும். 475

மரத்தின் கிளை நுனி வரை ஏறிச் சென்றிருப்பவர் மேலும் அதைக் கடந்து ஏற ஊக்கங் கொண்டால் உயிருக்கு அழிவு ஏற்பட்டு விடும். 476

தம்பொருள் அளவும் கொடுக்கும் அளவும் அறிந்து முறையோடு பிறர்க்கு உதவுக; செல்வம் கெடாமல் காத்து நெடுநாளைக்கு உதவும் வழி அதுதான். 477

வருவாய் வரும் வழியின் அளவு சிறிதாயினும், செலவாகும் வழி அதனினும் விரியாதிருப்பின் தீங்கில்லை. 478

தன் வலிமையின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்வு, முதலில் வளர்வது போல் காட்டிப் பின் இல்லாமல் போய் மீண்டும் தோன்ற முடியாமல் கெட்டு விடும். 479

உள்ள செல்வத்தின் அளவை ஆராயாமல் செய்யும் ஒப்புரவுஉதவியால் செல்வ அளவு விரைவில் குறையும். 480

## 49. காலம் அறிதல்

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 481

பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு. 482

அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின். 483

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின். 484

காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர். 485

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து. 486

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். 487

செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை. 488

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல். 489

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து. 490

# 49. தக்க காலம் அறிந்து நடத்தல்

தன்னினும் வலிய கோட்டானைப் பகலிலே காக்கை வென்று விடும்; எனவே, பகைவரை வெல்ல விரும்பும் மன்னருக்கு அதற்கு ஏற்ற காலம் வரவேண்டும். 481

காலத்தோடு பொருந்த நடத்தல், செல்வத்தை நீங்காதபடி கட்டி வைக்கும் ஒரு கயிறாகும். 482

தகுந்த துணைக் கருவியுடன் உரிய காலத்தையும் அறிந்து செயலாற்றின், செய்தற்கரிய செயல்கள் என்பனவும் உண்டா? 483

தக்க காலத்தை அறிந்து இடத்திற்கு ஏற்பவும் செயல்புரியின், உலகத்தையே பெற விரும்பினாலும் கைகூடும். 484

உலகத்தைத் தம் கைக்குக் கொண்டுவர விரும்புபவர் எனப்படுபவர், சிறிதும் கலங்காமல் அதற்குரிய நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பர். 485

மிக்க ஊக்கமுடையவன் உரிய காலம் வரும்வரை ஒடுங்கியிருப்பது, போர் செய்யும் ஆட்டுக்கடா எதிரி ஆட்டைத் தாக்குவதற்காக அடியைப் பின் வாங்குவது போன்றதாம். 486

அறிவாளிகள், ஒருவர் தொல்லை தரின் வெடுக்கென்று வெளியே சினங்காட்ட மாட்டார்கள்; உரிய காலம் நோக்கி உள்ளே சினங் கொண்டிருப்பர். 487

பகைவரைப் பார்த்தால் பொறுத்திருக்க; அவரை அழித்தற்கேற்ற காலத்தைக் கண்டுபிடித்து விட்டால் அவர்தலை கீழே சாயும். 488

கிடைத்தற்கரிய காலம் வாய்த்தால், அப்போதே செயற்கரிய செயல்களைச் செய்து விடுக. 489

சோர்வான காலத்தில், இரை எதிர்பார்க்கும் கொக்குப் போல் அமைதியாய் இருப்பீராக; சிறந்த நேரம் வந்துற்ற போது, அக் கொக்கின் குத்தைப் போல் குறி முடிப்பீராக. 490

## 50. இடன் அறிதல்

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது. 491

முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவும் தரும். 492

ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின். 493

எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின். 494

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற. 495

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து. 496

அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின். 497

சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும். 498

சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தொடு ஒட்டல் அரிது. 499

காலாழ் களரில் நரியடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு. 500

## 50. ஏற்ற இடமறிந்து செயல்படுதல்

பகைவரை முற்றுகை யிடற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்தால் தவிர, எச் செயலையும் தொடங்க வேண்டா; பகைவரை எளிதாக இகழவும் வேண்டா. 491

மாறு கொண்ட வலியோர்க்கும், தக்க காவல் நிலையைப் பெற்றிருப்பதால் உள்ள ஆக்கம், பல முன்னேற்றங்களை விளைவிக்கும். 492

ஏற்ற இடம் அறிந்து பகைவரிடம் விழிப்பாய்ச் செயலாற்றின், வெல்ல இயலாதவரும் இயலக் கூடியவராய்ப் பகை யழிப்பர். 493

வினையில் ஈடுபட்டவர் உரிய இடமறிந்து ஆழ்ந்து செயல் புரியின், அவரை அழிக்க எண்ணிய பகைவர் அந்த எண்ணத்தைக் கைவிடுவர். 494

முதலை ஆழமான தண்ணீரில் பிற உயிர்களை வென்று விடும். தண்ணீரை விட்டு நீங்கினாலோ அம் முதலையைப் பிற உயிர்கள் கொன்று விடும். 495

வன்மையான உருளைகளையுடைய நீண்ட தேர்கள் கடலிலே ஓட மாட்டா; கடலில் ஓடக் கூடிய கப்பல்களும் தரையில் ஓட மாட்டா. 496

எதுவும் குறைபடாமல் நன்கு ஆராய்ந்துஏற்ற இடம் பார்த்துச் செயல்பட்டால், அஞ்சாத துணிவு என்னும் ஒரு துணை தவிர வேறு துணை தேவையில்லை. 497

சிறிய படையை உடையவனுக்குச் செல்வாக்கு உள்ள இடத்தை அடைந்தால் பெரிய படையுடையவனும் ஊக்கம் இழந்து ஓடி வந்து விடுவான். 498

பகைமாந்தர் நலமான காவல் நிலைகளும் பிற பெருமைகளும் பெற்றிரா விடினும் அவர் வாழும் இடத்தில் சென்று அவரை வெல்லுதல் அருமை. 499

வேல் மறவன் ஒருவனைக் குத்திக் கோத்துக் கொண்டிருக் கிற மருப்போடு கூடிய முகமுடைய அஞ்சாத ஆண் யானையையும், கால் ஆழ்ந்து பதியக் கூடிய சேற்றுக் களர் நிலத்தில் ஒரு சிறு நரி கொன்று விடும். 500

## 51. தெரிந்து தெளிதல்

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும். 501

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு. 502

அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு. 503

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 504

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். 505

அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி. 506

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும். 507

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். 508

தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். 509

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். 510

# 51. ஒருவரை ஆராய்ந்து நம்புதல்

அறம், பொருள், இன்பம், உயிர் போய்விடுமோ என்ற அச்சம் ஆகிய நான்கிலும் எங்ஙனம் உளார் என ஆராய்ந்தே ஒருவரை நம்ப வேண்டும். 501

நல்ல குடும்பத்தில் பிறந்து குற்றத்திலிருந்து விலகிப் பழிக்கு வருந்துகிற நாணம் உடையவனிடத்திலேயே நம்பிக்கை கொள்ள வேண்டும். 502

அரிய நூற்களைப் படித்துக் குற்றம் அற்றிருப்பவரி டத்தும் அறியாமை இல்லா திருத்தல் இயலாது. 503

ஒருவருடைய குணங்களையும் ஆராய்ந்து, குற்றங்களை யும் ஆராய்ந்து அவ்விரண்டனுள் மிகுதியாயிருப்பவற்றை அறிந்து அம்மிக்கவற்றைக் கொண்டு நல்லவரா கெட்டவரா எனத் தெளிய வேண்டும். 504

யாரொருவரது பெருமையை அறிவதற்கும் மற்ற சிறுமையை அறிவதற்கும் அரவரவர் செய்யும் செயல்களே உரைகற்களாம். 505

சார்பு அற்றவரை நம்புவதை விழிப்பாய் இருந்து நீக்க வேண்டும்; அவர் ஒரு பிடிப்பும் இல்லாதவர்; ஆதலால் பழிக்கு நாண மாட்டார். 506

அன்பின் பொருட்டாக அறிவற்றவரை நம்பியேற்றல், எல்லா மடமைகளையும் விளைவிக்கும். 507

பிறனொருவனை ஆராயாது நம்பினால் நம்பியவனு டைய வழித்தோன்றுவோர்க்கும் நீங்காத துன்பங்கள் நேரும். 508

எவரையும் ஆராயாது நம்பற்க; ஆராய்ந்த பின்னரே, அவரிடம் தெளிவு பெற வேண்டிய கருத்துக்களை அறிந்து தெளிவுறுக. 509

ஆராயாதவனை நம்புதலும், ஆராய்ந்து நம்பியவன் மேல் பிறகு ஐயம் கொள்ளுதலும் நீங்காத துன்பங்களை விளைக்கும். 510

## 52. தெரிந்து வினையாடல்

நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும். 511

வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை. 512

அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு. 513

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர். 514

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தானென்று ஏவற்பாற் றன்று. 515

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல். 516

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். 517

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல். 518

வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு. 519

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு. 520

## 52. ஒருவரை ஆராய்ந்து வேலைவாங்குதல்

நன்மையானவற்றையும், தீமையானவற்றையும் ஆராய்ந்து நல்லனவற்றைச் செய்யும் இயல்புடையவனையே வேலை செய்ய விட வேண்டும். 511

வருவாயை மிகுத்து வளம் உண்டாக்கி உற்ற விளைவுகளை ஆராய்ந்து மதிப்பிடத் தக்கவனே செயல் செய்வானாக. 512

அன்பு, அறிவு, உறுதி, அவா இல்லாமை ஆகிய நான்கு பண்புகளையும் பெற்றிருப்பவனிடமே வேலையை நம்பி விட வேண்டும். 513

எந்த வகையில் ஆராய்ந்து நம்பிய பிறகும் வேலையின் போக்கினால் மனம் மாறி விடுகிற மக்கள் உலகில் பலர் உளர். 514

செய்யும் திறம் அறிந்து தாக்குப் பிடித்து வேலை செய்யக் கூடியவனைத் தவிர, நல்லவன் என்பதற்காக வேறொருவனிடம் வேலை ஏவத்தக்க தன்று. 515

செய்பவனது இயல்பையும் ஆராய்ந்து வேலையின் போக்கையும் சீர்தூக்கித் தக்க காலத்தோடு பொருந்த அறிந்து செய்ய விடுக. 516

இந்தச் செயலை இன்ன வகையில் இவன் செய்து முடிப்பான் என்று ஆராய்ந்து அறிந்த பின், அந்தச் செயலை அவனிடம் ஏவி விடுக. 517

இந்த வினைக்கு, இவன் தகுதியானவன் என்பதை ஆராய்ந்தறிந்த பின், அவ்வினைக்கு அவனை உரியவனாகச் செய்க. 518

ஒரு செயல் செய்யுங்காள், அச்செயல் செய்பவன் பாராட்டும் நட்பை வேறு விதமாக எண்ணும் வேந்தனை விட்டுச் செல்வம் விலகும். 519

வினை செய்பவன் தவறினால் ஒழிய உலகம் தவறிக் கெடாது; ஆதலால், நாள்தோறும் வேந்தன் நிலைமையைக் கண்காணித்து வருவானாக. 520

## 53. சுற்றந் தழால்

பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள. 521

விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும். 522

அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. 523

சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன். 524

கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும். 525

பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல். 526

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. 527

பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர். 528

தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும். 529

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல். 530

## 53. சுற்றத்தாரைத் தழுவிக் காத்தல்

ஒருவரிடம் செல்வப் பசை அற்று விடினும் அவரிடம் பழைய உறவைப் பாராட்டிப் பேசுதல் உறவினர்க்கு உள்ள இயற்கை. 521

அன்பு குறையாத சுற்றத்தார் சேர்ந்திருந்தால் பெருக்கம் குன்றாத பல பேறுகளையும் விளைக்கும். 522

சுற்றத்தாரிடம் மனம் விட்டு அளவளாவாதவனது வாழ்வு, குளத்தின் பரப்பு கரையில்லாமல் நீர்நிறைந்தது போன்றதாம். 523

சுற்றத்தாரால் சூழப்பட்டு வாழ்வதுதான், தான் செல்வம் பெற்றிருப்பதால் கிடைத்த பயன். 524

வேண்டியது ஈதலும் இன்சொல் பேசுதலும்ஒருவன் செய்யின், ஒருவர்பின் ஒருவராக அடுக்கித் தொடரும் சுற்றத்தாரால் சூழப்பட்டிருப்பான். 525

பெரிய உதவியாளனாகவும், சினம் கொள்ளாதவனாகவும் உள்ள ஒருவனை விட, சுற்றம் மிக உடையவர் இப் பெரிய உலகில் இல்லை. 526

இரை கிடைத்தால் காகம் மறைக்காது தன் இனத்தையும் கூவியழைத்து உடன் உண்ணும்; செல்வங்களும் அது போன்ற தன்மையுடையார்க்கே இருக்கத் தக்கனவாம். 527

மன்னவன் எல்லாவற்றையும் பொதுவாக நடத்தாமல் அவரவரது தகுதிக்கு ஏற்ப நடத்தினால் அப்பொருத்தப் பாட்டை மெச்சிச் சுற்றத்தார் பலரும் சூழ்ந்து வாழ்வார். 528

முதலில் தம் உறவினராயிருந்த பின்பு ஒரு காரணத்தால் விலகியவரின் கூட்டம், சேராது விலகியதற்குரிய காரணம் இல்லாதபடிச் செய்துவிட்டால் மீண்டும் வந்து சேரும். 529

தன்னிடமிருந்து பிரிந்துபோய் மீண்டும் ஒரு குறிக்கோளுக்காக வந்தவனை, மன்னவன், வேண்டியதைச் செய்து நன்கு ஆராய்ந்து சேர்த்துக் கொள்க. 530

## 54. பொச்சாவாமை

இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவமை மகிழ்ச்சியிற் சோர்வு. 531

பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு. 532

பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுவுலகத்து
எப்பால்நூ லோர்க்கும் துணிவு. 533

அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 534

முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்னூறு இரங்கி விடும். 535

இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுவொப்பது இல் 536

அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின். 537

புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் 538

இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. 539

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின். 540

## 54. சோர்ந்து மறதி கொள்ளாமை

மிக்க மகிழ்ச்சிக் களிப்பினால் செய்ய வேண்டியதைச் செய்யாமல் மறந்து சோர்ந்து விடுதல், அளவு கடந்த சினத்தை விடத் தீயதாம். 531

அறிவை நித்தம் நிலைத்த வறுமை அழிப்பதுபோல, புகழை மறதி அழித்து விடும். 532

மறதிச் சோர்வு உடையவர்க்குப் புகழ்ப்பேறு இல்லை; அக்கொள்கை, உலகத்தே எவ்வகை நூலாசிரியர்க்கும் ஒத்த முடிபாகும். 533

அஞ்சி நடுங்குபவர்க்கு அரண்கள் இருந்தும் பயனில்லை; அதுபோல, எவையிருந்தும் மறதி உடையவர்க்கு நன்மையில்லை. 534

துன்பம் உறுவதற்குமுன் தடுத்துக் காவாது சோர்ந்து தவறியவன், பின் உற்ற போது தன் தவறை எண்ணி இரங்கி வருந்துவான். 535

எவர் தொடர்பாகவும் எப்போதும் எதையும் மறவாது செயலாற்றும் திறன் தவறாது வாய்க்கப் பெற்றால் அதற்கு நிகரான நன்மை வேறு இல்லை. 536

மறந்து சோராமல் தக்க துணைக்கருவியுடன் விழிப்பாய்ச் செயலாற்றினால் செய்ய முடியாதவை எனக் கைகூடாத செயல்கள் எவையும் இல்லை. 537

புகழ்ச்சிக்குரிய செயல்களை மறவாது மதித்துச் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்யாது இகழ்ந்து சோர்ந்தவருக்கு ஏழு பிறவிகளிலும் ஆக்கம் இல்லை. 538

தாங்கள் தமது களிப்பினால் இறுமாந்திருக்கும் போது, செய்ய வேண்டியதை மறதியால் செய்யாது புறக்கணித்ததால் அழிந்து போனவரை நினைத்துப் பார்க்க வேண்டும். 539

அடைய எண்ணியதை உறுதியாக எண்ணிச் செயலாற்றின், எண்ணிய அதனை அடைதல் மிகவும் எளிது. 540

## 55. செங்கோன்மை

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. 541

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி. 542

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். 543

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. 544

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு. 545

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின். 546

இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். 547

எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும். 548

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில். 549

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். 550

# 55. நேர்மையான ஆட்சி முறை

எவரிடத்தும் நன்மை தீமைகளை ஆராய்ந்து, பற்று காரணமாக இரக்கம் காட்டாமல் ஆணை செலுத்தி, எதையும் தேர்ந்து தீர்ப்பளிப்பதே செங்கோல் முறையாகும். 541

பொதுவாக உலகம் முழுவதும் மழையை எதிர்பார்த்து வாழும்; சிறப்பாகக் குடிமக்கள் அரசனது செங்கோல் ஆட்சியை எதிர்நோக்கி வாழ்வர். 542

அந்தணர் ஓதும் மறைநூலுக்கும் அறநெறிக்கும் ஆதரவாய் நிற்பது அரசனது செங்கோலே. 543

குடிமக்களைத் தழுவிக் காத்துச் செங்கோலாட்சி செலுத்தும் பெருநில வேந்தனது அடியைத் தழுவி உலகம் வாழும். 544

நீதி நெறிப்படி செங்கோல் ஆட்சி புரியும் மன்னனது நாட்டில் போதிய மழையும் நல்ல விளைச்சலும் ஒரு சேரக் காணப்படும். 545

அரசனுக்கு வெற்றியளிப்பது வேற்படை அன்று; அவனது செங்கோலே! அவ்வெற்றியும் செங்கோல் கோணாமல் ஆட்சி செலுத்தினால்தான். 546

உலகம் முழுவதையும் அரசன் காக்கிறான்; அவனையோ, அவன் முறை தவறாது ஆட்சி செய்யின் அந் நீதிமுறை காப்பாற்றும். 547

எளிய இயல்புடன் நன்கு ஆராய்ந்து நீதி வழங்காத வேந்தன் தாழ்ந்த அளவில் தானே கெட்டு விடுவான். 548

குடிமக்களைப் பிறர் அழிக்காமல் காத்துத் தானும் பேணி உதவி, குற்றம் கண்ட வழி ஒறுத்தல் அரசனுக்குப் பழியன்று; ஆட்சி முறையே. 549

கொலைத் தீர்ப்பினால் கொடியவரை அரசன் ஒறுத்து அழித்தல், பயிருக்கு இடையூறாக உள்ள களையை உழவர் களைவதற்கு ஒப்பாகும். 550

## 56. கொடுங்கோன்மை

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து. 551

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. 552

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும். 553

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. 554

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. 555

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி. 556

துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு. 557

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின். 558

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். 559

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின். 560

## 56. கொடிய ஆட்சி முறை

குடிகளை அலையப் பண்ணி நீதியற்ற கொடுமைகளைச் செய்து நடக்கும் அரசன், கொலைத் தொழில் புரியும் கொடியோரினும் கொடியவனாம். 551

கையில் ஆணைக்கோல் தாங்கி நிற்கும் அரசன் குடிகளிடம் மிகுதியாகப் பொருள் வேண்டல், தனியிடத்தில் வேல் கொண்டு நிற்கும் திருடன் காசு கொடு என்று அச்சுறுத்தி வாங்குவது போலும். 552

நாட்டு நடப்புக்களை அன்றைக்கன்று ஆராய்ந்துஒழுங்கு செய்யாத அரசன் நாள்தோறும் சிறுகச் சிறுக நாட்டை இழப்பான். 553

செங்கோல் கோணி எதையும் ஆராயாமல் ஆட்சி புரியும் அரசன், உணவு முதலிய பொருள்களையும் குடிமக்களையும் ஒருசேர இழந்து போவான். 554

அரசனால் தொல்லைப்பட்டுத் துயர் தாளாமல் மக்கள் அழுதுவிடும் கண்ணீர் அவ்வரசனது செல்வத்தை அழிக்கும் படைக்கலம் அல்லவா? 555

அரசர்க்குப் புகழ் நிலைபெற வேண்டுமெனில் செங்கோல் ஆட்சி வேண்டும்; அஃது இன்றிக் கொடுங்கோல் செலுத்தின் பேரும் புகழும் நிலைபெறா. 556

மழையில்லா வறட்சி உலகத்திற்கு என்ன செய்யுமோ, அன்னதையே, அரசனது அருளில்லாக் கொடுங்கோன்மையும் நாட்டில் வாழும் குடிகட்குச் செய்யும். 557

நீதியில்லாத மன்னனது கொடுங்கோலின் கீழ் அகப்பட்டுக் கொண்டால், வறுமையைக் காட்டிலும் செல்வம் உடைமை துன்பமாய்த் தோன்றும். 558

வேந்தன் முறை கோணி ஆளின், அவன் நாட்டில் மேகம் மழை தவறச் செய்து பெய்தலை நடத்தாது. 559

காக்க வேண்டிய மன்னன் நன்கு காவாது கொடுங்கோல் புரியின், அவன் நாட்டில் பசுவின் பால் பயன் குறையும்; அந்தணர் மறை ஓதலை மறப்பர். 560

## 57. வெருவந்த செய்யாமை

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து. 561

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். 562

வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும். 563

இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும். 564

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்னது உடைத்து. 565

கடுஞ்சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும். 566

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம். 567

இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு. 568

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். 569

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை. 570

## 57. அஞ்சும்படியான செயல் செய்யாமை

(குடிகளிடம் குற்றம் கண்ட வழி) தக்கபடி ஆராய்ந்து மீண்டும் அக்குற்றம் செய்யா வண்ணம், குற்றத்திற்கு ஏற்ப ஒறுப்பவனே உண்மை அரசன். 561

நீண்ட நாள் ஆக்கம் தம்மை விட்டு நீங்கா திருக்க விரும்பும் அரசர், கடுமையாக ஓங்குவது (ஒறுப்பது) போல் காட்டி மென்மையாக அடிக்க (ஒறுக்க) வேண்டும். 562

மக்கள் அஞ்சும் கொடுமைகளை யிழைக்கும் கொடுங்கோலனாயின், அரசன் உறுதியாக விரைவில் கெட்டழிவான். 563

'அரசன் கொடியவன்' என்னும்படியான பொல்லாச் சொல்லைப் பெற்ற மன்னன் வாழ்நாள் குறுகி விரைவில் அழிவான். 564

காட்சிக்கு அருமையும் கண்டால் இனிமையற்ற கடுமுகமும் உடையவனிடம் உள்ள பெரிய செல்வம், பேய்காத்த செல்வம் போன்ற தன்மையது. 565

அரசன் கடுஞ்சொல் உடையவனாயும், கண்ணோட்டம் இல்லாதவனாயும் இருந்தால், அவனது பெருஞ் செல்வம் நெடுநாள் நில்லாது அப்போதே அழியும். 566

கடுஞ்சொல்லும் அளவுகடந்த தண்டனையும், பகையழிக்கும் அரசனது வலிமையை அறுக்கும் அரமாம். 567

எதையும் ஆட்சிக் குழுவுடன் கலந்து ஆராயாத அரசன், சினங் கொண்டு சீறினால் செல்வம் சுருங்கும். 568

முன்கூட்டித் தற்காப்பு செய்து கொள்ளாத மன்னன் போர் வந்துவிட்டபோது அஞ்சி நடுங்கி விரைவில் கெட்டொழி வான். 569

கொடுங்கோல் ஆட்சி, கற்றறியா முரடர்களைக் கவர்ந்து துணைசேர்த்திருக்கும்; அக் கல்லாதவர் கூட்டத்தைத் தவிர நிலத்திற்கு வீண்சுமை வேறில்லை. 570

## 58. கண்ணோட்டம்

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் உலகு. 571

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 572

பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண். 573

உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண். 574

கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும். 575

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர். 576

கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல். 577

கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு. 578

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. 579

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். 580

## 58. அருள்கண் கொள்ளுதல்

வேந்தரிடம் கண்ணோட்டம் (கண் இரக்கம்) என்னும் மிக உயர்ந்த அழகு இருப்பதனால்தான் இந்த உலகம் வாழ்கிறது. 571

உலக நடைமுறை கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது; எனவே, அக் கண்ணோட்டம் இல்லாதவர் உயிர் வாழ்தல் நிலத்திற்குச் சுமையே. 572

பாட்டோடு பொருந்தாதபோது இசை என்ன பயன் தரும்? அதுபோல, கண்ணோட்டம் இல்லாத போது கண் என்ன பயன் தரும்? 573

அளவோடு கண்ணோட்டம் பெற்றிராத கண் முகத்தில் உள்ளதுபோல் தெரிவது தவிர வேறு என்ன நன்மை விளைக்கும்? 574

கண்ணிற்கு அணியும் நகை கண்ணோட்டமே; அக் கண்ணோட்டம் இல்லையென்றால் கண் புண் என்றே கருதப்படும். 575

கண்ணோடு சேர்ந்திருந்தும் கண்ணோட்டம் இல்லாதவர், மேலே மண் பூசிச் செய்யப்பட்ட மரப் பதுமையை ஒப்பர். 576

கண்ணோட்டம் இல்லாதவர் கண் இல்லாதவரே. உண்மையில் கண் உடையவர் எனப்படுபவரிடத்தில் கண்ணோட்டம் இல்லாமல் இருக்காது. 577

மேற்கொண்ட செயல்கள் கெடாத அளவுக்குக் கண் ணோட வல்ல அரசர்க்கு இவ்வுலகம் உரிமையுடையதாம். 578

தம்மை ஒறுத்து வருத்தும் இயல்புடையவரிடத்தும் கண்ணிரக்கம் காட்டிப் பிழை பொறுத்து ஆற்றிச் செல்லும் பண்பே மேலானது. 579

எவரும் விரும்பும்படியான கண்ணோட்டம் என்னும் நாகரிகத்தை விரும்புபவர், ஒருவர் நஞ்சை ஊற்றித் தர நேரில் பார்த்தும், அவரை மகிழ்விப்பதற்காக அந் நஞ்சை அருந்தி அமைதி கொள்வர். 580

## 59. ஒற்றாடல்

ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண். 581

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில். 582

ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்தது இல். 583

வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று. 584

கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று. 585

துறந்தார் படிவத்த ராகி இறந்தா ராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று. 586

மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று. 587

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல். 588

ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும். 589

சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தா னாகும் மறை. 590

# 59. ஒற்றரால் உளவு (வேவு) பார்த்தல்

ஒற்றரால் உளவு பார்த்தலும் புகழ்மிக்க அரசியல் நூலும் ஆகிய இரண்டும் தனக்குக் கண்கள் என அரசன் தெரிந்து கொள்க. 581

எல்லோருக்கும் என்னென்ன நிகழ்கின்றனவோ அவற்றையெல்லாம் எப்போதும் ஒற்றர் வாயிலாக விரைவில் அறிதல் வேந்தனுக்குக் கடமை. 582

ஒற்றரைக் கொண்டு வேவு பார்த்து உண்மைப் பயன் உணராத அரசன் வெற்றி பெறுவதற்கு உரிய வாய்ப்பு இல்லை. 583

அரச வேலை பார்ப்பவர், தம் உறவினர், தமக்கு வேண்டாத பகைவர் என்று இப்படியாக எல்லோரையும் ஆராய்ந்து உளவு பார்ப்பவனே ஒற்றனாவான். 584

யாரும் ஐயப்படாத கோலத்துடன், எதற்கும் அஞ்சாமல், எங்கும் மறை பொருளை வெளிவிடாமல் செயலாற்ற வல்லவனே ஒற்றன். 585

துறவிகள் போல் கோலம் பூண்டவராய், தம் வன்மைக்கு மீறியும் வேவு பார்த்து, இடையிலே எதிரிகள் என்ன செய்தாலும் சோராதவரே ஒற்றர். 586

மறைவாக உள்ள செய்திகளையும் வினவி அறிய வல்லவராய், அறிந்த செய்திகளை ஐயத்திற்கு இடமின்றித் துணிபவரே ஒற்றர். 587

ஓர் ஒற்றன் வேவு பார்த்து வந்து தெரிவித்த செய்தியை யும் மற்றும் ஓர் ஒற்றனால் வேவு பார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். 588

ஒற்றருக்கு ஒற்றர் தெரிந்து கொள்ளாதபடி ஒவ்வொரு வரையும் தனித்தனியே வேலை வாங்க வேண்டும்; ஒற்றர் மூவர் சொல்வது ஒருசேர ஒத்திருந்தால் நம்பப்படலாம்.589

ஒற்றனுக்கு எந்தச் சிறப்பையும் பலர் அறியச் செய்யலாகாது; செய்தால் அரசன் தானாகவே உள் பொருளை வெளிப்படுத்தியவனாவான். 590

## 60. ஊக்கம் உடைமை

உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று. 591

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். 592

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார். 593

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை. 594

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு. 595

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. 596

சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றும் களிறு. 597

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு. 598

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். 599

உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃதில்லார்
மரம்மக்க ளாதலே வேறு. 600

## 60. ஊக்கம் கொள்ளுதல்

ஒருவர் சிறந்த உடைமை உடையவர் என்றால் அவ்வுடைமை ஊக்கம்தான்; அவ்வூக்கம் இல்லாதவர் வேறு ஏதேனும் உடையவராயிருப்பினும் உண்மையில் உடையவர் ஆவாரோ? 591

ஊக்கம் உடைமையே உண்மையான உடைமை; செல்வமாகிய உடைமையோ நிலைத்து நில்லாது நீங்கிப் போகும். 592

ஊக்கத்தை நிலையாகக் கைக்கொண்டொழுகுபவர், ஆக்கத்தை இழந்து விட்டோமே என்று அலையார். 593

அசைக்க முடியாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கம் வழி கேட்டுக் கொண்டு தானாகச் செல்லும். 594

நீர்ப் பூக்களின் நீளம் நீர்மட்டத்திற்கு ஏற்ப இருக்கும்; மக்களுக்குச் சிறப்பு, அவர்தம் ஊக்கத்தின் அளவுக்கு ஏற்ப இருக்கும். 595

எண்ணுவதெல்லாம் உயர்வாகவே எண்ணுக; அந்த உயர் எண்ணம் கைகூடாமல் தவறினாலும், தவறாத தன்மைய தாகவே பொருள். 596

யானை உடல் முழுதும் புதைந்த அம்புகட்கிடையே அகப்பட்டபோதும் தளராமல் தன் பெருமிதத்தை நிலைநாட்டும்; அதுபோல, ஊக்கமுடையவர் வாழ்வு சிதைந்த போதும் சோர மாட்டார்கள். 597

உலகத்திலே யாம் வள்ளல் தன்மை உடையோம் என்னும் இறுமாந்த நிலையை ஊக்கம் இல்லாதவர் அடைய முடியாது. 598

யானை பருத்ததாகவும் கூரிய கொம்பு உடையதாகவும் இருப்பினும், தன்னிலும் ஊக்கமுடைய புலியால் தாக்கப்பட்டால் அஞ்சும். 599

ஊக்கமிகுதியே ஒருவனுக்கு வலிமையாகும். அவ்வூக்கம் இல்லாதவர் மரமேயாவர்; ஆனால் மக்கள் வடிவில் இருப்பது ஒன்றுதான் வேறுபாடு. 600

# 61. மடி இன்மை

குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும். 601

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர். 602

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து. 603

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு. 604

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன். 605

படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது. 606

இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர். 607

மடிமை குடிமைக்கண் தங்கின் தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும். 608

குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். 609

மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு. 610

# 61. சோம்பல் இல்லாமை

குடி (குடும்பம்) என்னும் அணையா விளக்கு, சோம்பல் என்னும் சிட்டங் கட்டக் கட்ட ஒளி மழுங்கி அழியும். 601

தமது குடியை உயர்ந்த குடியாக்க விரும்புபவர், சோம்பலுக்குச் சோம்பல் தந்து சுறுசுறுப்புடன் இயங்கு வாராக. 602

மடியை (சோம்பலை) மடியிலே கட்டிக் கொண்டிருக்கும் அறிவிலி பிறந்த குடி அவனுக்கும் முந்தி மடிந்து போகும். 603

சோம்பலால் கெட்டு, சிறந்த முயற்சியை விட்டவர்க்குக் குடி அழிந்து குற்றமும் மிகும். 604

காலம் தாழ்த்தல், மறதி, சோம்பல், மிகுந்த தூக்கம் ஆகிய நான்கும் அழியும் இயல்பினர் காமுற்று அணியும் அணிகலன்களாம். 605

நாடாளும் வேந்தரவு ஆதரவு கிடைத்திருந்தாலும் சோம்பல் உடையவர் பெரும் பயன் பெறுதல் இயலாது. 606

சோம்பல் கொண்டு சிறந்த முயற்சியில் ஈடுபடாதவர், பிறர் இடித்துப் பேசி இகழும் சொற்களைக் கேட்பவர் ஆவார். 607

சோம்பல் குடிவாழ்க்கையில் தென்பட்டால், அது தன் பகைவர்க்குத் தன்னை அடிமையாக்கி விடும். 608

ஒருவன் சோம்பல் கொள்ளுதலை நீக்கி விடின், அவனது குடிவாழ்க்கைக்கு நேர்ந்த தீங்கு அழிந்து விடும். 609

அடியால் அளந்த இறைவன் தாவிய உலகப் பகுதி முழுவதையும் சோம்பல் இல்லாத வேந்தன் ஒருசேரப் பெறுவான். 610

## 62. ஆள்வினை உடைமை

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். 611

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு. 612

தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு. 613

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். 614

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண். 615

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 616

மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள். 617

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி. 618

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். 619

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர். 620

## 62. முயற்சி உடைமை

எச் செயலும் செய்வதற்கு அரியது என்று கருதிச் சோராமல் இருக்க வேண்டும். (முயற்சி செய்தால்) முயற்சி பெருமை யளிக்கும். 611

எடுத்த வேலையைக் குறையாக விட்டு நீங்கிய வரை உலகம் விட்டு நீங்கும்; எனவே செயலாற்றுங் கால் இடையிலே செயல் கெடாதபடி முயற்சியுடன் பார்த்துக் கொள்க. 612

எல்லார்க்கும் உதவுதல் என்னும் பெருமித நிலை, முயற்சி உடைமை என்னும் தகுதியின் அடிப்படையில் அமைந்துள்ளது. 613

முயற்சி இல்லாதவன் உதவி செய்தல் என்பது, ஆண்மையற்ற பேடி கையிலே் வாள் ஏந்திப் போர் செய்தாற் போல இல்லாததாகி விடும். 614

தனக்கு இன்பம் வேண்டாதவனாய் முயன்று செயலாற்றுவதையே விரும்புபவன், தன் சுற்றத்தாரின் துயர் நீக்கித் தாங்கிக் காக்கும் தூண் ஆவான். 615

முயற்சி உடைமை செல்வத்தைப் பெருக்கும்; முயற்சி இல்லாமை ஏழ்மையை நுழைத்து விடும். 616

கரிய மூதேவி சோம்பல் உள்ள இடத்திலே இருப்பாள் என்றும், தாமரை வீட்டாளாகிய திருமகள் முயற்சி உள்ள இடத்தை அடைவாள் என்றும் கூறுவர். 617

நல்ல ஊழ் இல்லாதிருத்தல் எவர்க்கும் பழியாகாது; அறிய வேண்டியவற்றை அறிந்து முயன்று வினை செய்யாதிருத்தலே பழிப்பாகும். 618

ஊழ் வலியால் ஒரு செயல் முற்ற முடியா விட்டாலும், தன் உடலை வருத்தி உழைத்ததற்கேற்ற ஊதியத்தை முயற்சி கொடுத்தே தீரும். 619

சோர்வில்லாமலும் காலம் தாழ்த்தாமலும் முயன்று செயலாற்றுபவர், அச் செயலைத் தடுக்கும் ஊழையுங் கூட அப்பால் தூக்கியெறிவர் 620

## 63. இடுக்கண் அழியாமை

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல். 621

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும். 622

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர். 623

மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. 624

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும். 625

அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றா தவர். 626

இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல். 627

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். 628

இன்பத்துள்இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன். 629

இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு. 630

## 63. துன்பத்திற்குக் கலங்காமை

துன்பம் வந்தபோது சிரிப்பீராக! அத்துன்பத்தை நெருக்கி மேலேறி ஊர்ந்து (சவாரி) செல்லக் கூடிய கருவி அச்சிரிப்பைப் போல் வேறொன்றும் இல்லை. 621

வெள்ளம் போல் அளவற்று வந்த துன்பங்களும் அறிவாளி மன ஊக்கத்துடன் அவற்றை இழிவாய் எண்ணிய அளவில் மறைந்துவிடும். 622

துன்பம் வந்து விட்டதற்காகத் துன்பப் படாதவர் அத் துன்பத்திற்கே துன்பம் கொடுத்து ஓட்டுவர். 623

துன்பம் தடைப்படுத்திய போதெல்லாம், எங்கும் வண்டியிழுக்கும் எருதுபோல நின்று தாக்குப் பிடிப்பவன் அடைந்த துன்பம் துன்பப்பட்டு விடும். 624

மேன்மேலும் தொடர்ந்து வந்தாலும் உள்ளம் உடையாத வனை அடைந்த துன்பங்கள் துன்பப்பட்டு ஓடும். 625

செல்வம் உள்ளபோது பெற்று விட்டோம் என்று தம்மிடமே வைத்துக் காவல் காப்பதை அறியாதவர்கள், செல்வம் அற்ற போது 'இழந்து விட்டோம்' என்று துன்பப்படுவார்களா? 626

மேலோர், உடம்பு துன்பத்திற்கு இலக்காவது இயற்கை என்று அறிந்து கொண்டு கலக்கத்தைக் கலக்கமாகப் பொருட்படுத்த மாட்டார்கள். 627

இன்பம் ஒன்றையே விரும்பாதவனாய், துன்பம் வருதல் இயற்கை என்பதை உணர்ந்திருப்பவன் என்றும் துன்பம் அடைதல் இல்லை. 628

இன்பம் வந்தபோது அந்த இன்பத்தை இன்புற்றுப் பொருட்படுத்தாதவன், துன்பம் வந்தபோது அந்தத் துன்பத்தால் துன்புறுதல் இல்லை. 629

துன்பத்தை இன்பமாக எண்ணும் உளப்பான்மையை ஒருவன் கொண்டால், தன் பகைவரும் விரும்பும் பெருமிதம் அவனுக்குக் கிடைக்கும். 630

## 64. அமைச்சு

கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு. 631

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு. 632

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு. 633

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு. 634

அறனறிந்து ஆன்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை. 635

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற் பவை. 636

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல். 637

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன். 638

பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும். 639

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர். 640

## 64. அமைச்சரது இயல்பு

செயலுக்கு வேண்டிய கருவி, ஏற்ற காலம், செய்யும் திறம், செய்யும் அரிய செயல் ஆகியவற்றை மாண்புடன் அறிந்து நடப்பவனே அமைச்சன். 631

அஞ்சாமை, நற்குடிப் பிறப்பு, உயிர்களைக் காக்கும் திறன், கல்வியறிவு, முயற்சி ஆகிய ஐந்தும் ஒரு சேரச் சிறப்புற்றிருப்பவனே அமைச்சன். 632

பகைவர்க்கு வேண்டியவரைப் பிரித்து விடுதலும், அவர்க்கு வேண்டுவன செய்து அவரைத் தம் பக்கம் இழுத்துக் கொள்ளலும், தம்மை விட்டு முன் பிரிந்தவரைச் சேர்த்துக் கொள்ளலும் வல்லவனே அமைச்சன். 633

எதையும் நன்கு ஆராய்தலும், ஆராய்ந்த பின்பே செய்தலும், தக்கது இது தகாதது இது என உறுதியாகத் துணிந்து சொல்லலும் வல்லவனே அமைச்சன். 634

அறத்தை உணர்ந்து, அறிவு நிறைந்தமைந்த சொல் பேசுபவனாய், என்றும் செயலாற்றும் வழிமுறை அறிந்தவனே அரசனுக்குச் சூழ்ச்சித் துணைவன். 635

நூல் கற்ற அறிவோடு இயற்கையான அறிவு நுட்பமும் உடையவர்க்கு, மிகுந்த நுட்பம் உடையவனாய் முன்னிற்கும் செயல்கள் யாவை உள? 636

புதிய செய்முறைகளை அறிந்திருந்தாலும், உலகத்தின் இயற்கையான நடைமுறையையும் அறிந்து அதற்கேற்ப அமைச்சன் செயல்பட வேண்டும். 637

பிறரது அறிவுரையையும் அழித்துத் தானாகவும் அறிய முடியாதவனாய் அரசன் இருந்தாலும், அருகிலிருக்கும் அமைச்சன் அரசனுக்கு நன்மையானவற்றை அஞ்சாது எடுத்துரைத்தல் கடமையாகும். 638

அரசனுக்குக் கேடு சூழும் அமைச்சனை விட, பக்கத்தில் எழுபது கோடி பகைவர் இருப்பது நல்லது. 639

திறமையற்ற அமைச்சர், முன் கூட்டி முறைப்படி ஆராய்ந்திருப்பினும் செயல்களை நிறைவேறாதனவாய்ச் செய்து விடுவர். 640

## 65. சொல்வன்மை

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று. 641

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு. 642

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல். 643

திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங்கு இல். 644

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. 645

வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள். 646

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது. 647

விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின். 648

பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர். 649

இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார். 650

## 65. பேச்சுத் திறமை

நாக்கு நயம் என்கின்ற நன்மை ஒருவகை உடைமையாகும். அந்த நாக்கு நலம், மற்ற நலங்களுள் ஒன்றாய் அடங்காமல் யாவற்றினும் சிறந்ததாம். 641

பேச்சைக் கொண்டு வளர்ச்சியும் அழிவும் ஏற்படுவது உண்டாதலால், பேச்சில் சோர்வு ஏற்படாதபடிப் பார்த்துக் காத்துக் கொள்ள வேண்டும். 642

கேட்டவரைக் கட்டிக் கவரும் தகுதி பெற்று, கேட்காதவரும் விரும்பிக் கேட்கும்படி சொல்லுவதே சிறந்த சொல்லாகும். 643

சொற்களைப் பேசும் முறையறிந்து பேசுக; அங்ஙனம் பேசுவதை விடச் சிறந்த அறமும் பொருளும் வேறில்லை. 644

வேறொருவரது சொல் தன் சொல்லை வெல்லக் கூடிய சொல்லாக இல்லாதபடிப் பார்த்துச் சொல்லைச் சொல்லுவாயாக. 645

பிறர் விரும்பிக் கேட்கும்படி தாம் பேசி, அவர் சொல்வதில் உள்ள நன்மையைத் தாம் எடுத்துக் கொள்வதே குற்றமற்ற மாண்பு உடையவரது கொள்கை. 646

சொல்வன்மை உடையவனாயும் சோர்வு இல்லாதவனாயும் அஞ்சாதவனாயும் உள்ள ஒருவனைப் பகைகொண்டு வெல்லுதல் எவர்க்கும் இயலாது. 647

நேர்ந்து நிரவி இனிமையாகச் சொல்ல வல்லவரைப் பெற்றால், அவர் இடும் வேலையை உலகம் விரைந்து கேட்டுச் செய்யும். 648

குற்றம் இல்லாதவையாய்ச் சில சொற்களையும் சொல்லத் தெரியாத சிலர், பல சொற்கள் பேச மிகவும் விரும்புகின்றனர். 649

கற்ற கருத்துக்களைப் பிறர் தெளியும்படி விரித்து விளக்கத் தெரியாதவர்கள், கொத்தாக மலர்ந்தும் மணம் வீசாத மலர்களைப் போன்றவர் ஆவர். 650

## 66. வினைத்தூய்மை

துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும். 651

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. 652

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர். 653

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 654

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று. 655

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 656

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. 657

கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 658

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. 659

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று. 660

# 66. செயல் ஒழுங்கு

கிடைத்த துணையின் நன்மை ஆக்கம் அளிக்கும்; செயல் நன்மையோ விரும்பிய யாவும் ஈயும். 651

புகழும் நன்மையும் கொடுக்காத செயல்களை எப்போதும் செய்யாது நீக்க வேண்டும். 652

'யாம் வளர்ச்சி பெறுவோம்' என்று கருதியிருப்பவர், புகழ் மங்கும் செயல்களை விலக்க வேண்டும். 653

கலங்காத நல்லறிவினர், தாம் துன்பத்துள் அகப்படினும், அத்துன்பம் போக்குவதற்காக இழிசெயல்களைச் செய்ய மாட்டார்கள். 654

'என்ன செய்துவிட்டேன்' என்று பின்பு வருந்தும் படியான செயல்களைச் செய்யலாகாது; தவறிச் செய்து விட்டால், மறுபடியாயினும் அத்தகைய செயல்களைச் செய்யாதிருப்பது நல்லது. 655

பெற்ற அன்னையின் பசியைக் கண்டு கலங்கினான் ஆனாலும், அப்பசி போக்குவதற்காகப் பெரியோர் பழிக்கும் தீய செயல்களைச் செய்ய வேண்டா. 656

பழிச் செயல் புரிந்து அடைந்த செல்வத்தை விட, அது செய்யாத பெரியோர்களின் மிக்க வறுமையே மேலானது. 657

செய்யக் கூடாதெனச் சான்றோர் கடிந்த செயல்களைத் தாமும் கடிந்து விலக்காமல் செய்தவர்க்கு, அச்செயல்கள் நிறைவேறினாலும் பின்பு துன்பமே விளைவிக்கும். 658

பிறர் அழும்படி வருத்திப் பெற்ற பொருள் எல்லாம் பின்தான் அழும்படி வந்தவழியே திரும்பி விடும்; நல்வழியில் வந்த பொருள்களை முதலில் இழந்தாலும் பின் நன்மை விளைக்கும். 659

வஞ்சகச் செயலால் பொருள் ஈட்டிக் காத்தல் என்பது, சுடாத பச்சை மண்பாண்டத்துள் நீரை ஊற்றி அதை அதிலேயே இருத்த முயல்வது போன்றது. 660

# 67. வினைத்திட்பம்

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற. 661

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள். 662

கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்
எற்றா விழுமந் தரும். 663

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல். 664

வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும். 665

எண்ணிய எண்ணியாங்கு எய்துபவ எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின். 666

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து. 667

கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். 668

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 669

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு. 670

## 67. செயலில் உறுதி

செயலில் உறுதி எனப்படுவது ஒருவனது உள்ளத்தின் உறுதியே; மற்ற உறுதிகள் எல்லாம் அப்பாற் பட்டனவே. 661

ஆராய்ந்தறியும் அமைச்சரது கோட்பாடு, துன்பம் வராமல் முன் கூட்டித் தடுத்தல், தவறி வந்துவிட்டால் கலங்காமை ஆகிய இரண்டு வழிகளைப் பின்பற்றியிருக்கும் என்பர். 662

செய்யும் அருஞ் செயலை, இறுதியில் எல்லோருக்கும் தெரியும்படி மறைவாகச் செய்து வருவதே ஆண்மை; நடுவிலே தெரியின் நீங்காத் துயர்விளைக்கும். 663

இப்படிச் செய்யலாம் - அப்படிச் செய்யலாம் என வாயால் சொல்லுதல் எல்லோர்க்கும் எளிது; சொல்லியபடிச் செய்தலோ அரிது. 664

பெருமிதம் உற்றுச் சிறந்த அமைச்சரின் செயல் உறுதி, அரசனது பார்வையில் உறப் பெற்று உயர்வாகக் கருதப்படும். 665

செய்ய எண்ணியவர் உறுதியுடையவராய் அமையப் பெற்றால், எண்ணியவற்றை எண்ணியபடியே கட்டாயம் அடைவார். 666

உருண்டோடும் பெரிய தேருக்கு அச்சில் உள்ள ஆணியைப் போல் திண்மையானவரை உடையது இவ்வுலகம்; எனவே எவரையும் உருவத்தின் எளிமை நோக்கி இகழலாகாது. 667

கலங்காமல் முடிவு கண்ட செயலைச் செய்யும்போது, சோராமல் தூக்கத்தையும் நீக்கி உறுதியுடன் செய்க. 668

இன்பம் தரும் செயலை, நடுவிலே துன்பம் மிக வந்தாலும் துணிச்சல் கொண்டு செய்க. 669

எப்பேர்ப்பட்ட வேறு உறுதிகள் உடையவராயிருப்பினும், செயலில் உறுதியை விரும்பாதவரை உலகம் விரும்பாது. 670

## 68. வினைசெயல்வகை

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது. 671

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை. 672

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல். 673

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும். 674

பொருள் கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல். 675

முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 676

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல். 677

வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானயாத் தற்று. 678

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல். 679

உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து. 680

## 68. செயல் செய்யும் முறை

ஆராய்ச்சியின் முடிந்த முடிபு ஒரு துணிவுக்கு வருதல்தான்; அவ்வாறு துணிந்த செயலைக் காலத்தாழ்ச்சியில் கிடத்தி வைப்பது தீமை தரும். 671

பொறுத்துச் செய்யக் கூடிய செயல்களைப் பொறுமையில் செய்க; பொறுத்துத் தூங்காமல் விரைந்து முடிக்க வேண்டிய செயல்களை விரைவிற் செய்க. 672

முடியும் போதெல்லாம் செயல் புரிதல் நல்லது; ஒரு செயல் ஒரு நேரம் முடியாததாயின் வாய்ப்பு நேரும் நேரம் பார்த்துச் செய்து முடிக்க. 673

எடுத்துக் கொண்ட செயல், வெல்ல முயன்ற பகை ஆகிய இரண்டையும் குறையாக விட்டு வைப்பது, எண்ணிப் பார்த்தால், முற்றும் அணைக்காமல் குறையாக விட்ட தீயைப் போல் பின் மூண்டு அழிக்கும். 674

செயலுக்கு வேண்டிய பொருள், கருவி, காலம், செய்ம்முறை, இடம் ஆகிய ஐந்தையும் மயக்கம் அற ஆராய்ந்து செயல் செய்க. 675

செயல் முடிக்கும் வழியும், இடையில் வரக் கூடிய தடையும், செயல் முடித்தபின் பெறக் கூடிய பெரும் பயனும் ஆகியவற்றை ஆராய்ந்து செயல் செய்க. 676

செயல் செய்பவன் செய்ய வேண்டிய முறையாவது, அச் செயலின் உள் நுணுக்கங்களைப் பட்டறிவால் தெரிந்திருப்பவனது கருத்தை ஏற்று நடத்தலாகும். 677

ஒரு செயல் புரியுங்கால் அதைக் கொண்டு இன்னொரு செயலை முடித்துக் கொள்ளுதல், மதத்தால் நனைந்த கன்னத்தை உடைய ஒரு யானையைக் காட்டி மற்றொரு யானையைப் பிடிப்பது போன்றதாம். 678

நண்பர்க்கு நல்லவை செய்வதனினும், தம்மோடு பொருந்தாதவரைப் பொருத்தி நட்பாக்கிக் கோடல் விரைந்து செய்யப்பட வேண்டும். 679

உறையும் நாடு சிறியவராயிருப்பவர் தம் மக்கள் உள் நடுங்குவதற்கு அஞ்சி, குறை தீர்வதானால், தம்மினும் பெரியவரைப் பணிந்து உதவி பெறுவர். 680

## 69. தூது

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு. 681

அன்பறிவு ஆராய்ந்தசொல்வன்மை தூதுரைப் பார்க்கு
இன்றி யமையாத மூன்று. 682

நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு. 683

அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு. 684

தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது. 685

கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது. 686

கடனறிந்து காலம் கருதி இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை. 687

தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு. 688

விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன். 689

இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது. 690

# 69. தூது செல்பவன் இயல்பு

அன்பு உடைமை, உயர்ந்த குடிப் பிறப்பு, அரசன் விரும்பும் உயர் பண்பு உடைமை ஆகியவை, தூது பேசுபவனுக்கு உரிய இயல்புகளாம். 681

அன்பு, அறிவு, ஆராய்ந்து பேசும் பேச்சு வன்மை ஆகிய மூன்றும் தூதருக்கு இன்றியமையாதவை. 682

வேலேந்திய வேற்று மன்னரிடம் தன் வேந்தனுக்கு வெற்றி தரும் செயல் திட்டங்களைப் பேசும் தூதனுக்கு உரிய பண்பு, நூல் வல்ல அறிஞர்களுக்குள் சிறந்த நூல் வல்லவனாகத் தான் திகழ்வதுதான். 683

கூரிய அறிவு, கவர்ச்சியான தோற்றம், ஆராய்ச்சிப் படிப்பு ஆகிய இம்மூன்றின் சேர்க்கை உடையவன் தூது வேலைக்குச் செல்வானாக. 684

வேற்றரசரிடம் பல செய்திகளையும் தொடர்புடன் தொகுத்துச் சொல்லியும், விரும்பத் தகாதவற்றை விலக்கியும், கேட்பவர் மகிழப் பேசியும் தன் மன்னனுக்கு நன்மை விளைவிப்பவனே தூதன். 685

நல்லன கற்று, பிறர் கடும்பார்வைக்கு அஞ்சாது கேட்பவர் உள்ளத்தில் பதியும்படிப் பேசி, காலத்துக்கு ஏற்ற நடைமுறையை அறிபவனே தூதன். 686

கடமை உணர்ந்து உரிய காலம் பார்த்து ஏற்ற இடமறிந்து ஆராய்ந்து பேசும் தூதனே சிறந்தவன். 687

தூய தன்மை, தக்க துணை உடைமை, துணிச்சல் உடைமை ஆகிய மூன்றின் உண்மை, தன் அரசன் வழி நின்று பேசும் தூதனது பண்பு. 688

குற்றமான பேச்சுக்களை வாய் தவறியும் பேசாத திண்மை உடையவனே, தன் மன்னன் சொல்லி விடுத்த செய்தியை வேற்றரசரிடம் சொல்வதற்கேற்ற தூதன். 689

தனக்கு முடிவு நேரினும் விடாமல் தன் மன்னர்க்கு நன்மை தேடுபவனே நல்ல தூதன். 690

## 70. மன்னரைச் சேர்ந்தொழுகல்

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். 691

மன்னர் விழைப விழையாமை மன்னரால்
மன்னிய ஆக்கந் தரும். 692

போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது. 693

செவிச் சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து. 694

எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை. 695

குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல். 696

வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல். 697

இளையர் இனமுறையர் என் றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும். 698

கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர். 699

பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும். 700

## 70. அரசரைச் சார்ந்து வாழும் முறை

வலிய அரசரைச் சார்ந்து வாழ்பவர், மிக நீங்காமலும் மிக நெருங்காமலும் நெருப்பின் முன் குளிர் காய்பவர் போல் நடுவாக நடந்து கொள்க. 691

அரசர் விரும்பும் பொருள்களைத் தாம் விரும்பாதிருக்கும் பண்பு, அரசரால் நிலைத்த ஆக்கம் கிடைக்கும்படிச் செய்யும். 692

தம்மைக் காக்க எண்ணினால், அரிய பொருட்களைப் போற்றிக் காக்க; தம்மேல் ஐயுற்ற பின்னர் அரசரை நம்ப வைத்தல் யார்க்கும் இயலாது. 693

உயர்ந்த பேரரசர் எதிரில், மற்றொருவனது காதோடு பேசுதலையும் அவனோடு சேர்ந்து சிரிப்பதையும் விலக்கி ஒழுகுக. 694

அரசர் பேசும் எந்த மறைபொருளையும் ஒட்டுக் கேளாதவராய் அரசரைப் பின் தொடராதவராய் இருந்து, பிறகு அந்த மறைபொருளை அரசர் தாமாக வெளிவிடும்போதுதான் கேட்க வேண்டும். 695

அரசரது குறிப்பு அறிந்து ஏற்ற காலம் நோக்கி அரசர் வெறுக்காதவற்றையும் விரும்புகின்றவற்றையும் அவர் மனம் மகிழும்படிச் சொல்லுக. 696

அரசர் விரும்பும் பயனுள்ள செய்திகளை அவர் கேட்காமலேயே சொல்லி, பயனில்லாச் செய்திகளை அவர் கேட்டாலும் என்றும் சொல்லாது விடுக. 697

'வேந்தர் என்னிலும் இளையர்; எனக்கு இன்ன தொடர்பு முறை உடையவர்' என்று இகழாது அவருக்கு உள்ள புகழொடு பொருந்த நடக்க வேண்டும். 698

கலக்க மற்ற அறிவுடையவர், அரசரால் ஏற்றுக் கொள்ளப்பட்டோம் என்று நம்பி, அரசர் ஏற்றுக் கொள்ளாத தீச் செயல்களைச் செய்யார். 699

'யாம் மன்னர்க்கு மிகப் பழைய தொடர்புடையோம்' என்று எண்ணிப் பண்பு அற்ற செயல் புரியும் உரிமைத் தன்மை அழிவு விளைக்கும். 700

# 71. குறிப்பறிதல்

கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி. 701

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல். 702

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல். 703

குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு. 704

குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண். 705

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். 706

முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும். 707

முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின். 708

பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வாப் பெறின். 709

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற. 710

# 71. கூறாமலே குறிப்பு உணர்ந்து நடத்தல்

ஒருவர் சொல்லாமலேயே அவரது முகத்தைப் பார்த்து அவர் உள்ளத்தில் குறித்த எண்ணத்தை அறிய வல்லவன், வற்றாத கடல் சூழ்ந்த உலகினர்க்கு ஓர் அணிகலன் போன்றவன். 701

ஒருவரது உள்ளத்தில் உள்ளதை ஐயத்திற்கு இடமின்றித் தெளிவாக உணரவல்லவனைத் தெய்வத்திற்கு நிகராக மதிக்க வேண்டும். 702

பிறரது உள்ளத்தின் குறிப்பைக் குறிப்பால் உணரக் கூடியவரை, அரசர் தம்ஆட்சி உறுப்புக்களுள் எதைக் கொடுத்தாயினும் துணையாகப் பெறுக. 703

ஒருவர் உள்ளத்தில் எண்ணியதை அவர் கூறாமலே உணர்ந்து கொள்பவரோடு மற்றையவர் உறுப்பால் ஒத்துள்ளன ராயினும் அறிவால் வேறாவர். 704

ஒருவரது உள்ளக் குறிப்பைக் குறிப்பாகக் கண்கள் அறிய மாட்டா என்றால், உறுப்புக்களுள் கண்கள் வேறு என்ன நன்மை பயக்குமோ? 705

தன் எதிரே அடுத்த பொருளை உள்ளவாறு காட்டும் பளிங்கு (கண்ணடி) போல, உள்ளத்தில் மிக்குள்ள எண்ணத்தை முகம் அப்படியே அறிவிக்கும். 706

உள்ளம் மகிழ்ந்தாலும், வெறுத்தாலும் அக் குறிப்பை முகம் தான் முந்திக் காட்டிவிடும். எனவே முகத்தை விட அறிவு முதிர்ந்த பொருள் வேறு உளதோ? 707

தம் உள்ளத்தைக் குறிப்பால் நோக்கி உற்ற எண்ணத்தை அறிய வல்லவரைப் பெற்றால், தாம் ஒன்றும் கூறாமல் அவரது முகம் நோக்கி நின்றால் போதும். 708

கண்ணோக்கத்தின் கூறுபாடுகளை அறிய வல்லவர் இருந்தால், பிறர் உள்ளத்தில் உள்ள பகையையும் நட்பையும் அவர் கண்களே உரைக்க அறியலாம். 709

'யாம் நுண்ணிய அறிவுடையேம்' என்பவர் பிறரது உள்ளத்தை அளக்க உதவும் அளவு கோல், ஆராயுங்கால், அவர் கண்கள் தவிர வேறில்லை. 710

# 72. அவை அறிதல்

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 711

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர். 712

அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல். 713

ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல். 714

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு. 715

ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு. 716

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து. 717

உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. 718

புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார். 719

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல். 720

## 72. அரச அவையை அறிந்து அதற்கேற்ப ஒழுகல்

சொற் கூட்டத்தைக் கற்றறிந்த தூயவர், அரசவையின் இயல்பறிந்து சொல்ல வேண்டியவற்றை ஆராய்ந்து சொல்வாராக. 711

மொழி நடையை அறிந்த நன்மை உடையவர், அவையின் சூழ்நிலை அறிந்து எதையும் நன்கு உணர்ந்து சொல்வாராக. 712

அவையின் இயல்பு அறியாதவராய்ப் பேசுதலைச் செய்பவர், பேச்சின் திறம் அறியாதவர் ஆவர்; அவர் பேச வல்லதும் இல்லை. 713

அறிவு மிக்கவரின் முன் தாமும் அறிவு மிக்கவராய் நடந்து கொள்ள வேண்டும்; அறிவிலிகள் முன்போ தாமும் வெள்ளைச் சுண்ணாம்பின் நிறம் போல் ஒன்றும் இன்றி வெளுத்துக் காணப்பட வேண்டும். 714

பெரியோரிடையே முந்தி முந்திப் பேசாத அடக்கம், நல்லவற்றுக்குள் எல்லாம் நல்லதாகும். 715

பரந்த அறிவு பெற்றுணர்ந்த பெரியோர்முன்பு தவறி நடத்தல், ஆற்று வெள்ளத்தில் நிலை தளர்ந்து சோர்ந்தது போன்றதாம். 716

பிழையறச் சொற்களை ஆராயவல்ல பெரியோர் அவையிலே, நன்கு கற்றறிந்தவரின் கல்வி புகழொளி வீசும். 717

இயல்பாகவே உணர்ந்து புரிந்து கொள்ளும் ஆற்றல் உடையவர்முன் கருத்துக்களை விளக்கிப் பேசுதல், இயற்கையாகவே நன்கு வளரும் பயிரின் பாத்தியில் மேலும் நீர் சொரிந்தது போன்றதாகும். 718

நல்லோர் அவையில் நன்கு பதியுமாறு பேச வல்லவர், புல்லோர் குழுவில் மறந்தும் பேசற்க. 719

தமக்கேற்ற நற்குழுவினர் அல்லாதார்முன் சொற்பொழிவு செய்தல், கழிவுநீர்ச் சேற்றில் கொட்டிய அமிழ்தம்போல் பாழ்படும். 720

## 73. அவை அஞ்சாமை

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர். 721

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார். 722

பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர். 723

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். 724

ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு. 725

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு. 726

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சு மவன்கற்ற நூல். 727

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார். 728

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லார் அவையஞ்சு வார். 729

உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார். 730

## 73. அவையில் நடுங்காது பேசுதல்

சொற்கூட்டத்தைக் கற்றறிந்த தூயவர், பேசும் வகை அறிந்து வெல்லவல்ல சொற்களை வாய் சோராமல் பேசுவார். 721

கற்றவர்முன்னே தாம் கற்ற கருத்துக்களை வெற்றிபெற எடுத்து மொழியவல்லவர், கற்றவருக்குள் சிறக்கக் கற்றவராகக் கருதப்படுவர். 722

பகைக் களத்திலே போரிட்டுச் சாகக் கூடியவர் உலகில் எளிதாய்க் கிடைப்பர்; கற்றார் அவையிலே அஞ்சாது பேசுபவர் அரிதாகவே யிருப்பர். 723

கற்றவர்முன் தாம் கற்றவற்றைப் பதியுமாறு சொல்லி, தாம் கற்றவற்றினும் மிகுதியாகக் கற்றவரிடம் அம் மிகுதியான கல்வியைக் கேட்டு அறிக. 724

அவையிலே அஞ்சாது பதில் தந்து பேசுவதற்காக, கற்கும் முறைப்படி அளவை (ஆதார) நூற்களை ஆராய்ந்தறிந்து கற்க வேண்டும். 725

ஆண்மையுடையவர் அல்லாதவர்க்கு வாளோடு என்ன உறவு? நுண்ணறிவினரின் அவையிலே பேச அஞ்சுபவர்க்கு நூற்களோடு என்ன உறவு? 726

ஆன்றோர் அவையில் பேச அஞ்சுபவன் கற்ற நூல், பகைக் களத்திலே பேடி கையில் ஏந்திய கூர் வாள் போன்றது. 727

நல்லோர் அவையிலே நன்கு பதியுமாறு கருத்துக்களை விளக்கத் தெரியாதவர், பலதுறை நூற்களைக் கற்றிருப்பினும் பயன் இல்லாதவரே. 728

கற்றுணர்ந்தும் நல்லார் அவையிலே பேச அஞ்சுபவர், கல்லாத மூடரினும் கடைப்பட்டவர் என்று சொல்வர். 729

அவைக் களத்திற்கு அஞ்சி நடுங்கி, தாம் கற்றறிந்த கருத்துக்களை வெற்றிபடச் சொல்லத் தெரியாதவர், உயிருடன் இருக்கின்றார் எனினும் இறந்தவரோடு நிகராவர். 730

# 74. நாடு

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. 731

பெரும் பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு. 732

பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு. 733

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. 734

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு. 735

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டில் தலை. 736

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு. 737

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 738

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. 739

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. 740

# 74. சிறந்த நாட்டின் இயல்பு

குன்றாத விளைபொருளும் தகுதிமிக்க பெரியோரும் தாழ்வு இல்லாத செல்வர்களும் ஒருங்கு சேர்ந்திருக்கப் பெற்றிருப்பதே நல்ல நாடு. 731

மிகுந்த பொருள் வளத்தால் எவரும் விரும்பத் தக்கதாகி, அழிவு இல்லாமல் மிக மிகப் பொருள் விளைவதே உயர் நாடு. 732

ஒருசேர எவ்வளவு மக்கள் சுமை மேன்மேலும் ஏற்பட்டாலும் தாங்கிக் காத்து, அரசனுக்கு வரிப் பொருள் அனைத்தையும் செலுத்துவதே நாடு. 733

மிகுந்த பசியும், நீங்காத நோயும், அழிக்கும் பகையும் அணுகவொட்டாமல் நடப்பதே நாடு. 734

ஒற்றுமையின்றிப் பலவாகப் பிரிந்த குழுக்களும், ஆட்சியைப் பாழ்படுத்தும் உள்நாட்டுப் பகைவர்களும், அரசனைத் துன்புறுத்தும் கொலைகாரக் குறும்பர்களும் இல்லாததே சிறந்த நாடு. 735

எப்போதும் அழிவு என்பதையே அறியாததாய், தப்பித் தவறி அழிவு நேரினும் வளப்பம் குன்றாததான நாடே நாடுகளுக்குள் தலையாயது. 736

மேலிருந்து மழை நீர் - கீழிருந்து ஊற்று நீர் ஆகிய இரு வகை நீர் வளமும், வளம் வாய்ந்த மலையும், மலையிலிருந்து ஓடிவரும் ஆற்று நீரும், வலிய காவல் நிலைகளும் நாட்டிற்கு வேண்டிய உறுப்புக்களாம். 737

நோயின்மை, செல்வம், நல்ல விளைச்சல், இன்பம், தக்க காவல் ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அணிகலம் என்பர். 738

மக்கள் நாடித் தேடாமலேயே வளம் தருவனவே உண்மையான நாடுகள் என்பர்; வருந்தித் தேடினால் வளப்பம் தரும் நாடுகள் நாடுகள் ஆகா. 739

ஆங்கு எல்லா நலங்களும் வளங்களும் அமையப் பெற்றிருப்பினும் நல்ல வேந்தன் அமையப் பெறாத நாடு பயன் இல்லா ததே. 740

## 75. அரண்

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள். 741

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண். 742

உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல். 743

சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண். 744

கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீரது அரண். 745

எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடையது அரண். 746

முற்றியும் முற்றா தெரிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரியது அரண். 747

முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வது அரண். 748

முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்டது அரண். 749

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண். 750

# 75. வலிய அரணது இயல்பு

எதையும் தாங்கும் ஆற்றல் உடையவர்க்கும் அரண் (காவல் நிலை) இன்றியமையாப் பொருளாம்; ஆற்றல் இன்றி அஞ்சித் தற்காத்துக் கொள்வோர்க்கும் இன்றியமையாதது அது. 741

நீலமணியின் நிறமுடைய நீர்நிறை அகழியும், மணல்வெளியும், உயர்ந்த மலையும், அழகிய நிழல்தரும் அடர்ந்த காடும் உடையதே முழு அரணாம். 742

உயரமும் அகலமும் உறுதியும் அரிய நுட்பங்களும் ஆகிய நான்கும் அமைந்த மதிலையே சிறந்த அரண் என்று உரைப்பர் போர் நூலார். 743

காக்கும் வாயில்வழி சிறியதாய், உள்ளே பெரிய இடமுடையதாய், உற்ற பகைவன் கண்ட அளவில் அவனது ஊக்கத்தைக் கெடுக்க வல்லதே அரண். 744

பகைவரால் கொள்ள முடியாததாய், நிறைந்த உணவுப் பொருள் உடையதாய், உள்ளிருப்போர் நிலைத்து நிற்றற்கு வசதியான இயல்பினதே அரண். 745

உள்ளிருப்போர்க்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் உடையதாய், உற்ற இடத்தில் உதவக் கூடிய நல்ல மறவர்களையும் உடையதே அரண். 746

பகைவர் சூழ்ந்து முற்றுகையிட்டோ, முற்றுகை நீக்கிப் போர் புரிந்தோ, உள்ளிருப்போரை ஏமாற்றியோ கைப்பற்ற முடியாததே அரண். 747

முற்றுகைத் தொழிலைத் திறமுடன் செய்து முற்றுகை யிட்டிருக்கும் பகைவரையும், உள்ளிடத்தைப் பற்றி யிருக்கும் அரசர் அப்பற்றை உறுதியாகக் கொண்டு வெல்லக் கூடிய வகையில் உள்ளதே அரண். 748

பொருமுனையில் பகைவர் அறியும்படி உள்ளிருப்போர் புரியும் போர்வினையால் பெருமிதம் பெற்றுச் சிறந்திருப்பதே அரண். 749

அரண் தான் எத்தகைய சிறப்புக்களை உடையதாயினும், போர்வினைத் திறமையில்லாத மன்னரிடம் இருக்குமாயின் தான் இல்லாது அழியும். 750

## 76. பொருள் செயல்வகை

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள். 751

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு. 752

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. 753

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். 754

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். 755

உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள். 756

அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு. 757

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று
உண்டாகச் செய்வான் வினை. 758

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல். 759

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. 760

# 76. பொருள் தேடும் முறை

பொருட்படுத்தத் தகாதவரையும் ஒரு பொருளாக மதிக்கச் செய்யும் பொருளைத் தவிர வேறு சிறந்த பொருள் இல்லை. 751

பொருள் இல்லாதவரை யாவரும் இகழ்வர்; செல்வரை யாவரும் சிறப்பாக மதிப்பர். 752

பொருள் என்னும் குன்றா விளக்கு, தன்னை உடையவர் எண்ணிய நாடுகட்கெல்லாம் சென்று அவரது இருண்ட துயர் நீக்கும். 753

ஈட்டும் முறை தெரிந்து தீங்கின்றி நல்வழியில் சேர்த்த பொருள், அறமும் அளிக்கும்; இன்பமும் ஈயும். 754

அருள் நெறியிலும் அன்பு வழியிலும் வராத பொருட் செல்வத்தைத் தொடாமல் அப்பால் தள்ளி விடுக. 755

தன்நாட்டில் கிடைக்கும் பொருளும், சுங்கப் பொருளும், தன் பகைவரை வென்று பெறும் கப்பப் பொருளும் அரசனுக்குச் செல்வங்களாம். 756

அன்பு என்னும் தாய்பெற்ற அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் செல்லமான செவிலித் தாயால் வளரும். 757

தன் கையிலே செயலுக்கு வேண்டிய ஒரு பொருளை வைத்துக் கொண்டு தொடங்கியவனது செயல், மலைமேல் ஏறிநின்று, யானைகள் இடும் போரை அஞ்சாது தெளிவாகப் பார்ப்பது போன்றதாம். 758

பொருளை மிகுதியாய்ச் சேர்க்க வேண்டும்; அதனினும், பகைவரது அகந்தையை அறுத்தெறியும் கூரிய வாள் வேறு இல்லை. 759

சிறந்த செல்வப் பொருளை நிரம்ப ஈட்டியவருக்கு, மற்ற அறம், இன்பம் என்னும் இரண்டும் ஒருசேர எளிதில் கிடைக்கத்தக்க பொருள்களாம். 760

## 77. படைமாட்சி

உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை. 761

உலைவிடத்து ஊறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது. 762

ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். 763

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை. 764

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை. 765

மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு. 766

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை யறிந்து. ,767

அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும். 768

சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை. 769

நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல். 770

# 77. படையின் சிறப்பு

எல்லாப் பிரிவுகளும் பெற்று இடையூறுகட்கு அஞ்சாமல் பகை வெல்லும் படை, அரசனுடைய செல்வங்களுக்குள் எல்லாம் சிறந்தது. 761

வெகு தொலைவில் போர் புரியும்போது அழிவு நேரினும் இடையூறுகட்கு அஞ்சாத ஆண்மை, பழம் பெரும் படைக்கு அல்லால் முடியாது. 762

கடல் இரைச்சலால் என்ன செய்துவிட முடியும்? பாம்பு மூச்சு விட்டாலே எலியாகிய பகை அழியும். 763

எதிரியால் அழியாததாய் ஏமாற்றப்படாததாய்த் தொன்றுதொட்டு வந்த வலிய ஆண்மையுடையதே சிறந்த படை. 764

எமனே சினந்து மேலெழுந்து வந்தாலும், ஒன்று கூடி எதிர்த்து நிலைத்து நிற்கும் வன்மையுடையதே படை. 765

வீரம், மானம், உயர்ந்த நெறியில் ஒழுகல், தெளிந்த உறுதி என்னும் நான்கும் உடைமை படைக்குக் காப்பாகும். 766

தன்மேல் வந்த போரை எதிர்த்துத் தாங்கும் முறை அறிந்து, எதிரியின் கொடிப் படையைத் தடுத்துத் தான் முன்னேறிச் செல்வதே படை. 767

எதிரியை அடித்து நொறுக்கும் வீரமும் எதையும் தாங்கும் ஆற்றலும் இல்லாவிடினும், தானையானது, படையெடுத்துச் செல்லும் மிடுக்கான தோற்றத்தாலேயே பெருமை பெறும். 768

கீழ்மையும் அரசரிடம் நீங்காத வெறுப்பும் ஏழ்மையும் இல்லையானால் படை வெற்றியடையும். 769

படையானது நிலைத்து நிற்கும் வீரர்களை மிகுதியாகப் பெற்றிருப்பினும், படைத் தலைவர்கள் இல்லை யெனில் தானும் இல்லாமல் அழியும். 770

## 78. படைச் செருக்கு

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்நின்று கல்நின் றவர். 771

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. 772

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. 773

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். 774

விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு. 775

விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து. 776

சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து. 777

உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர். 778

இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர். 779

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து. 780

# 78. படையின் வீரமிடுக்கு

பகைவர்காள்! என் தலைவன் முன்னே நிற்கவுஞ் செய்யாதீர்கள்; என் தலைவன் முன் எதிர்த்து நின்று இறந்து நடுகல்லாய் நின்றவர் பலர். 771

காட்டு முயலை எய்து வீழ்த்திய அம்பை விட, பெரிய யானைமேல் எறிந்து குறி தவறிப் போன வேலைத் தாங்குதல் இன்பமானது. 772

பகைவரை நொறுக்கும் வீரம் உடைமையே பெரிய ஆண்மை என்பர் பெரியோர்; அப்பகைவர்க்கு ஒரு துன்பம் நேரின் அவர்க்கும் உதவி செய்தல் அந்த ஆண்மைக்குக் கூர்மையாகும். 773

தன் கையில் இருந்த வேலை எதிரியின் யானை மேல் எறிந்து விரட்டி வேறு வேல் நாடிவரும் வீரன் ஒருவன், எதிரியால் எறியப்பட்டுத் தன் உடம்பில் தைத்துள்ள வேலை இழுத்தெடுத்துச் சிரிக்கிறான். 774

விழித்து நோக்கிய தம் கண்களை, பகைவர் வேல் கொண்டு எறிந்தபோது, மூடித் திறந்தால், அது மறவர்க்குப் புறமுதுகிட்டு ஓடிய தோல்வியாகும். 775

மறவன் தான் வாழ்ந்த நாட்களைக் கணக்கிட்டு, வெற்றிப் புண்படாத நாட்களைத் தான் வாழாது கழித்த நாட்கணக்கில் சேர்ப்பான். 776

எங்கும் பரவும் புகழை விரும்பி உயிரை விரும்பாத மறவர், தம் காலில் வீரக்கழல் கட்டுவது அழகான தோற்றம் உடையதாம். 777

ஊறு நேரின் உயிர்க்கு அஞ்சாத வீரர், அரசன் கடிந்து தடுக்கினும் வீரச் சிறப்பு குறைதல் இலர். 778

தாம் கூறிய சூளுரை தவறாதபடி போரிட்டுச் சாகக் கூடிய மறவரை, அவர் தவறி விட்டார் என்று தண்டிக்கத்தக்கவர் எவர் உளர்? 779

தம்மைக் காத்த அரசரது கண்களிலே நீர் பெருகும்படி பொருது சாவதானால், அப்படி ஒரு சாவு இரந்தாயினும் பெற்றுக் கொள்ளத்தக்கதாகும். 780

## 79. நட்பு

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு. 781

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு. 782

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. 783

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு. 784

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும். 785

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. 786

அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு. 787

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 788

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை. 789

இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு. 790

# 79. நட்பின் சிறப்பு

நட்பைப் போல் கொள்ளுவதற்குச் சிறந்த பொருள்கள் வேறு எவை உள்ளன? அந்நட்பைக் காப்பதுபோல் வினைகளுக்குள் அரிய வினைகள் எவை உள்ளன? 781

நல்லோர் நட்பு, பிறை நிலா வளர்வதுபோல் நிறையும் தன்மையது; மூடர் நட்போ, முழு நிலா பின்னால் தேய்வது போல் குறையும் தன்மையது. 782

நற் பண்பு உள்ளவரின் நட்பு, கற்குந்தோறும் நூற்கள் இன்பம் நல்குவதுபோல் பழகுந்தோறும் இனிக்கும். 783

நட்பு கொள்வது ஒருவரோடு ஒருவர் உரையாடிச் சிரிப்பதற்கு அன்று; நண்பர் முறைகடந்து நடந்தால் முற்சென்று இடித்துத் திருத்துவதாகும். 784

நட்புக்குப் பிரியாமல் சேர்ந்து பழக வேண்டும் என்பதில்லை; உள்ளம் ஒத்த உணர்ச்சியே நட்புரிமையை வளர்க்கப் போதுமானது. 785

முகம் சிரிக்கப் பழகுவது மட்டும் நட்பாகாது; உள்ளம் மகிழ உள்ளன்புடனும் பழகுவதே உயர் நட்பு. 786

நண்பனை அழிவு தரும் தீச் செயல்களிலிருந்து நீக்கி நல் வழியில் செலுத்தி, மீறி அழிவுவரின் தானும் துன்பத்தில் பங்கு கொண்டு வருந்துவதே உண்மை நட்பு. 787

பலர்முன் உடை நழுவியவனது கை உடனே சென்று பற்றி மானம் காப்பது போல, நண்பனுக்குத் துன்பம் வந்த அப்போதே ஓடி அத்துன்பத்தைப் போக்குவதே நல்ல நட்பு. 788

நட்பிற்கு நிலைபெற்ற நிலை எது என்றால், என்றும் மாறாமல் முடிந்த போதெல்லாம் தாங்கிக் காக்கும் தகுதியே. 789

எமக்கு இவர் இவ்வளவு அன்பினர் - யாம் இவர்க்கு இவ்வளவு உரிமை உடையோம் என்று புனைந்து விளக்கினும் நட்பு பொலிவற்றுப் போகும். 790

## 80. நட்பாராய்தல்

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. 791

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை நடைமுறை
தான்சாந் துயரம் தரும். 792

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு. 793

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. 794

அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல். 795

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் 796

ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல் 797

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. 798

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும். 799

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 800

# 80. ஆராய்ந்து நட்பு கொள்ளல்

ஆராயாது நட்பு கொள்வதை விடக் கெடுதி வேறு இல்லை; அப்படி நட்பு கொண்ட பின், நண்பர்களுக்குள் நட்பைக் கைவிடுதல் கூடாது. 791

ஆராய்ச்சிக்கு மேல் ஆராய்ச்சி செய்து நட்புக் கொள்ளாதவனுடைய தொடர்பு முடிவில் தான் இறக்கும்படியான துன்பத்தைக் கொடுக்கும். 792

ஒருவனுடைய குணத்தையும் குடிப் பிறப்பையும் செய்துள்ள குற்றங்களையும் கூடி உறவாடும் குழுவினரையும் ஆராய்ந்தறிந்து பின் அவனோடு நட்புக் கொள்க. 793

நற்குடியில் பிறந்து தன்னிடம் பழி வருவதற்கு வெட்கப்படுபவனை எது கொடுத்தாயினும் நண்பனாகக் கொள்ள வேண்டும். 794

நாம் செய்யும் அறம் அல்லாச் செயலை இடித்துக் கண்டித்து நாம் அழும்படி அறிவுரை கூறி, உலகியல் அறிந்து ஒழுக வல்லவரின் நட்பை ஆராய்ந்து கொள்ளுக. 795

நமக்குக் கெடுதி வருவதிலும் ஒரு நன்மை உண்டு; அக் கெடுதி, நம் நண்பரின் உண்மையன்பை நீட்டி அளந்து காண உதவும் ஒருவகை அளவு கோலாம். 796

ஒருவனுக்கு நல்ல ஊதியமாவது, அறிவிலார் தொடர்பை விலக்கி விடுதலாம். 797

மன உறுதியைக் குறுகச் செய்யும் செயல்களை எண்ணலாகாது; அதுபோல, துன்ப நேரத்தில் தொடர்பு அறுப்பவரின் நட்பைக் கொள்ளலாகாது. 798

கேடு வந்தபோது கைவிட்டு ஓடுபவரின் நட்பு, எமன் உயிரைக் கொல்லும்போது நினைத்தாலும் நெஞ்சத்தைச் சுட்டு வருத்தும். 799

குற்ற மற்ற நல்லோர் நட்பைக் கொள்ளுக; பொருந்தாத தீயோர் நட்பை யாதொரு பொருள் கொடுத்தாயினும் தள்ளுக. 800

# 81. பழைமை

பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு. 801

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன். 802

பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை. 803

விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின். 804

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின். 805

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு. 806

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர். 807

கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின். 808

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு. 809

விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார். 810

# 81. நெடுநாள் பழகிய நட்புரிமை

பழைய நட்பு என்று கூறப்படுவது எது என்றால், பழைய நண்பர் பழைமை பற்றிக் கொண்டாடும் உரிமை எதையும் சிதைக்காத நட்பேயாம். 801

நட்பிற்குச் சிறந்த உறுப்பாவது பழைய உரிமை பாராட்டுதலாகும்; மற்றும் அந்த உரிமைக்கு ஒத்துப் போதல் பெரியோர் கடமையாம். 802

நண்பர் பழைய உரிமை பாராட்டி ஒன்று செய்தபோது அதை ஏற்று அமைதி பெறாவிடின், நெடுநாள் பழகிய நட்பு யாது பயன் தரும்? 803

நண்பர் உரிமை பற்றித் தம்மைக் கேளாமலேயே ஒன்று செய்துவிடினும், அவர்மேல் உள்ள விருப்பத்தால் அவர் செயலையும் விரும்பி ஏற்றுக் கொள்வர் நல்லோர். 804

துன்பம் தரும் செயல்களை நண்பர் நமக்குச் செய்துவிடின், அதற்கு அறியாமை ஒன்று மட்டுமன்று - பெரிய உரிமையும் காரணம் என்று அறிக. 805

அன்பின் எல்லையில் நிற்கும் நல்லோர், தொல் நெடுங்காலமாய் நின்று நிலைத்த நண்பரின் நட்பை, அவரால் அழிவு நேர்ந்தபோதும் கைவிடார். 806

அன்புடன் கூடி நெடுநாளாய் வழிவழிவந்த நட்புடையவர், தம் நண்பர் அழிவு தரும் தீமைகள் செய்யினும் அன்பு நீங்கார். 807

நண்பர்மேல் பிறர் கூறும் குற்றத்தைக் காது கொடுத்துக் கேட்காத நல்லோர்க்கு அந்நண்பர் ஒரு நாள் தீங்கு செய்தால் அந்நாள் நன்னாளாம். 808

இடையே கெடாமல் தொன்றுதொட்டுப் பழகும் நண்பரின் நட்பைக் கைவிடாதவரை உலகம் விடாது விரும்பும். 809

பழைய நண்பரிடத்தில் பண்பு நீங்காமல் பழகுபவர், தம்மை விரும்பாத பகைவராலும் இனி விரும்பப்படுவர். 810

## 82. தீ நட்பு

பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது. 811

உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என். 812

உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர். 813

அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. 814

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று. 815

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும். 816

நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும். 817

ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல். 818

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு. 819

எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு. 820

# 82. தீய நட்பு

அன்பை அள்ளிப் பருகலாம்போல் தற்போது பழகுகிறார் ஆயினும், நற்பண்பு இல்லாதவரது நட்பு, வளர்வதை விடக் குறைதல் இனியது. 811

நன்மை உறுவதென்றால் நட்பு கொண்டு நன்மை இல்லையென்றால் விட்டுநீங்குகிற பொருத்தம் இல்லாத வரின் நட்டைப் பெற்றால் என்ன? இழந்தால் என்ன? 812

வரக் கூடிய நன்மையை மட்டும் ஆராய்கிற நண்பரும், கிடைப்பதைச் சுருட்டிக் கொள்ளும் விலை மகளிரும், திருடரும் ஒரு நிகர் ஆவர். 813

போர்க்களத்தில் தாங்காது பழிவாங்கும் அறிவற்ற விலங்காகிய குதிரையைப் போன்றவரைத் தம் நண்பராய்க் கொள்வதனினும் தனியா யிருத்தல் மேலானது. 814

எவ்வளவு செய்தும் தமக்குக் காவலாய் இல்லாத கீழோ ரின் இழி நட்பைப் பெறுவதினும் பெறாமை நல்லது. 815

அறிவிலியின் மிக நெருங்கிய நட்பை விட, அறிவு டையவரின் நட்பில்லாமை கோடி மடங்கு நன்று. 816

சிரித்துப் பேசிக் காலங்கழிப்பவரின் நட்பை விட, பகைவரால் பப்பத்துக் கோடி மடங்கு நன்மை உண்டு. 817

தம்மால் முடியக் கூடிய செயலையும் முடிக்காமல் கெடுப்பவரின் தொடர்பை, அவரிடம் சொல்லாமலேயே நழுவ விட்டுவிடுக. 818

செய்வது ஒன்றும் சொல்வது ஒன்றுமாக வேறுபட்டு நடப்பவரின் உறவு, ஐயோ கனவிலும் இன்பம் தராது துன்புறுத்தும். 819

தனியே இல்லத்திலே உறவாடி, பலர் நிறைந்த மன்றத்திலே வந்து பழித்துப் பேசுபவரது நட்பு சிறிதும் அணுகாதவாறு காத்துக் கொள்க. 820

## 83. கூடா நட்பு

சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு. 821

இனம்போன்ற இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும். 822

பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லார்
ஆகுதல் மாணார்க்கு அரிது. 823

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும். 824

மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று. 825

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும். 826

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 827

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து. 828

மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று. 829

பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல் 830

# 83. பொருந்தா நட்பு

உள்ளத்தே பொருந்தாமல் வெளியில் பொருந்தியவர் போல் நடிப்பவரின் நட்பு சரியான வாய்ப்பு கண்டால், அடித்தற்குரிய கொல்லுப் பட்டடை போல் நம்மை நசுக்குதற்குத் துணை புரியும். 821

நம் குழுவினர் போல் நடித்து உண்மையில் நம் குழுவினர் அல்லாதவரது நட்பு, விலைமகளிர் உள்ளம் போல் வேறுபட்டுத் திரியும். 822

பல சிறந்த நூற்களைக் கற்றிருந்த போதிலும் மனம் நல்லவராய்ப் பழகுதல், மாட்சிமை யற்றவர்க்கு இயலாது. 823

முகத்தால் இனிப்பாகச் சிரித்து மனத்தால் இனிமையற்றிருக்கிற கொடிய வஞ்சகரைச் சேர அஞ்ச வேண்டும். 824

மனத்தில் பொருத்தம் இல்லாதவரை, அவர் சொல்லைக் கொண்டு யாதொரு செய்தியிலும் நம்பக் கூடாது. 825

உண்மை நண்பர்போல் நல்லனவாகப் பேசினாலும், உள்ளம் பொருந்தாதவரது சொல்லின் உண்மைப் பொருள் விரைவில் அறியப்பட்டு விடும். 826

வில்லின் வணக்கம் (வளைவு) தீங்கு செய்யும் குறிக்கோள் உடையதாதலின், பகைவரின் சொல்லின் வணக்கத்தை உண்மையென்று கொள்ளக் கூடாது. 827

பகைவர் கூப்பி வணங்கும் கைக்குள்ளும் கொல்லும் படை ஒளிந்திருக்கும்; பகைவர் அழுது சிந்தும் கண்ணீரும் அதுபோன்றதே. 828

வெளியே மிகவும் நட்புச் செய்து உள்ளே தம்மை இகழ்பவரைத் தாமும் பொய்யாக மகிழச் செய்து நட்பிலே அழிவு நேரச் செய்ய வேண்டும். 829

பகைவர் நண்பர்போல் நடித்து நெருங்கும் காலம் வரின், தாமும் முகத்தால் நட்புற்று அகத்திலே நட்பை விலக்கி விடுக. 830

## 84. பேதைமை

பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல். 831

பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல். 832

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில். 833

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல். 834

ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு. 835

பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின். 836

ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை. 837

மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன்று உடைமை பெறின். 838

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன்று இல். 839

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல். 840

## 84. மடமை

பேதைமை என்கிற ஒன்று எது எனில், கேட்டைக் கைக் கொண்டு ஆதாயத்தைக் கைவிடுதலாம். 831

ஒழுக்கமுறையல்லாத செயலில் விருப்பம் கொள்ளுதல், மடமைக்குள் எல்லாம் பெரிய மடமையாம். 832

நாணம் இன்மை, எதையும் ஆராய்ந்து செய்யாமை, அன்பின்மை, உயர் பொருள் எது ஒன்றையும் போற்றிக் காவாமை ஆகியவை மடவோர் இயல்புகள். 833

கற்றறிந்தும் பிறர்க்கு எடுத்து அறிவுறுத்தியும் தான்மட்டும் அடங்காது நடக்கும் அறிவிலியைப் போன்ற அறிவிலிகள் எவரும் இலர். 834

ஏழு பிறவிகளில் தான் புகுந்து புதைந்துபடக் கூடிய நரக வேதனையை, அறிவிலி ஒரு பிறவியிலேயே செயலாற்றிச் சேர்த்து வைத்துக் கொள்வான். 835

முறை அறியாத பேதை ஒரு செயல் மேற்கொண்டால், அச் செயல் பொய்த்துத் தவறி விடுவது ஒன்று மட்டுமா? கை விலங்கும் பூண வேண்டி வரும். 836

பேதையானவன் பெரிய செல்வம் பெற்று வாழும் போது, அயலார் நிரம்ப உண்டு களிக்கச் சுற்றத்தார் பசித்திருப்பர். 837

அறிவிலி தன் கையிலே ஒரு செல்வத்தைப் பெற்று விடின், முதலிலேயே பித்துப் பிடித்த ஒருவன் அதன் மேலும் கள் உண்டு களித்து ஆடினாற் போலாகும். 838

பேதையரின் நட்பு ஒரு வகையில் பெரிதும் இனியது; ஏதெனில், பிரிய நேரும்போது (இன்பமே யன்றித்) துன்பம் தரத்தக்கது ஒன்றும் இல்லை. 839

சான்றோர் குழுவினுள் பேதை ஒருவன் நுழைதல், கழுவித் தூய்மை செய்யாத காலைப் படுக்கையில் வைப்பது போன்றதாகும். 840

## 85. புல்லறிவாண்மை

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு. 841

அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம். 842

அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. 843

வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. 844

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும். 845

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி. 846

அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. 847

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய். 848

காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு. 849

உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். 850

## 85. புல்லிய சிற்றறிவு உடைமை

சிறந்த அறிவு இல்லாமையே ஏழ்மைக்குள் கொடிய ஏழ்மையாகும். மற்ற பொருள் இல்லாமையை ஓர் ஏழ்மையாக உலகம் கொள்ளாது. 841

நல்லறிவில்லாத ஒரு நேரம் உள்ளம் விரும்பி ஒரு பொருளைப் பிறர்க்கு உதவுவதற்குக் காரணம் வேறெதுவும் இல்லை; பெற்றுக் கொள்பவன் இயற்றிய தவப்பயனே அது! 842

அறிவிலிகள் தங்களைத் தாங்களே துன்புறுத்திக் கொள்ளும் துன்பங்களைப் பகைவராலும் உண்டாக்க முடியாது. 843

அறிவின்மை எனப்படுவது எது எனின், 'யாம் விளக்கமான அறிவுடையேம்' எனத் தம்மைத் தாமே உயர்வாக மதித்துக் கொள்ளும் இறுமாப்பே. 844

ஒருவர் கல்லாத கலைகளைக் கற்றதாக மேலேற்றித் திரியும் செயல், அவர் குற்றமறக் கற்று வல்ல கலையறிவின் மேலும் பிறர் ஐயப்படச் செய்யும். 845

தம்மிடம் உள்ள ஒழுக்கக் கேடுகளை ஒழித்து மறைக்காத போது, உடம்பில் மறைவான உறுப்புக்களை மட்டும் உடையால் மறைப்பது புல்லறிவாம். 846

அரிய மறைபொருளை வெளிவிடும் அறிவிலி, தானே தனக்குப் பெரிய தீமை செய்து கொள்வான். 847

பிறர் ஏவியும் செய்யத் தெரியாதவனாய்த் தானாகவும் அறிய முடியாதவனா யிருப்பவன் உயிர் பிரியும் வரையும் உலகுக்கு ஒரு நோயாவான். 848

புல்லறிவாளன், ஆராய்ந்துகாண முடியாத பிறன் ஒருவனுக்குத் தான் அறிவிப்பான்; ஆனால் தான் ஒன்றும் காண மாட்டான்; காண முடியாத பிறனும் இவன் அறிந்த அளவுதான் அறிந்திருப்பான். 849

உலகினர் உண்டு என்று நம்புவதை இல்லை யென்று மறுப்பவன், உலகிலே ஒரு பேயாக வைத்து எண்ணப் படுவான். 850

## 86. இகல்

இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய். 851

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை. 852

இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்
தாவில் விளக்கம் தரும். 853

இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின். 854

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர். 855

இகலின் மிகலினிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து. 856

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர். 857

இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு. 858

இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு. 859

இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்
நன்னயம் என்னும் செருக்கு. 860

## 86. பிறரிடம் முரண்பாடு கூடாமை

எல்லா உயிர்கட்குமே பாகுபாடு என்னும் பண்பற்ற இயல்பைப் பெரிதாய் வளர்க்கும் பிணி, முரண்பாடு ஆகும் என்பர் அறிஞர். 851

ஒருவன் நம்மிடம் பாகுபாடு (வேறுபாடு) கொண்டு பற்றில்லாச் செயல்கள் புரிந்தாலும் முரண்பாடு கருதி அவனுக்குத் துன்பம் இழைக்காமையே மேலானது. 852

முரண்பாடு என்கிற துன்பம் தரும் நோயை நீக்கி விடின், அழிவில்லாத குற்றமற்ற புகழ் விளக்கத்தை அளிக்கும். 853

துன்பங்களுள் கொடியதான முரண்பாடு என்னும் துன்பம் தொலைந்து விடின், இன்பங்களுள் மேலான இன்பம் அளிக்கும். 854

முரண்பாட்டிற்கு எதிரே வளைந்து கொடுத்து நடக்க வல்லவரை, முற்பட்டு வெல்லவல்ல ஊக்கமுடையவர் எவர் உளர்? 855

முரண்பாட்டில் மிகுந்து நடத்தல் இனியது என்று எண்ணுபவனது வாழ்க்கை, குறைதலையும் அழிதலையும் அண்மையில் உடைத்தாம். 856

முரண்பாட்டை விரும்புதலையுடைய இனிமையற்ற புல்லறிவினர், மிக்க சிறப்பு மேவுதலுக்குரிய உண்மைப் பொருளை உணர மாட்டார். 857

முரண்பாட்டிற்கு எதிரே வளைந்து கொடுத்தலே ஆக்கமாம்; அம் முரண்பாட்டை மிகுதிப் படுத்த ஊக்கம் கொள்ளின், கேடு வர ஊக்கம் கொள்ளும். 858

ஒருவன் ஆக்கம் வரும்போது முரண்பாடு கொள்ளான்; கேடு தேடிக் கொள்வதற்கே அம் முரண்பாட்டை மிகுதியாகக் கொள்வான். 859

துன்பங்கள் அத்தனையும் முரண்பாட்டினால் உண்டாகும்; மகிழ்ந்து உறவாடுவதால் நல்ல நயம் உடைமை என்னும் களிப்பு தோன்றும். 860

## 87. பகைமாட்சி

வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை. 861

அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு. 862

அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு. 863

நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது. 864

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது. 865

காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும். 866

கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை. 867

குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனனிலனாம் ஏமாப்பு உடைத்து. 868

செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின். 869

கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லாது ஒளி. 870

# 87. பகைகொள்ளும் சூழ்ச்சித் திறமை

நம்மினும் வலியாரிடம் மாறுபாடு கொள்ளுதலை விலக்க வேண்டும்; தம்மைக் காக்க முடியாத மெலியவரிடம் மட்டுமே பகை கொள்ள வேண்டும். 861

அன்பு அற்றவனாயும் சிறந்த துணையில்லாதவனாயும் தானும் வலிமையற்றவனாயும் இருப்பவன் எதிரியின் வலிமையை எவ்வாறு அழிப்பான்? 862

எதற்கும் அஞ்சுபவனாயும் எதையும் நன்கு அறியாத வனாயும் யாரிடமும் பொருத்தப்பாடு இல்லாதவனாயும் யார்க்கும் ஒன்று ஈயாதவனாயும் உள்ளவன் தன் பகைவர்க்கு எளியவனாய்த் தஞ்சம் புகுவான். 863

சினம் நீங்காதவனாயும் நெஞ்சுறுதி இல்லாதவனாயும் உள்ளவன் எப்போதும் எங்கும் எவர்க்கும் எளியவன் ஆவான். 864

செய்வழி ஆராயாதவனாகியும் நல்வாய்ப்பிற்கு உரிய செயல்கள் செய்யாதவனாயும் பழி பாராதவனாயும் பண்பற்றவனாயும் இருப்பவன் தன் பகைவர்க்கு இனிய வெல்லக்கட்டி. 865

ஆராய்ந்து பாராமல் சினங் கொள்பவனாயும் மிகவும் பேராசை உடையவனாயும் உள்ளவனது பகையைப் பேணி ஏற்றுக் கொள்ளலாம். 866

தன்னைச் சார்ந்திருந்து கொண்டே ஒழுங்கற்ற செயல்கள் புரிபவன் பகையை, யாதொரு பொருள் கொடுத்தாவது கட்டாயம் பெறவேண்டும். 867

ஒருவன் நற்பண்பு இல்லாதவனாய்க் குற்றங்கள் பல உடையவனாயின் அவன் தனக்கு நண்பர்கள் இல்லாதவனாகி, பகைவர்க்கு நன்மையாவான். 868

அறிவின்றி எதற்கும் அஞ்சுகிற பகைவரைப் பெறின், அப்பகைவரை அழிக்க விரும்புபவர்க்கு இன்பம் தொலைவில் போகாமல் அண்மையில் கிட்டும். 869

கல்லாதவனாயும் வெகுளுபவனாயும் ஒரு சிறு செய்தியைக் கூட என்றும் செய்ய முடியாதவனாயும் இருப்பவனைப் புகழ் சேராது. 870

## 88. பகைத்திறம் தெரிதல்

பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று. 871

வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை. 872

ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன். 873

பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு. 874

தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று. 875

தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல் 876

நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து. 877

வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. 878

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து. 879

உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார். 880

## 88. பகைவரை வெல்லும் முறை அறிதல்

பகைமை என்னும் பண்பற்ற ஒன்றை ஒருவன் விளையாட்டாகவும் விரும்புதல் கூடாது. 871

வில்லாகிய ஏரை உடைய உழவராகிய வீரரின் பகையைக் கொண்டாலும், சொல்லாகிய ஏரை உடைய உழவராகிய புலவரின் பகையைக் கொள்ளலாகாது. 872

தான் தனியாய் நின்று பலருடைய பகையை வருவித்துக் கொள்பவன், பித்தம் பிடித்தவரினும் அறிவிலி ஆவான். 873

பகைவரையும் நண்பராக மாற்றி ஒழுகும் பண்பாளனது சிறப்புத் தகுதியின் துணையில் உலகம் தங்கி வாழ்கிறது. 874

தனக்கோ வேறு துணை இல்லை; தன் பகைவரோ இருவர்; தான் ஒருவன்; அங்ஙனமாயின் அப்பகைவருள் ஒருவரை இனிய துணையாகக் கொள்க. 875

முன்பு ஒருவனை ஆராய்ந்து நம்பினும் நம்பா விடினும், கேடுவந்தபோது அவனை நம்புதலோ, அன்றிப் பிரித்தலோ செய்யாது பேசாமல் விடுக. 876

தான் நொந்திருப்பதை அறியாதவரிடத்தில் தன் நோவை வெளிப்படுத்தலாகாது; பகைவரிடம் மென்மையாய் இருக்கக் கூடாது. 877

செய்ம்முறை தெரிந்து தனக்கு வேண்டியதைச் செய்து முடித்துத் தற்காப்புச் செய்து கொண்டால், பகைவரிடம் உள்ள இறுமாப்பு அழியும். 878

முள்மரம் சிறிதாய் உள்ளபோதே வெட்டியெறிக; அது வைரம் பாய்ந்து முற்றிவிட்டபோது வெட்டுபவரின் கையைக் குத்தி வருத்தும். (முள்மரம் = பகை) 879

எதிர்ப்பவரின் இறுமாப்பை அழிக்க முடியாதவர் மூச்சு விடும் அளவுக்குக் கூட உயிர் உடையவர் ஆகார்; இது திண்ணம். 880

## 89. உட்பகை

நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின். 881

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 882

உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும். 883

மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா
ஏதம் பலவுந் தரும். 884

உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவுந் தரும். 885

ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது. 886

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி. 887

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி. 888

எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு. 889

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று. 890

## 89. உள் பகை

சில நிழலின் குளர்ச்சி உடலுக்கு நோய் தருமாயின் பொல்லாததேயாம்; சுற்றத்தாரின் இயல்புகளும் துன்பம் தருமாயின் பொல்லாதனவே. 881

வாள் போன்ற வெளிப்படையான பகைவர்க்கு அஞ்ச வேண்டா; உறவு போல் நடித்து உள்ளே பகை கொண்டவரின் நட்புக்கே அஞ்ச வேண்டும். 882

உட்பகைக்கு அஞ்சித் தற்காப்பு செய்துகொள்க; சோர்ந்த நேரத்தில் குயவன் மண் கலத்தை அறுத்து எடுக்கும் கருவி போல, அந்த உட்பகை மிகவும் அழித்து விடும். 883

மனத்தில் பொருந்தாத உட்பகை ஏற்படின், தன் சுற்றத்தார்க்கு ஏலாத குற்றம் பல விளையும். 884

ஒருவனுக்கு உறவு முறையோடு நடிக்கும் உட்பகைவர் இருந்தால், அவன் இறக்கும் வகையில் குற்றம் பல கொடுக்கப்படும். 885

ஒன்றியடுத்துள்ள, உறவினரிடம் உள்ள ஒன்றாத உட்பகை தோன்றின், தான் அழியாமல் வாழ்தல் என்றும் இல்லை. 886

உள்பகை கொண்ட குடியினர், செப்புக் கலத்தோடு மூடியின் சேர்க்கை போல் வெளிக்குக் கூடியவர்போல் தெரியினும் உண்மையில் கூடார். 887

உட்பகை கொண்ட குடி, அரத்தால் அராவிக் குறைக்கப் பட்ட பொன்னைப் போல், வலிமை எதிர்க்கப்பட்டுத் தேய்ந்து அழியும். 888

உட்பகை எள்ளின் பிளவு அத்தனை சிறியதாயிருப் பினும் கேடு உடையதாம். 889

உளப் பொருத்தம் இல்லாதவருடன் கூடி வாழும் வாழ்க்கை, ஒரு குடிசைக்குள் பாம்போடு சேர்ந்து வாழ்வது போன்றதாம். 890

## 90. பெரியாரைப் பிழையாமை

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாம் தலை. 891

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும். 892

கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு. 893

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல். 894

யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர். 895

எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 896

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின். 897

குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து. 898

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். 899

இறந்தமைந்த சார்புடைய ராயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின். 900

## 90. பெரியவரிடம் பிழைபட நடவாமை

எதையும் ஆற்ற வல்ல பெரியவரின் ஆற்றலை இகழாது மதித்தல், தம்மைக் காக்க விரும்புவோர் செய்து கொள்ளும் காப்புக்கள் யாவற்றிலும் சிறந்ததாம். 891

பெரியாரைப் போற்றாது புறக்கணித்தால், பெரியோரால் நீங்காத துன்பம் சேரும். 892

ஒருவன் தான் கெட விரும்பினால், பிறரை அழிக்க எண்ணினால் செய்து முடிக்க வல்லவரிடம் யாரையும் கேளாமலேயே குற்றம் புரியலாம். 893

ஆற்றல் மிக்கவர்க்கு ஆற்றல் இல்லாதவர் துன்பம் செய்தல், எமனைக் கையசைத்துக் கூவி அழைப்பது போன்றதாம். 894

கொடிய வலிமையுடைய வேந்தனால் சீறப்பட்டவர் எங்கெங்கே சென்றாலும் எங்கும் உயிர்வாழ முடியாது. 895

நெருப்பால் சுடப்பட்டாலும் உய்யும் வழி உண்டு; ஆனால், தம்மினும் பெரியவரிடம் பிழைபட நடந்து கொள்பவர் உய்ய மாட்டார். 896

ஒருவனைத் தகுதி சிறந்த பெரியவர் சீறினால் பல துறைகளிலும் சிறந்துள்ள அவனுடைய பெரு வாழ்வும் பெருஞ் செல்வமும் என்னவாகும்? 897

மலைபோலும் மாண்புடைய பெரியார் அழிக்க எண்ணினால், நிலைத்து நின்று வாழ்பவர் போல் தோன்றுபவரும் தம் குடியுடன் உலகில் அழிந்து விடுவர். 898

உயர்ந்த குறிக்கோள் உடைய பெரியவர் சினந்தால், அரசனும் இடையிலே ஒடிந்து ஆட்சி இழப்பான். 899

மிகச் சிறந்த சிறப்புடையவர் சீறினால், அளவு கடந்து அமைந்துள்ள பக்கத் துணைவலிமை உடையவரும் பிழைக்க முடியாது. 900

## 91. பெண்வழிச் சேறல்

மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது. 901

பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும். 902

இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும். 903

மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று. 904

இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல். 905

இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர். 906

பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து. 907

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர். 908

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல். 909

எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்கு எஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல். 910

## 91. பெண்ணின்பத்திற்கு அடிமையாதல்

மனைவியின் இன்பத்தையே விரும்புபவர் வேறு சிறந்த பயன் அடையார். அக்காம இன்பம், செயல் முடிக்க விரும்புபவர் விரும்பக் கூடாத பொருளும் ஆகும். 901

செயலை விரும்பாமல் பெண்ணை விரும்புபவனது ஆக்கம், மிகப் பெரிய ஒரு வெட்கக் கேடாக நாணித் தலைகுனியச் செய்யும். 902

மனைவிக்குத் தாழ்ந்து நடக்கும் முறையற்ற தன்மை எப்போதும் நல்லவரிடையே நாணித் தலைகுனியச் செய்யும். 903

(சிற்றின்பத்திற்காக) மனைவிக்கு அஞ்சுகிற - மறுமையின்பம் இல்லாத ஒருவன் மேற்கொண்ட செயலாட்சி சிறப்புறுதல் இல்லை. 904

மனைவிக்கு அஞ்சுபவன், மற்று எப்போதும் நல்லவர்க்கு நன்மைகள் செய்ய அஞ்சுவான். 905

மனைவியின் மூங்கில் போன்ற மெல்லிய தோளுக்கு அஞ்சுபவர், தேவரே போல வளமுடன் வாழ்ந்தாலும் பெருமை இல்லாதவரே ஆவர். 906

(நாணம் இன்றிப்) பெண்ணுக்கு அடிமை செய்து வாழ்பவனது ஆண் தன்மையை விட, நாணம் உடைய பெண் தன்மையே பெருமை உடையதாம். 907

அழகிய நெற்றியை உடைய மனைவி விரும்புகிறபடி யெல்லாம் ஆடுபவர், தம் நண்பரின் குறைகளை முடிக்க மாட்டார்; தாமும் நல்லறம் புரியார். 908

பெண்ணுக்கு அடிமை செய்பவரிடத்தில், அறச் செயலும் போதுமான பொருள் தேடும் முயற்சியும் இன்னும் மற்ற நற்செயல்களும் இரா. 909

ஆராய்ந்து எண்ணுதலை உடைய உள்ளத்தோடு நல்ல வாய்ப்பும் உடையவர்க்கு, பெண்ணைச் சுற்றித் திரியும் அறியாமை என்றும் இராது. 910

## 92. வரைவின் மகளிர்

அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும். 911

பயன் தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல். 912

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று. 913

பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர். 914

பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர். 915

தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள். 916

நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள். 917

ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு. 918

வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு. 919

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 920

## 92. மணவாத விலைமகளிரின் கீழ்மை

ஒருவனை அன்போடு விரும்பாமல் பொருளுக்காக விரும்புகிற அழகிய வளையல் அணிந்த விலை மகளிர் பேசும் இனிய சொல் துன்பம் தரும். 911

வரும் பயனை ஆய்ந்தறிந்து பண்புடையார்போல் பேசும் பண்பற்ற பொது மகளிரின் பசப்பை ஆராய்ந்தறிந்து அவருடன் கூடா தொழிக. 912

பொருள் பெறும் விலைமகளிரின் பொய்யான புணர்ச்சி, இருட்டு அறையில் அயலான பிணத்தைத் தழுவியது போன்றதாம். 913

அருட் செல்வத்தை ஆராயும் நல்லறிவினர், பொருளையே பொருட்படுத்தும் பொதுமகளிரின் இழிந்த இன்பத்தில் ஈடுபடார். 914

நலமான இயற்கை அறிவுடன் சிறந்த கல்வியறிவும் உடையவர், பொருள் கொடுப்போர்க்கெல்லாம் பொதுவாக இன்பம் அளிக்கும் விலைமகளிரின் தாழ்ந்த இன்பத்தைப் பொருந்தார். 915

அழகு முதலிய தகுதிகளால் இறுமாந்து தம் புல்லிய உடலின்பத்தை விற்கும் பெண்களின் தோளைத் தமது நற்கடமையைப் புரியும் நல்லோர் கூடார். 916

நெஞ்சிலே வேறு விருப்பங் கொண்டு புணரும் பொது மகளிரின் தோளை, உறுதியான உள்ளம் இல்லாதவரே தழுவுவர். 917

வஞ்சக விலை மாதரின் புணர்ச்சி, ஆராயும் நல்லறிவினர் அல்லாதார்க்குத் தீண்டி வருத்தும் (மோகினித்) தெய்வத் தாக்குதலாம் என்பர். 918

இன்னார் என்ற வரையறை இல்லாத - அழகிய அணிகலன் அணிந்த விலைமாதரின் மெல்லிய தோள், அறிவற்ற கீழ்மக்கள் அழுந்திப் புதையும் நரகமாம். 919

இருவேறுபட்ட உள்ளமுடைய விலைமகளிரும் கள்ளும் சூதும் ஆகிய முப்பொருளும் திருமகளால் விடப்பட்டவரின் உறவாகும். 920

## 93. கள்ளுண்ணாமை

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கொண்டொழுகு வார். 921

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார். 922

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி. 923

நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு. 924

கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல். 925

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். 926

உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர். 927

களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும். 928

களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 929

கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. 930

## 93. கள் குடியாமை

கள்ளின்மேல் விருப்பங் கொண்டு குடிப்பவர், என்றுமே பகைவரால் அஞ்சப்படார்; புகழும் இழப்பர். 921

கள் அருந்தலாகாது; அருந்துவதானால், பெரியோரால் நன்கு மதிக்கப்படுவதை விரும்பாதவர் வேண்டுமானால் அருந்துக. 922

கள் மயக்கம், பெற்ற அன்னை முகத்திலும் வெறுப்பு அளிக்கும் எனில், மற்றபடி காணும் பெரியோர் முகத்தில் எவ்வளவு வெறுப்பு உண்டாக்குமோ? 923

நாணம் என்னும் நல்ல பெண், கள் குடித்தல் என்னும் பொருந்தாத பெருங் குற்றம் புரிபவர்க்கு முன் நில்லாமல் புறங்காட்டிச் சென்று விடுவாள். 924

பொருளைச் செலவிட்டுக் கள் குடித்து மெய்ம்மறந்த மயக்க நிலையை அடைதல், ஒழுங்குமுறை அறியாத மடமையுடைய செயலாம். 925

ஒன்றும் உணராமையின் தூங்குபவர் இறந்தவரினும் வேறாகார்; அதுபோல, நிலை மயங்குதலின், கள் குடிப்பவர் நஞ்சு அருந்தியவர்க்கு நிகர். 926

கள்ளை மறைவாகக் குடித்துக் கண் மயங்கிக் கிடப்பவர், உள்ளூரிலே தம் உள் செய்திகள் அறியப்பட்டு என்றும் எள்ளி நகையாடப்படுவர். 927

கட்குடியன் ஒருவன் "யான் கள் குடித்தறியேன்" என்று பொய் சொல்வதை, விடுவானாக; ஏனெனில், அவன் கள்ளுண்ட அப்போதே, நெஞ்சில் ஒளித்துள்ள செய்திகள் யாவும் வெளிப்பட்டு விடும். 928

கள்ளுண்டு மயங்கினவனுக்குப் பல காரணங்கள் காட்டி அறிவு புகட்டுதல், நீரின் அடியில் மூழ்கியவனை எரியும் விளக்கால் துருவித் தேடல் போன்றது. 929

ஒருவன் தான் கள் உண்ணாதபோது, கள்ளுண்டு மயங்கிக் கிடக்கும் மற்றொருவனைக் கண்டால், கள் உண்பதால் வரும் சோர்வை எண்ணிப் பாரானோ! 930

## 94. சூது

வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. 931

ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு. 932

உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும். 933

சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன்று இல். 934

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார். 935

அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியால் மூடப் பட்டார். 936

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின். 937

பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து
அல்லல் உழப்பிக்கும் சூது. 938

உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின். 939

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர். 940

# 94. சூது ஆடாமை

வெல்வதானாலும் சூதாடுதலை விரும்ப வேண்டா. வெற்றிபெறுதலும் (எதுபோன்ற தெனில்), இரை உள்ள தூண்டில் இரும்பை மீன்விழுங்கியது போன்றதாம். 931

ஒரு பொருளைப் பெறுவதுபோல் பெற்று நூறு பொருளை இழந்துபோகும் சூதாடிகளுக்கும், நன்மை பெற்று வாழத்தக்க வழி யொன்று உண்டோ? 932

காய் உருட்டி வைக்கும் பந்தயப் பொருளை ஓயாது கூறிச் சூதாடினால், பொருள் வருவாய் ஆடுபவனை விட்டு நீங்கி வேறிடம் சாரும். 933

இழிவுகள் பல தந்து புகழையும் அழிக்கிற சூதை விட வறுமை தரக் கூடியது வேறொன்றும் இல்லை. 934

சூதாடு கருவியும் சூதாடும் இடமும் சூதாடும் கையுமாக ஊக்கம் மிக்குற்று உழலுபவர், எவ்வளவு இருப்பினும் ஒன்றும் இல்லாதவ ராகி விடுவர். 935

சூது என்னும் மூதேவியால் விழுங்கப்பட்டவர், வயிறுநிரம்ப உண்ணாராய்த் துன்பத்தால் வருந்துவர். 936

காலையில் எழுந்ததுமே சூதாடு களத்துள் நுழைந்து விட்டால், அது நெடுநாள் இருந்துவந்த செல்வத்தையும் நற்பண்பையும் அழித்து விடும். 937

சூது செல்வத்தைச் சிதைத்து, பொய்யைப் புனைந்துரைக்கப் பண்ணி, அருளை அழித்துத் துன்புற்று வருந்தப்பண்ணும். 938

ஒருவன் சூதைக் கைக்கொண்டால், உடை, செல்வம், உணவு, புகழ், கல்வி என்னும் ஐந்தும் அவனை அடையாது நீங்கும். 939

பொருளை இழக்க இழக்க மேலும் ஆட விரும்பும் சூதைப் போல, துன்பத்தால் வருந்த வருந்தவும் மேலும் வாழ விரும்புகிறது உயிர். 940

## 95. மருந்து

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. 941

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். 942

அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. 943

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து. 944

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு. 945

இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபே ரிரையான்கண் நோய். 946

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். 947

நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். 948

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். 949

உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வானென்று
அப்பால்நாற் கூற்றே மருந்து. 950

# 95. மருத்துவம்

வாதம், பித்தம், ஐ (சிலேத்துமம்) என மருத்துவ நூலறிஞர் வகுத்துள்ள மூன்றும், உடலில் அளவுக்கு மீறினாலும் குறைந்தாலும் நோய் விளைக்கும். 941

முன் உண்டது செரித்து விட்டதா என நன்கறிந்து பிறகு உண்டால், உடம்புக்கு மருந்து என ஒரு பொருள் வேண்டியதில்லை. 942

முன் உண்டது செரித்து விட்டால், மேலும் செரிக்கும் அளவு அறிந்து அளவோடு உண்ண வேண்டும். அதுதான், உடம்பு பெற்ற ஒருவன் அதனை நெடுங்காலம் செலுத்திக் காக்கும் வழியாகும். 943

முன் உண்டது செரித்ததை அறிந்து, மேலும் செரிக்கும் வழியைப் பின்பற்றி, மாறுபாடற்ற பொருத்தமான உணவை மிகவும் பசித்தபின் உண்ணுக. 944

மாறுபாடற்ற பொருத்தமான உணவை நிரம்ப உண்ணாமல் போதும் போதும் என மறுத்து அளவோடு உண்டால் உயிர்க்குத் துன்பம் இல்லை. 945

குறைந்த அளவு அறிந்து உண்பவனிடத்தில் இன்பம் நிலைத்து நிற்பது போல், மிகப் பெரிய தீனியை விழுங்குபவனிடம் பிணி நிலைத்து நிற்கும். 946

ஒருவன் பசித் தீயின் அளவுக்கு ஏற்ப அல்லாமல் நன்மை தீமை ஆராயாதவனாய் மிகுதியாய் உண்டால் பிணிகள் அளவில்லாமல் தோன்றும். 947

நோய் இன்னதென அறிந்து, நோயின் காரணத்தை ஆய்ந்து, அது தீர்க்கும் வழியையும் தெரிந்து, தவறாது நலம் வாய்க்கும்படி மருத்துவம் செய்க. 948

மருத்துவம் கற்றவன், நோயுற்றவனின் நிலையையும் பிணியின் அளவையும் காலத்தின் இயல்பையும் எண்ணி ஆராய்ந்து செயல் புரிக. 949

பிணி உற்றவன், பிணி தீர்க்கும் மருத்துவன், மருந்து, அருகிருந்து அனைத்தும் செய்பவன் ஆகிய அந்நால்வகைத் திறத்தையும் பொறுத்தது மருத்துவம். 950

## 96. குடிமை

இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு. 951

ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். 952

ஈகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. 953

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர். 954

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று. 955

சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார். 956

குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து. 957

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும். 958

நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல். 959

நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 960

## 96. உயர் குடிப்பிறப்பின் சிறப்பு

உயர் குடியில் பிறந்தவரிடம் அல்லாமல் ஏனையோரிடம் நடுநிலைமையும் நாணும் இயற்கையாக ஒருசேர இருப்பதில்லை. 951

உயர் குடியில் தோன்றியவர், நல்லொழுக்கம், உண்மை, நாணம் ஆகிய மூன்றிலிருந்து தவறி ஒழுகார். 952

உண்மையில் உயர் குடியில் பிறந்தார்க்கு, முகமலர்ச்சி, கொடை, இன்சொல், பிறரை இகழாமை ஆகிய நான்கும் உரிய இயல்புகள் என்பர். 953

நற்குடிப் பிறப்பினர், அடுக்கடுக்காகப் பலகோடிப் பொருள் கிடைப்பதானாலும், குடிப் பெருமை குன்றும் படியான தீச் செயல்கள் புரியார். 954

பழம் பெருங்குடியில் பிறந்தவர், பிறர்க்கு வழங்கும் வசதி ஏழ்மையால் உள் இழுத்துக் கொண்டாலும் கொடுக்கும் பண்பிலிருந்து நீங்குதலில்லை. 955

'குற்றமற்ற குடிப் பெருமையைக் காத்து வாழ்வோம்' என்று கூறி வாழ்பவர், வஞ்சகம் கொண்டு சிறப்பற்ற செயல்கள் செய்யார். 956

நற்குடியில் பிறந்தாரிடம் உள்ள சிறு குற்றமும், விண்ணில் உள்ள வெண்ணிலாவின் நடுவே உள்ள களங்கம்போல் பலர் அறியப் பெருகித் தோன்றும். 957

ஒருவனது ஒழுக்க நெறியில் அன்பின்மை காணப்படின், அவனை அவனது குடிப்பிறப்பின் தொடர்பாக ஐயப்பட வேண்டி வரும். 958

மண்ணிற்கு உள்ள இயல்பை அம்மண்ணில் முளைக்கும் முளை அறிவித்துவிடும்; அதுபோல, ஒருவர் இன்னகுடியில் பிறந்தவர் என்பதை அவரது வாய்ப் பேச்சு தெரிவித்து விடும். 959

ஒருவன் நன்மை விரும்பினால் நாணம் உடையவனா யிருக்க வேண்டும்; குடிப் பெருமையை விரும்பினால் எவரிடத்தும் பணிவாய் ஒழுக வேண்டும். 960

## 97. மானம்

இன்றி யமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல். 961

சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர். 962

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 963

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக்கடை. 964

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின். 965

புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று
இகழ்வார்பின் சென்று நிலை. 966

ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று. 967

மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து. 968

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். 969

இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு. 970

## 97. மானம் உடைமை

உயிர் வாழ்வதற்கு மிக இன்றியமையாத (முக்கியமான) சிறப்புடைய செயல்களாயிருப்பினும், மானம் குன்றும்படி வருஞ் செயல்களைக் கைவிடுக. 961

புகழுடன் பெரிய வீரத்தையும் விரும்புபவர், சிறப்புக்களுக்குள்ளே மிக்க சிறப்பு இல்லாத செயல்களைச் செய்ய மாட்டார். 962

வாழ்வு பெருகியுள்ளபோது ஒருவனுக்குப் பணிவு வேண்டும்; வாழ்வு சிறுத்துச் சுருங்கிய போதோ உயர்ந்த மானம் வேண்டும். 963

மக்கள் உயர் நிலையிலிருந்து தாழ்ந்து விட்டபோது முன்பு போற்றிக் காத்த தலையினின்றும் விழுந்து விட்ட மயிர் போல் தாழ்த்தப்படுவர். 964

மலைபோல் உயர்ந்த பெரியோரும் மானம் குன்றும் செயல்களைக் குன்றிமணி யளவு சிறிது செய்துவிட்டாலும் தாழ்ந்து விடுவர். 965

தம்மை இகழ்பவரின் பின் சென்று மானமின்றி வாழும் நிலை, புகழும் தராது; தேவர் உலகத்திற்கும் செலுத்தாது; வேறு என்னதான் செய்யும்? 966

தன்னொடு பொருந்தாதவரின் பின் சென்று கையேந்தி நின்று ஒருவன் வாழ்வதை விட, அவ்வாறு செய்யாமல் அப்படியே அழிந்து விட்டான் என்று உலகினரால் பேசப்படுதல் மிக நல்லது. 967

தன் பெருந்தன்மையின் சிறப்பு அழிய நேர்ந்தபோது மானம்விட்டு உடலை வளர்க்கும் வாழ்க்கை மற்றும் எப்போதும் உயிர்போகாமைக்கு மருந்தாகுமா? 968

உடலிலிருந்து ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர், உயிர் விடுவதால் மானம் நிலைக்கு மென்றால் உயிரை விட்டு விடுவர். 969

இழிவு நேரின் உயிர் வாழாத மானம் உடையவரின் புகழை உலகினர் வணங்கிப் போற்றுவர். 970

# 98. பெருமை

ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல். 971

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். 972

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். 973

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. 974

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல். 975

சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு. 976

இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின். 977

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 978

பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல். 979

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 980

## 98. பெருந்தன்மை

ஒருவனுக்கு ஒளி (பெருமை) தருவது ஊக்க மிகுதியே; அந்த ஊக்கம் இழந்து வாழலாம் என்று சோம்புதல் ஒருவனுக்கு இழிவாகும். 971

எல்லா உயிர்கட்குமே பிறப்பு ஒரே மாதிரிதான்; ஆனால், அவரவர் செய்யும் செயல் வேறுபாட்டினால் பெருமை ஒத்திருப்பதில்லை. 972

(பதவி முதலியவற்றால்) மேல் நிலையில் இருந்தாலும் மேலான பண்பு இல்லாதவர் மேலானவர் ஆகார்; கீழ் நிலையில் இருப்பினும் கீழான தன்மை யில்லாதவர் கீழானவர் ஆகார். 973

ஒரு நெறி நிற்கும் கற்புடைய பெண்டிரே போல, ஒருவன் தன்னைத்தானே காத்துக் கொண்டு ஒழுகினால் தான் பெருமையும் உண்டாகும். 974

பெருமை உடையவர்கள், மிக அரிய செயலையும் செய்ய வேண்டிய முறைப்படி செய்து முடிப்பார்கள். 975

பெரியாரைப் போற்றித் துணையாகக் கொள்வோம் என்னும் சிறந்த குறிக்கோள், சிறியவரின் உணர்ச்சியில் எட்டுவதில்லை. 976

சிறப்புக்கூட, ஒழுங்கற்ற சிறியவரிடம் தப்பித்தவறி ஏற்படுமாயின், சாவையே தரும் கொலைத் தொழிலின் தன்மை உடையதாம். 977

பெருமைப் பண்பு எப்போதும் பணிவாய் இருக்கும்; சிறுமைத் தன்மையோ தன்னைத் தானே வியந்து மெச்சிக் கொள்ளும். 978

பெருமிதம் அடித்துக் கொள்ளாதிருத்தல்தான் பெருமை யாகும்; மிகவும் பெருமையடித்துத் திரிதலோ சிறுமையாகும். 979

பெருமைக் குணம் மற்றவருடைய குற்றங் குறைகளை மறைக்கும்; சிறுமைத் தன்மையோ மற்றவரின் குற்றங் களையே பேசிக் கொண்டிருக்கும். 980

## 99. சான்றாண்மை

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. 981

குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று. 982

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். 983

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. 984

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 985

சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். 986

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 987

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 988

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார். 989

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. 990

# 99. நிறை இயல்பு (சால்பு) உடைமை

கடமையறிந்து சால்புடைமை மேற்கொண்டு ஒழுகுபவர்க்கு, நன்மைகள் எல்லாம் வந்து சேரக் கடமைப் பட்டுள்ளன என்பர் அறிஞர். 981

சான்றோர்க்கு நலம் என்பது சிறந்த குணநலமே; இக்குண நலம் தவிர வேறு நலங்களுள் எந்த நலத்திலும் சான்றோரின் நலம் அடங்கியிருக்கவில்லை. 982

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்தும் சால்பு (சான்றாண்மை) என்னும் கட்டடத்தைத் தாங்கும் தூண்களாகும். 983

நோன்பு என்பது, எவ்வுயிரையும், கொல்லாத சிறப்பு உடையது; சால்பு என்பது, பிறர் தீமையை எடுத்துச் சொல்லாத சிறப்பு உடையது. 984

வல்லவர்க்கு வலிமை எனப்படுவது பணிவுதான்; அப்பணிவு, சான்றோர் தம் பகைவரைத் திருத்த உதவும் ஒருவகைப் படைக்கலமாகும். 985

சால்புடைமையை அறிவதற்கு உரைகல் எது எனில், தனக்கு நிகர் அல்லாதவரிடத்திலும் தோல்வியை ஒத்துக் கொள்ளும் அடக்கம்தான். 986

சான்றோர் தமக்குத் துன்பம் செய்தவர்க்கும் இன்பம் செய்யாவிட்டால், அவரது சால்பு என்ன நன்மை அளிக்குமோ? 987

சால்புடைமை என்னும் வலிமை இருக்கப் பெற்றால், ஒருவனுக்கு ஏழ்மை இழிவாகாது. 988

சால்புடைமைக்குக் கடல் போன்றவர் என்று புகழப்படுபவர், ஊழி மாறி உலகமே அழியினும், தாம் சால்புடைமையிலிருந்து மாறமாட்டார். 989

சான்றோர் தம் சால்புடைமையிலிருந்து தாழ்ந்தால், இப்பெரிய உலகம் தன் சுமையைத் தாங்க முடியாமல் ஐயோ அழிந்து போகும். 990

## 100. பண்புடைமை

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 991

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு. 992

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு. 993

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு. 994

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. 995

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன். 996

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர். 997

நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை. 998

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள். 999

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. 1000

# 100. உயர் பண்பு உடைமை

எவரிடத்தும் பண்புடையவரா யிருக்கும் ஒழுகலாற்றை, எளிமையாய்ப் பழகுதலால் அடைதல் எளிது என்பர் அறிஞர். 991

அன்புடைமை, உயர் குடிப் பிறப்பியல்பு ஆகிய இரண்டும் பெற்றிருத்தல் பண்புடைய ஒழுக லாறாம். 992

ஒருவன் உடல் உறுப்புக்களால் மற்றவரோடு ஒத்திருப்பது உண்மையான ஒப்பாகாது. உயர்வுமிக்க பண்பினால் ஒத்திருப்பதே ஒப்புக் கொள்ளக் கூடிய ஒப்பாகும். 993

நயத்தோடு நன்மை புரியும் பயன் உள்ளவர்களின் உயர் பண்பை உலகம் பாராட்டும். 994

விளையாட்டாகவும், பிறரை இகழ்ந்து பேசுதல் துன்பமானதாம்; பிறரது துன்பத்தை அறியவல்ல நல்லோரிடம் பகையிலும்பண்பே காணப்படும். 995

நற்பண்பு உடையவரைச் சார்ந்தே உலகம் நிலைத்து நடக்கிறது; அந்நிலை இல்லையேல் மண்ணுக்குள் மடிந்து மாய்ந்து போகும்; ஐயோ! 996

மாந்தர்க்கு உரிய பண்பு பெறாதவர், அரத்தைப் போல் கூரிய அறிவு பெற்றிருப்பினும், ஓர் அறிவு உடைய மரம் போன்றவரே யாவர். 997

நட்பு செலுத்த இயலாதவராய் நன்மையில்லாத தீச் செயல்கள் புரிபவரிடத்தும் பண்போடுஒழுக இயலாமை தாழ்வாகும். 998

மற்றவரோடு சிரித்து மகிழ்ந்து உறவாடவல்லவர் அல்லார்க்கு, மிகப் பெரிய இவ்வுலகம், பகலிலும் இருளுடையதாய்த் தோன்றும். 999

நற்பண்பு இல்லாதவன் பெற்றுள்ள பெரிய செல்வம், நல்ல பால் தான் இருக்கும் கலத்தின் பழுதால் திரிந்து கெடுதல் போல் பயனறும். 1000

## 101. நன்றியில் செல்வம்

வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்தது இல். 1001

பொருளானாம் எல்லாமென்று ஈயாது இவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு. 1002

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. 1003

எச்சமென்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன். 1004

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். 1005

ஏதம் பெருஞ்செல்வம் தான்றுவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான். 1006

அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று. 1007

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று. 1008

அன்பொரீஇத் தற்செற்று அறநோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர். 1009

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து. 1010

## 101. நன்மை அளிக்காத செல்வம்

இடமுழுவதும் நிறைந்த பெருஞ் செல்வத்தைச் சேர்த்து வைத்தவன் அதனை நுகராது செத்தானானால் அச் செல்வத்தால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. 1001

பொருள் இருந்தால் எல்லாம் ஆகும் என்று கருதி யார்க்கும் கொடாது இறுக்கி வைத்துக் கொள்ளும் மயக்கத்தால் சிறப்பற்ற பிறவி தோன்றும். 1002

ஈட்டிய பொருளை இறுகப் பற்றிக் கொண்டு புகழை விரும்பாத மக்கள் தோன்றியிருப்பது நிலத்திற்கு வீண் சுமையாம். 1003

பிறர்க்குப் பயன்படாமையால் ஒருவராலும் விரும்பப் படாத ஒருவன், தனக்குப் பின் எஞ்சி நிலைத்திருக்கக் கூடியதாக எதை எண்ணுவானோ? 1004

பிறர்க்கும் உதவுவதும் தாமும் நுகர்வதும் இல்லாத கருமிகட்கு, அடுக்கடுக்காகக் கோடிக் கணக்கில் செல்வம் உண்டானாலும் பயன் இன்று. 1005

தானும் துய்க்காதவனாய், தகுந்தவர்க்கும் ஒன்று உதவும் பண்பு இல்லாதவனா யுள்ளவன், பெருஞ் செல்வத்திற்கு ஒரு களங்கம் ஆவான். 1006

வசதியற்ற ஏழைகட்கு ஒரு பொருள் உதவாதவனுடைய செல்வம், மிக்க பேரழகு பெற்ற ஒருத்தி மணமின்றித் தனியா யிருந்து முதுமையும் அடைந்த நிலை போன்றது. 1007

பயன்படாமையால் எவராலும் விரும்பப்படாதவனது செல்வம், ஊர் நடுவே நச்சு மரம் பழம் பழுத்தாற் போன்றதாம். 1008

பிறரிடம் அன்பை விலக்கித் தன்னையும் வருத்தி அறநெறி பாராது ஒருவன் சேர்த்துள்ள வளமான செல்வத்தைப் பிறர் எவரோ பெற்று நுகர்வர். 1009

சிறப்புடைய செல்வரா யிருந்தவர் இடையிலே எய்திய சிறிய ஏழ்மை, வள்ளலான மேகம் இடையிலே வறட்சி மிக்காற் போன்ற தன்மையதாம். 1010

## 102. நாணுடைமை

கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற. 1011

ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு. 1012

ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு. 1013

அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணிஅன்றோ பீடு நடை. 1014

பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு. 1015

நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர். 1016

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர். 1017

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்கது உடைத்து. 1018

குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை. 1019

நாண்அகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று. 1020

# 102. நாணம் உடைமை

தீச் செயலுக்காக நாணங் கொள்வதே நாணமாகும்; அழகிய நெற்றியை உடைய பெண்டிரின் நாணம் இதனினும் வேறானது. 1011

உணவும் உடையும் பிள்ளை பெறுதல் முதலிய எஞ்சிய யாவும் எல்லா உயிர்கட்கும் வேறின்றிப் பொதுவே; எனவே மாந்தர்க்குச் சிறப்பு நாணம் உடைமையே. 1012

உயிர்கள் எல்லாம் ஊனாகி உடம்பை இடமாகக் கொண்டுள்ளன; சால்புடைமையோ, நாணம் என்னும் நற்பண்பை இடமாகக் கொண்டுள்ளது. 1013

உயர்ந்தோர்க்கு நாணம் உடைமை ஒருவகை அணிகலம் அல்லவா? அஃது இல்லையெனில், அவரது பெருமிதமான நடை ஒரு நோய் அல்லவா? 1014

பிறர் பழிக்கும் தம் பழிக்கும் ஒருசேர நாணுபவர், நாணத்திற்கே உறைவிட மானவர் என்று உலகம் கூறும். 1015

மேலானவர் நாணமாகிய வேலியை மேற்கொள்ளாமல் பெரிய உலக வாழ்க்கையை மதித்து விரும்பார். 1016

நாணத்தைக் கையாளும் நல்லோர், நாணத்திற்காகத் தம் உயிரையும் விடுவர்; உயிருக்காக நாணத்தை விடவே மாட்டார். 1017

ஒருவன் தனக்காகப் பிறர் நாணும் இழிசெயலுக்குத் தான் நாணாதிருப்பா னாயின், அவனுக்காக அறமே நாணம் உடையதாகும். 1018

ஒருவன் குறிக்கோள் தவறின், அது அவனது குலத்தை அழிக்கும்; நாணம் இல்லா நிலை நின்று நீடித்தாலோ, அது அவனுடைய நன்மைகளை அழிக்கும். 1019

நெஞ்சிலே நாணம் இல்லாதவரின் நடமாட்டம், மரப் பொம்மையைக் கயிற்றால் இயக்கி உயிர் உடையது போல் மயக்கும் தன்மைத்தாம். 1020

## 103. குடிசெயல் வகை

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல். 1021

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி. 1022

குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். 1023

சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு. 1024

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு. 1025

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 1026

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை. 1027

குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும். 1028

இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு. 1029

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி. 1030

# 103. தன் குடியை உயரச் செய்யும் திறம்

ஒருவன் குடி உயர்வதற்குரிய செயலாற்றக் கைசோர மாட்டேன் என்று ஊக்கும் பெருமையை விடப் பெருமிதம் உடையது வேறொன்றுமில்லை. 1021

வினை செய்யும் முயற்சி, நிறைந்த அறிவு என்னும் இரண்டுடன் ஓயாது புரியும் உழைப்பால் குடி தொடர்ந்து வளரும். 1022

குடியை உயரச் செய்வேன் என்று முயன்று உழைக்கும் ஒருவனுக்கு, தெய்வங் கூட தன் உடையை இறுக்கிக் கட்டிக் கொண்டு தான் முன்வந்து உதவும். 1023

தம் குடியை உயர்த்தக் காலம் தாழ்க்காது முயன்று உழைப்பவர்க்கு, அவர் எண்ணாமலேயே வெற்றி முடிவு தானே வந்து சேரும். 1024

குற்றம் இல்லாதவனாய்க் குடியை உயரச் செய்து வாழ்பவனை உலகினர் சுற்றமாகக் கொண்டு சூழ்ந்து வாழ்வர். 1025

ஒருவனுக்கு நல்ல ஆண்மை எனப்படுவது, தான் தோன்றிய குடியை ஆளும் திறமையை உண்டாக்கிக் கொள்ளுதலாம். 1026

போர்க் களத்தில் பொறுப்பு ஏற்கும் அஞ்சாத தலைவனைப் போல, ஒரு குடியைச் சேர்ந்த உறவினருக் குள்ளும் குடியைத் தாங்கிக் காக்க வல்லவரிடமே பொறுப்பு இருக்கும். 1027

குடி உயர உழைப்பவர்க்கு அதற்கென ஒரு காலம் வேண்டியதில்லை; சோம்பல் கொண்டு, நாம் உழைப்பதா என மானமும் கருதின் குடி அழியும். 1028

குடியைக் குற்றத்திலிருந்து நீக்கிக் காப்பவனுடைய உடம்பு, துன்பத்திற்கே ஒரு குதிர் போலும். 1029

எது நேரினும் அடுத்துத் தாங்கும் நல்ல ஆண்மகன் இல்லாத குடி, துன்பம் என்னும் கோடரி வேரை வெட்டிச் சாய்க்க வீழ்ந்தழியும். 1030

## 104. உழவு

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. 1031

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. 1032

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 1033

பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர். 1034

இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். 1035

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம் என்பார்க்கும் நிலை. 1036

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும். 1037

ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. 1038

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். 1039

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும். 1040

# 104. உழவுத் தொழில்

உலகம் என்ன செய்து சுழன்று திரியினும், ஏர்த் தொழிலின் பின் நின்று பிழைக்க வேண்டியதே; ஆதலின், என்ன பாடுபடினும் உழவுத் தொழில் செய்வதே சிறப்பு. 1031

உழவு செய்ய முடியாமல் வேறு தொழில்களின் மேற் செல்பவரை யெல்லாம் தாங்குவதால், உழவர் உலகினர்க்கு அச்சாணி போன்றவர். 1032

உழவு செய்து அதன் பயனை உண்டு வாழ்பவரே உரிமை வாழ்வினர் ஆவர்; மற்றவர் அனைவரும் பிறரைத் தொழுது உண்டு அவர் பின் செல்பவரே. 1033

பயிர்க் கதிரின் நிழலில் உழைக்கும் உழவர்கள், மன்னர் பலரின் குடை நிழல்களைத் தம் அரசரது குடை நிழலின்கீழ் அடங்கச் செய்வர். 1034

தம் கையால் உழவு செய்து உண்ணும் இயல்பினர் தாம் எவரிடமும் இரவார்; தம்மிடம் இரப்பவர்க்கும் ஒளிக்காது ஒரு பொருள் உதவுவார். 1035

உழவர் கைசோர்ந்து தொழில் செய்யாராயின், எல்லாரும் விரும்புவதை யாம் துறந்து விட்டோம் என்னும் துறவிகட்கும் வாழ்வு நிலையாது. 1036

ஒரு பலம் அளவு மண்புழுதியைக் கால் பலம் அளவுக்கு உழுது உழுது காயச் செய்தால், ஒரு பிடி எருவும் தேவைப்படாமலேயே நிலம் நிரம்ப விளையும். 1037

ஏர் உழுதலினும் சிறந்த எரு போடுதல் நல்லது; மேற்கொண்டு களை பறித்த பின்பு நீர் பாய்ச்சுவதனினும் பயிரை விழிப்புடன் காத்தல் சிறந்தது. 1038

நிலத்தின் உரிமையாளன் அடிக்கடி நிலத்திற்குச் சென்று பார்வையிடாமல் இருந்தால் நிலம் உலர்ந்து மனைவியைப் போல் ஊடி வாடும். 1039

யாம் ஒன்றும் இல்லாதோம் என்று சோம்பி உழைக்காதிருப்பவரைக் கண்டால், நிலம் என்னும் பெண் எள்ளி நகைப்பாள். 1040

# 105. நல்குரவு

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. 1041

இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். 1042

தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை. 1043

இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும். 1044

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். 1045

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும். 1046

அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும். 1047

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு. 1048

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது. 1049

துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று. 1050

## 105. வறுமையின் கொடுமை

வறுமையைப் போல் துன்பமானது வேறு எது எனில், வறுமையைப் போல் துன்பமானது அவ்வறுமை ஒன்றுதான். 1041

ஏழ்மை என்னும் ஒரு பொல்லாத பாவி, தன்னை உடையவனுக்கு மறு உலக இன்பமும் இவ்வுலக இன்பமும் இல்லாமற் செய்து விடும். 1042

வறுமையால் வரும் நப்பாசை, தொன்று தொட்டு வந்த குடும்பப் பண்பையும் புகழையும் ஒன்றாகக் கெடுத்து விடும். 1043

நற்குடியில் பிறந்தவரிடத்தும் இழிசொல் ஏற்படும்படி யான தளர்ச்சியை வறுமை உண்டாக்கும். 1044

ஏழ்மை என்னும் ஒரு துன்பம் இருந்தால் அதனுள் மற்ற பல வகைத் துன்பங்களும் சென்று சேர்ந்து தங்கும். 1045

வறியவர் நல்ல நூற்களின் கருத்தை நன்றாகப் புரிந்து எடுத்து விளக்கினாலும், அவரது சொல்லின் கருத்து ஏறாமல் சோர்வடையும். 1046

அறத்திற்கு இடமில்லாத வறுமை, ஒருவனைப் பெற்ற தாயாலும் அயலானைப் போல் புறக்கணிக்கச் செய்யும். 1047

நேற்றும் கொன்றது போல் வந்திருந்து வருத்திய வறுமை இன்றும் வந்து வருத்துமோ? 1048

நெருப்பின் நடுவே கூட ஏதாவது செய்து தூங்கி விட முடியும்; ஆனால் ஏழ்மையின் இடையிலோ யாதொரு வகையிலும் கண் உறங்கல் இயலாது. 1049

நுகரும் பொருள் வசதி இல்லாதவர் முற்றும் துறவு கொள்ளாதிருப்பது, உப்புக்கும் புளித்த கஞ்சிக்கும் எமனாந் தன்மையதே. 1050

## 106. இரவு

இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி யன்று. 1051

இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின். 1052

கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்நின்று
இரப்புமோ ரேஎர் உடைத்து. 1053

இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு. 1054

கரப்பிலார் வையகத்து உண்மையால் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது. 1055

கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும். 1056

இகழ்ந்தெள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்பது உடைத்து. 1057

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று. 1058

ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை. 1059

இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி. 1060

## 106. இரத்தல் (யாசித்தல்)

இரந்து கேட்கத்தக்கவரிடமே சென்று இரக்க வேண்டும்; அவர் கொடுக்காது மறைத்தால் அது அவர் பழியே; இரப்பவர் பழி அன்று. 1051

ஒருவரிடம் சென்று இரந்து கேட்ட பொருள் துன்புறாமல் கிடைக்குமாயின், ஒருவனுக்கு இரத்தலும் ஒருவகை இன்பமாம். 1052

ஒளிக்காத உள்ளமுடன் உதவும் கடமையை அறிந்தவர் முன்னே சென்று நின்று இரந்து கேட்டலும் ஓர் அழகுடையதாம். 1053

கொடாது மறைத்தலைக் கனவிலும் செய்தறியாதவரிடம் சென்று ஒன்று இரத்தலும் (அவர்க்கு நல்வாய்ப்பினை) ஈதலைப் போன்ற தகுதியாம். 1054

பிறர் கண்முன்னால் நின்று இரப்பவர் அத்தொழிலை மேற்கொண்டிருப்பது, மறைக்காது கொடுப்பவர் உலகத்தில் உள்ளதால்தான். 1055

ஒளித்து மறைக்கும் இடையூறு இல்லாதவரைக் கண்ட அளவிலே, வறுமை காரணமான துன்பங்கள் அனைத்தும் ஒருசேர ஒழியும். 1056

இழித்து ஏளனம் செய்யாமல் பொருள் உதவுபவரைக் கண்டால், இரப்பவரின் உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளே இன்புறுவதாகும். 1057

இரப்பவரைப் பெற்றில்லாவிட்டால், குளிர்ந்த இடத்தையுடைய இப் பெரிய உலகத்தின் நடைமுறை, மரப் பாம்மை கயிற்றினால் இயக்கப்பட்டு அங்குமிங்கும் போய் வருவது போன்றதாம். 1058

ஒன்று இரந்து அது கிடைக்கப் பெறாதவர் அங்கு நில்லாமல் சென்று விட்டபோது, கொடுக்கக் கூடியவரின் தோற்றம் எப்படியிருக்கும்? 1059

இரப்பவன் ஈயாதவர்மேல் சினம் கொள்ளலாகாது; அவ்வாறு சினத்தலாகாது என்பதற்கு அவனது வறுமைத் துன்பமே போதுமான சான்று. 1060

## 107. இரவச்சம்

கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி யுறும். 1061

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். 1062

இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்டது இல். 1063

இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு. 1064

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலி னூங்கினியது இல். 1065

ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல். 1066

இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று. 1067

இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும். 1068

இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும். 1069

கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர். 1070

# 107. இரத்தலுக்கு அஞ்சுதல்

மறைக்காது மகிழ்ந்து கொடுக்கும் கண்போல் சிறந்தவரிடமும் ஒன்று இரந்து கேட்காமல் இருப்பது கோடி மடங்கு சிறந்தது. 1061

உலகில் ஒரு சிலர் இரந்துதான் உயிர் வாழ வேண்டும் என்றால், அப்படி ஓர் உலகத்தைப் படைத்த கடவுள் இரப்பவர் போலவே அலைந்து கெடுக. 1062

ஏழ்மைத் துயரை இரந்து பிழைத்துத் தீர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிற கொடுமையைப் போல் கொடியது வேறு இல்லை. 1063

வேறு வழியில்லாதபோதும் இரத்தலைச் செய்யாத பெருந்தன்மை, உலகத்தின் இடமெல்லாம் கொள்ள முடியாத அவ்வளவு சிறப்புடையதாம். 1064

தெள்ளிய நீர்போல் ஆக்கிய எளிய கூழுணவு ஆயினும் தம் சொந்த உழைப்பால் வந்ததை உண்ணுவதனினும் இன்பமானது வேறில்லை. 1065

பசுவிற்குத் தண்ணீர் வேண்டுமெனக் கேட்பினும் நாக்கிற்கு அப்படி கேட்பதைவிட இழிவானது வேறில்லை. 1066

இரந்து கேட்ப தென்றால், ஈயாது மறைப்பவரிடம் இரவாதீர்கள் என்று, இரப்பவரை யெல்லாம் யான் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். 1067

(வறுமைக் கடலைக் கடக்க மேற்கொண்ட) இரத்தல் என்கிற காப்பு அற்ற ஓடம், ஈயாது மறைத்தல் என்னும் பாறை தாக்கப் பிளவு படும். 1068

இரத்தலின் இழிவை எண்ணினால் உள்ளம் உருகும்; ஈயாது மறைத்தலை எண்ணினாலோ, இருந்த உள்ளமும் இல்லாமல் அழிந்து விடம். 1069

இரப்பவர் 'கொடு என்று சொல்லிக் கேட்பதற்கே நாணத்தால் உயிர் போகிறது; இல்லையென்று மறைப்பவர்க்கு மட்டும் உயிர் போகாமல் உடம்பிற்குள் எங்கே ஒளிந்திருக்கிறதோ? 1070

## 108. கயமை

மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்டது இல். 1071

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத்து அவலம் இலர். 1072

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். 1073

அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ். 1074

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது. 1075

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான். 1076

ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லாத வர்க்கு. 1077

சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ். 1078

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ். 1079

எற்றிற் குரியர் கவயரொன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து. 1080

# 108. கீழ்மைத் தன்மை

கீழ்மக்கள் பார்ப்பதற்கு மற்ற மாந்தர் போலவே இருப்பர்; மாந்தரை அவர்கள் ஒத்திருப்பது போன்ற வேறு ஒப்புமை யாம் கண்டதில்லை. 1071

நல்லது இதுவென அறிந்தவரினும் அஃதறியாத கயவரே நல்வாய்ப்பு உடையவர்; ஏனெனில், கயவர் எது குறித்தும் கவலைப்படுவதில்லை. 1072

கீழ்மக்களும் தாம் விரும்புகின்றவற்றை யெல்லாம் செய்து நடப்பதால் இவ்வகையில் உரிமை யுடைய தேவரை ஒப்பர். 1073

கீழோர் அறிவற்ற மட்டிகளைக் கண்டால், அவரிலும் மட்டித்தனத்தில் மேம்பட்டவராகத் தம்மைக் காட்டி இறுமாப்புறுவர். 1074

கீழ்மக்களது ஒருவகை ஒழுக்கத்திற்குக் காரணம் அச்சமே; மீதி ஒழுக்கம், ஏதேனும் ஆசை ஏற்படின் அது, நிறைவேறச் சிறிது நேரம் இருக்கும். 1075

தாம் கேட்ட மறைபொருளைப் பிறரிடம் கொண்டு போய் வெளிப்படுத்துவதால், செய்தி அறிவித்து அடிக்கும் பறைமேளம் போன்றவர் கயவர். 1076

அடித்துக் கன்னத்தை உடைக்கும் மடக்கிய கையை உடைய கொடியவர் அல்லாதவர்க்குமுன், கயவர் தம் ஈரக் கையையும் உதறமாட்டார். 1077

குறையைச் சொல்லிய அளவிலேயே பெரியோர் பயன் அளிப்பர்; கீழோரோ, கரும்பைப் போல் முறுக்கிப் பிழிந்தால்தான் பயன்படுவர். 1078

பிறர் நன்கு உடுப்பதையும் உண்பதையும் கண்டால், பொறாமையால் அவர்மேல் குற்றம் கண்டுபிடிக்கத் தொடங்குவர் கீழோர். 1079

கயவர் எதற்கு அருகர் என்றால், ஓர் இடையூறு நேர்ந்தால், விரைந்து தம்மை அடிமையாக விற்று விடுவதற்கு அருகர் ஆவர். 1080

# பொருட்பால்

முற்றும்

# திருக்குறள் தெளிவு

## 3. இன்பத்துப் பால்

## 109. தகையணங் குறுத்தல்

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு. 1081

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து. 1082

பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு. 1083

கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்
பேதைக்கு அமர்த்தன கண். 1084

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து. 1085

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண். 1086

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். 1087

ஒண்ணுதற் கோஓ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு. 1088

பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து. 1089

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. 1090

## 109. தலைவியின் அழகு மயக்கி வருத்துதல்

இவ்வுருவம் தெய்வ மடந்தையோ? அழகிய மயிலோ? கனத்த தோடு அணிந்த மக்கட் பெண்ணோ! புரியாது என் நெஞ்சம் மயங்குகிறதே! 1081

கவரும் நோக்குடைய அப்பெண் என் பார்வைக்கு எதிர் எதிராகத் தான் பார்ப்பது, தானே தாக்கி வருத்தும் துடுக்குத் தெய்வம் ஒரு படையையும் துணைக் கொண்டு வந்தாற் போன்றது. 1082

எமன் என்பதை முன்பு கண்டறியேன்; அது பெண் தன்மையுடன் பெரிய போர் செய்யும் கண்களை உடையதென இப்போது நேரில் கண்டறிந்தேன். 1083

பெண் தன்மையுடைய இப்பேதைப் பெண்ணுக்கு, கண்கள், பார்ப்பவர் உயிரைக் குடிக்கும் தோற்றத்துடன் பொருகின்றன. 1084

இந்த இளம் பெண்ணின் பார்வை எமப் பார்வையா? கண் பார்வையா? பெண் மான் பார்வையா? (இல்லை) இம்மூன்றின் தன்மையும் உடையது. 1085

இப்பெண்ணின் கொடும் புருவங்கள் கண்கட்கு மேல் வளையாமல் நேராய் நீண்டு பார்வையை மறைத்திருந்தால், இவள் கண்கள் நடுங்கும் துன்பத்தை எனக்குச் செய்திருக்க மாட்டா! அந்தோ! 1086

இப்பெண்ணின் சாயாத முலைகளின்மேல் இட்டுள்ள மாராப்புத் துணி, மதம் பிடித்த யானையின் மேல் இட்ட முகபடாம் போன்றது. 1087

போரில் பகைவரும் அஞ்சும் எனது வலிமை, இந்தப் பெண்ணின் ஒளியுடைய நெற்றியழகுக்கு ஐயையோ உடைந்து ஒழிந்து விட்டதே! 1088

பெண்மான் போன்ற குறுகுறு பார்வையும் நாணமும் அணிந்த இந்நங்கைக்கு, அயலான அணிகளைக் கொண்டு வந்து மேலும் அணிந்திருப்பது ஏன்? 1089

ஆக்கப்பட்ட கள் தன்னை உண்டவரிடம் தவிர, காமத்தைப் போல் தன்னைக் கண்டவரிடமும் களி மயக்கம் உண்டாக்குவதில்லை. 1090

## 110. குறிப்பறிதல்

இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. 1091

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது. 1092

நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர். 1093

யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும். 1094

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். 1095

உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும். 1096

செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு. 1097

அசையியற்கு உண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும். 1098

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள. 1099

கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. 1100

## 110. தலைவியின் உள்ளக் குறிப்பை உணர்தல்

இவள் மையுண்ட கண்களில் இரட்டைப் பார்வை உண்டு; அவற்றுள் ஒரு பார்வை காம நோய் தரும் பார்வை; மற்றொன்று அந்நோய் நீக்கும் மருந்து. 1091

இவள் கண்ணால் திருட்டுத்தனமாக என்னைப் பார்க்கும் சிறு பார்வை, காம வேட்டையில் பாதி வெற்றி மட்டும் அன்று; பாதிக்கும் பெரியதாகும். 1092

என்னை ஏறெடுத்து நோக்கினாள்; நோக்கி நாணத்தால் தலை வணங்கினாள்; அஃது அன்புப் பாத்தியில் அவள் பாய்ச்சிய நீராகும். 1093

யான் அவளை நோக்கும்போது அவள் தரையை நோக்குவாள்; யான் நோக்காதபோது தான் என்னை நோக்கி மெல்லச் சிரிப்பாள். 1094

நேரே என்னைக் குறிவைத்துப் பார்க்கவில்லையே தவிர, மற்றபடி அவள் ஒரு கண்ணைச் சுருக்குவது போல் பார்த்துச் சிரிப்பாள். 1095

வெளியில் பட்டுக் கொள்ளாதவர்போல் பேசினாலும், உள்ளே வெறுப்பின்றி விருப்புடையவரின் சொல்லின் குறிப்பு விரைவில் அறியப்படும். 1096

வெறுப்பற்ற ஏளனப் பேச்சும் சினங் கொண்டவர் போன்ற பார்வையும், வெளியில் பட்டுக் கொள்ளாதவர் போன்ற உள்ளன்பு கொண்டிருப்பவரின் நடிப்பாகும். 1097

யான் நோக்கும் போது பற்றுடையவளாய் மெல்லச் சிரிப்பாள்; அசைந்து நடக்கும் அவளுக்கு அப்போது ஒரு தனியழகு உண்டாகிறது. 1098

முன்பின் அறியாத அயலார் போலப் பொதுவாகப் பார்த்துக் கொள்ளும் களவுப் பார்வை, காதல் கொள்பவரிடம் உண்டு. 1099

காதலர்களின் கண்களோடு கண்கள் இணைந்து நோக்கால் ஒத்துவிட்டால், பிறகு வாய்ப் பேச்சுக்கள் எந்தப் பயனும் செய்ய வேண்டியன அல்ல. 1100

# 111. புணர்ச்சி மகிழ்தல்

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள. 1101

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து. 1102

தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. 1103

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள். 1104

வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். 1105

உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள். 1106

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு. 1107

வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. 1108

ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன். 1109

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. 1110

## 111. தலைவியோடு புணர்தலுக்கு மகிழ்தல்

பார்த்தும் கேட்டும் அருந்தியும் மோந்தும் தொட்டும் அறிந்து மகிழ்கிற ஐம்புல இன்பங்களும் ஒளியுடைய வளையலணிந்த இவளிடமே உள்ளன. 1101

உலகில் ஒன்று தந்த நோய்க்குப் பிற பொருள் மருந்தாகும். ஆனால் அணிகலன் பூண்ட இவளோ தான் தந்த காம நோய்க்குத் தானே மருந்து. 1102

தாம் காதலித்த பெண்ணின் மெத்தென்ற தோளில் துயிலும் இன்பத்தினும் தாமரைக் கண்ணனாகிய கடவுளது உலகம் இனிக்குமோ? 1103

(உலகியலுக்கு மாறாக) விட்டு நீங்கினால் சுடுவதும் கிட்ட நெருங்கினால் குளிர்வதுமாகிய (காமத்)தீயை இவள் எங்குப் பெற்றாளோ? 1104

பூச்சூடிய கூந்தலுடைய இவள் தோள்கள் எவ்வெப்போது எவ்வெப் பொருள்களை விரும்பினோமோ அவ்வப் பொருள்கள் போலவே இன்புறுத்தும். 1105

மேலே படுந்தோறும் என் உயிர் தழைக்கும்படி தீண்டுவதனாலே, இப் பெண்ணுக்குத் தோள்கள் அமிழ்தத்தினால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். 1106

அம்மாடி! இப்பெண்ணின் புணர்ச்சி, தம் சொந்த வீட்டில் இருந்து கொண்டு தம் சொந்த உணவைப் பலர்க்கும் பங்கிட்டு உண்ணும் இன்பம் போன்றது. 1107

தம் இருவருக்கும் இடையே காற்றும் புக முடியாதபடி நெருங்கி அழுந்தித் தழுவுதல், காதல் கொண்ட இருவருக்கும் மிக இனியதாகும். 1108

பிணங்குதலும், உணர்ந்து பிணக்கு நீங்குதலும் பின் புணர்தலும் ஆகிய இவை காதல் கொண்டவர்கள் பெற்ற பேறுகளாம். 1109

பல கலைகளை அறிய அறிய இன்னும் அறியாத வையே மிகுதி என உணர்வதுபோல், சிவந்த அணிகள் பூண்ட இவளைத் தழுவத் தழுவ, இவளிடம் பெற வேண்டிய இன்பங்கள் இன்னும் உள்ளமை அறியப் படும். 1110

## 112. நலம் புனைந்துரைத்தல்

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள். 1111

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று. 1112

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. 1113

காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று. 1114

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. 1115

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். 1116

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. 1117

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. 1118

மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி. 1119

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். 1120

## 112. தலைவியின் நலத்தைத் தலைவன் பாராட்டுதல்

அனிச்சமலரே! நீ மற்ற மலர்களினும் நல்ல மென்மைத் தன்மை உடையை; வாழ்க! யாம் விரும்பும் தலைவி உன்னிலும் மென்மைத்தனம் உடையவள். 1111

என் நெஞ்சே! பலரும் மகிழ்ந்து காணும் மலர்கள் இவள் கண்களை ஒத்துள்ளன என்று கருதி, மலர்களைக் கண்டால் இவள் நினைவால் மயங்குகிறாய் நீ! 1112

இவளுக்கு, தளிர் மேனியாம், முத்து பற்களாம், மலர் மணம் உடல் மணமாம், வேல் மை பூசிய கண்களாம், மூங்கில் தோள்களாம். 1113

குவளை மலர் இவள் கண்களைக் காணும் திறன் பெறின், சிறந்த அணிபூண்ட இவள் கண்களை ஒவ்வோம் என்று நாணித் தலைகவிழ்ந்து தரையை நோக்கும். 1114

இவள் அனிச்சமலரைக் காம்பு நீக்காது தலையில் சூடிக் கொண்டாள்; அச்சுமை பொறாத மெல்லிய இடுப்பிற்கு இனிச் சாவுப்பறை தவிர மங்கலப் பறைகள் ஒலிக்க மாட்டா. 1115

விண்மீன்கள் திங்களுக்கும் இம்மங்கையின் முகத்திற்கும் வேறுபாடு தெரியாமல் தம்மிடத்தில் கலங்குகின்றன. 1116

தேய்ந்த இடம் மீண்டும் நிறைந்து விளங்கும் நிலாவிற்கு இருப்பது போல் தேயாத (என்றும் நிறைந்துள்ள) இவள் முகத்தில் களங்கம் உண்டா? 1117

நிலவே,நீ வாழ்க! இந்நங்கையின் முகத்தைப் போல நீயும் மிக்க ஒளிவீச வல்லமை உடையை என்றால், நீயும் என் காதலுக்கு உரிமை உடையை! 1118

நிலவே! பூப்போலும் கண்ணுடைய இப்பெண்ணின் முகத்தை ஒத்திருக்க வேண்டுமாயின், பலரும் பார்க்கத் தோன்றாமல் கற்புநெறி நிற்பாயாக! 1119

(மென்மைக்குப் பேர்போனவைகளாகிய) அனிச்ச மலரும் அன்னத்தின் சிறகும் இவள் காலடிக்கு நெருஞ்சிப் பழத்தின் முட்கள் போலாம். 1120

## 113. காதற் சிறப்புரைத்தல்

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர். 1121

உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. 1122

கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம். 1123

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து. 1124

உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். 1125

கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எங் காத லவர். 1126

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து. 1127

நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து. 1128

இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும் இவ்வூர். 1129

உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னும் இவ்வூர். 1130

## 113. காதலர்கள் தம் காதல் சிறப்பை உரைத்தல்

பணிந்து பேசும் இவளது வெண்பற்களில் ஊறுகிற நீர், பாலோடு தேன் கலந்தாற்போல் மிக இனிக்கும். 1121

இப்பெண்ணோடு எமக்கு இடையேயுள்ள தொடர்பு, உடம்போடு உயிர்க்கு இடையே என்ன தொடர்போ, அன்ன தொடர்பே! 1122

என் கண்ணின் கருமணிக்குள் இருக்கும் பாப்பாவே! நீ அங்கிருந்து போய்விடு! யாம் விரும்பும் அழகிய நெற்றியையுடைய காதலிக்கு அதுபோல் காவலான இடம் வேறு இல்லை. 1123

நல்லணி பூண்ட இவள் கூடியிருக்கும் போது, உயிர் உடம்போடு வாழ்தல் போன்றுளாள்; பிரிந்த போது, உயிர்க்குச் சாவு நேர்ந்தது போன்றுளாள். 1124

ஒளிமிக்க போர்க் கண்களையுடைய, இவளுடைய பண்புகளைத் தவறி மறந்துவிடின் மீண்டும் யான் நினைப்பேன்; ஆனால் நான் மறப்பதே இல்லையே! 1125

எம் காதலர் எம் கண்ணின் உள்ளிடத்திலிருந்து நீங்கார்; யாம் கண்ணை மூடித் திறந்து இமைத்தாலும் துன்புறார்; அவ்வளவு நுட்பமாயுளார். 1126

காதலர் எம் கண்ணுள் உளார் ஆதலின், கண்ணை மைபூசி அணி செய்தால் அவர் மறைவார் என உணர்ந்து அவ்வாறு செய்யோம். 1127

காதலர் எம் நெஞ்சிலும் உள்ளாராகலின், அவர் சுடப்பட்டு வெந்து போவார் என உணர்ந்து சூடான உணவை நெஞ்சுவழி உண்ண அஞ்சுகிறோம். 1128

கண்ணிமைத்தால் காதலர் மறைவார் என அறிவேன்; அவர் அவ்வாறு கண்ணுள் இருக்கவும், அன்பற்ற அயலார் என அவரைப் பழிக்கின்றனர் இவ்வூரார். 1129

காதலர் என் நெஞ்சில் என்றும் மகிழ்ந்து தங்கியுள்ளார்; அஃதறியாத இவ்வூரார், அவர் அயலார் - பிரிந்து போய்விட்டார் எனப் பழிக்கின்றனர். 1130

## 114. நாணுத் துறவுரைத்தல்

காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடலல்லது இல்லை வலி. 1131

நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து. 1132

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன்இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல். 1133

காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை. 1134

தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர். 1135

மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்கென் கண். 1136

கடலன்ன காமம் உழ்ந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல். 1137

நிறையரியர் மன்அளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும். 1138

அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு. 1139

யாங்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. 1140

## 114. காதலர் நாணம் துறந்ததை உரைத்தல்

காமத்தால் அல்லற்பட்டு வருந்தியவர்க்கு, மடல் ஏறுதலைத் தவிர, வலிய காவல் வேறில்லை. (மடல் ஏறுதல் - பனை மடலால் ஆன குதிரை மேல் ஏறி ஊர் சுற்றி வந்து தம் காதலை வெளிப்படுத்துதல்) 1131

காதலியின் பிரிவைப் பொறாத என் உடலும் உயிரும் நாணத்தை விலக்கித் தள்ளிவிட்டு மடல் ஏறத் தொடங்கி விட்டன. 1132

முன்பு நாணமும் நல்ல ஆண்மையும் கொண்டிருந்தேன்; இப்போதோ காமுகர் ஊரும் மடலைக் கொண்டுள்ளேன். 1133

என் நாணம் நல்லாண்மை என்னும் தோணிகளை, காமம் என்னும் விரைவான வெள்ளம் அடித்துக் கொண்டு செல்கிறது. 1134

மடல் ஏறுதலையும் மாலை நேரத்தில் வருந்தும் காம வேதனையையும், மாலையும் சிறு வளையல்களும் அணிந்த என் காதலி எனக்குத் தந்துளாள். 1135

அப்பேதைப் பெண் காரணமாக என் கண்கள் மூடமாட்டா; எனவே, நள்ளிரவிலும் உறுதியாக மடலேற எண்ணுவேன். 1136

கடலனைய மிக்க காம வேதனையால் வருந்தினாலும், மடல் ஏறாத பெண்ணைப் போல் பெருமையான பொருள் உலகில் இல்லை. 1137

இவர் நெஞ்சு நிறையில்லாதவர் - மிக இரங்கத் தக்கவர் என்று பாராமல், காமம் மறைவைக் கடந்து பொதுமன்றம் வரை வந்துவிடும். 1138

எல்லாரும் அறியவில்லை என்று கருதி, அறிவிப்பதற்காக என் காமமானது தெருச் சந்திக்கு வந்து மருண்டு சுழல்கிறது. 1139

யான் பட்ட காம நோயைத் தாங்கள் இன்னும் பட்டறியாததால் அறிவில்லாத சிலர் எம் கண்ணுக்கு நன்கு தெரியும்படி எள்ளிச் சிரிக்கின்றனர். 1140

## 115. அலர் அறிவுறுத்தல்

அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால். 1141

மலரன்ன கண்ணாள் அருமை அறியாது
அலரெமக்கு ஈந்ததிவ் வூர். 1142

உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து. 1143

கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து. 1144

களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படுந் தோறும் இனிது. 1145

கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று. 1146

ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய். 1147

நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல். 1148

அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம்பு என்றார்
பலர்நாண நீத்தக் கடை. 1149

தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும் இவ்வூர். 1150

## 115. ஊரார் அலர் (பழி) தூற்றுவதை அறிவுறுத்துதல்

எம் காதல் பற்றி ஊரார் அலர் தூற்றுவதால் (அவளை வேறு யாரும் மணக்க வரமாட்டாராதலின்) அரிய உயிர் நிலைத்துள்ளது. எம் நற்பேற்றால் அந்த அலரை இன்னும் பலர் அறியமாட்டார்கள். 1141

பூப்போலும் கண்ணுடைய அவளது அருமை அறியாமல் இந்த ஊரார் எமக்கு அலர் உண்டாக்கினர். 1142

ஊர் அறிய அலர் தோன்றாதிருக்குமா? அந்த அலரை அடைவதற்கு முன்பே அடைந்து விட்டது போன்ற நிலைமை இருந்தது. 1143

ஊரார் தூற்றும் அலரால் எம் காமம் மேலும் வளர்கிறது; அது இல்லையானால், தன் இயல்பு கெட்டுத் 'தவ்' எனச் சுருங்கி விடும். 1144

காமம் அலரால் வெளிப்படுந்தோறும் இனிக்கிறது, அது, கட்குடியர்கள் உண்டுகளிக்குந் தோறும் அக் கள் உண்ணலை விரும்புவது போன்றதாம். 1145

காதலரைக் கண்டது ஒருநாள்தான் நிகழ்ந்தது; அலரோ திங்களைப் பாம்பு (சந்திர கிரகணம்) பிடித்தது போல ஊர் அறியப் பரவி நிலைத்தது. 1146

இந்தக் காம நோய் ஊரார் தூற்றும் அலரை எருவாகவும் எம் அன்னை வைகிற கொடுஞ் சொல்லைத் தண்ணீராகவும் கொண்டு நீண்டு வளர்கிறது. 1147

அலர் எழுந்ததால் காமத்தீயை அணைப்போம் என முயலுதல், நெய்யால் நெருப்பை அணைப்போம் என முயலுதல் போன்றதாம். 1148

'அஞ்சாதே' என்று அன்று சொன்ன காதலர் இன்று நம் குடியினர் பலரும் நாணும்படி பிரிந்து சென்றுள்ளபோது, அலருக்கு நாண முடிகிறதா? 1149

யாம் எதிர்பார்த்த அலரை இவ்வூரார் எடுத்து மொழிகின்றனர்; எனவே, காதலர் தாம் மணக்க விரும்பினால் அவ்வாறே செய்வார். 1150

# 116. பிரிவாற்றாமை

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை. 1151

இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தால் புணர்வு. 1152

அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். 1153

அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு. 1154

ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கின் அரிதால் புணர்வு. 1155

பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை. 1156

துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறைவா நின்ற வளை. 1157

இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு. 1158

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ. 1159

அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர். 1160

## 116. பிரிவுத் துயரைப் பொறுக்க முடியாமை

பிரிந்து செல்லவில்லை என்றால் என்னிடம் பேசு; பிரிந்து போய் விரைந்து வருதலைப் பற்றி என்றால் அப்போது உயிர் வாழ்பவரிடம் பேசிக் கொள். 1151

அன்று அவரது பார்வையே இன்பம் உடையதாயிற்று; இன்றோ அவரது புணர்ச்சியும், பிரிந்துவிடுவாரோ என அஞ்சும் எளிமையைத் தருகிறது. 1152

அறிவுள்ள நல்லோரிடமும் ஒருநேரம் பிரிவு இருக்கத்தான் செய்யுமாதலின், பிரியேன் என்று அவர் உறுதி கூறுவதை நம்புதல் இயலாது. 1153

அருள் கொண்டு 'அஞ்சாதே' என ஆறுதல் கூறிய காதலர் பிரியின் (அவர் தவறேயன்றி) அவரது தேறுதல் மொழியை நம்பியவரிடம் தவறு ஏது? 1154

(தோழியே!) என்னைக் காப்பதனால் காதலரது பிரிவைத் தடுத்துக் காக்க; மற்றபடி அவர் பிரிந்துவிடின் மீண்டும் சேர்க்கை அரிதாகும். 1155

காதலர் பிரிவதாகச் சொல்லும் கொடியவர் என்றால் அவர் மீண்டும் வந்து அருள்புரிவார் என்னும் ஆசை கைகூடாது. 1156

தலைவன் பிரிந்த கொடுமையை, பிரிவால் இளைத்துப் போன முன்கை மணிக்கட்டிலிருந்து கழன்று விழும் வளையல்களே பலர் அறியத் தூற்றாவோ? 1157

தம் குழுவினர் இல்லாத ஊரில் வாழ்வது இனிமை யற்றது; இனிய காதலரைப் பிரிந்து வாழ்தலோ அதனினும் இனிமையற்றதாம். 1158

நெருப்பானது தன்னைத் தொட்டால்தான் சுடுமே தவிர, காமத் தீநோயைப் போல விட்டு நீங்கினாலும் சுடும் வல்லமை உடையதோ? 1159

அரிய பிரிவிற்கு உடன்பட்டு, துன்ப நோயை ஒருவாறு நீக்கிப் பிரிவைத் தாங்கிக் கொண்டு பின்னும் உயிருடன் இருந்து வாழ்பவர் உலகில் பலர் உள்ளனரே! (அவர்களால் அது எவ்வாறு முடிகிறது?) 1160

## 117. படர்மெலிந் திரங்கல்

மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும். 1161

கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும். 1162

காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பி னகத்து. 1163

காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல். 1164

துப்பின் எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர். 1165

இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. 1166

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன். 1167

மன்னுயி ரெல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை. 1168

கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா. 1169

உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண். 1170

# 117. பிரிவுத் துயரால் மெலிந்து வருந்துதல்

காம நோயை யான் மிகவும் மறைக்கிறேன்; ஆனால் இந்நோயோ, இறைப்பவர்க்கு ஊற்றுத் தண்ணீர் சுரப்பது போல் மேலும் மிகுதியாகிறது. 1161

இக்காம நோயை முழுதும் மறைக்கவும் வல்லேன் அல்லேன்; நோயை உண்டாக்கிய காதலர்க்கு எடுத்துச் சொல்லவும் வெட்கமாயிருக்கிறது. 1162

துயர் பொறாத என் உடம்பிலே உயிரையே காவடித் தண்டாகக் கொண்டு காமம் ஒரு பக்கமும் நாணம் ஒரு பக்கமுமாகத் தொங்குகின்றன. 1163

காமம் என்னும் கடல் மட்டும் நிலையாக உள்ளது; ஆனால் அதை நீந்திக் கடக்க உதவும் காவல் தெப்பம் நிலையாகக் கிடைத்திலது. 1164

நட்பாயிருக்கும் போதே துன்பம் வரச் செய்யும் காதலர், பகையானால் என்ன செய்வாரோ? அந்தோ! 1165

கூடியபோது காமம் இன்பக் கடல் போன்றது; அக் காமம் பிரிவால் வருத்தும்போது உண்டாகும் துன்பம் அந்தக் கடலினும் மிகப் பெரியது. 1166

காமமாகிய கடிய வெள்ளத்தில் எவ்வளவு நீந்தியும் யான் கரை காணவில்லை. நடு இரவிலும் உயிர் பிரியாது யானே தனித்து உள்ளேன். 1167

இரவுக் காலம் எல்லா உயிர்களையும் தூங்க வைத்து விட்டு என்னைத் தவிர வேறு துணையில்லாதிருக்கின்றது; அந்தோ அது இரங்கத்தக்கது. 1168

காதலர்கள் பிரிந்துள்ள இந்நாட்களில் நீண்ட நேரமாய்க் கழிகின்ற இரவுகள், பிரிந்துள்ள கொடியவரின் கொடுமை யினும் தாம் கொடியன. 1169

காதலர் உள்ள இடத்திற்கு என் மனம் போய் வருவது போலவே என் கண்களும் போய் வர முடியுமாயின் கண்கள் இதுபோல் கண்ணீர் வெள்ளத்தில் நீந்த வேண்டியதில்லை; அந்தோ! 1170

## 118. கண்விதுப்பழிதல்

கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது. 1171

தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன். 1172

கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து. 1173

பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா
உய்வில்நோய் என்கண் நிறுத்து. 1174

படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்
காமநோய் செய்தஎன் கண். 1175

ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது. 1176

உழந்துழந்து உள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண். 1177

பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணாது அமைவில கண். 1178

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண். 1179

மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து. 1180

## 118. கண்கள் காதல் வேட்டையால் வருந்துதல்

கண்கள் தலைவரைக் காட்டியதாலேயே யாம் கண்டு இக்காம நோயைப் பெற்றோம்; அங்ஙனம் இருக்கக் கண்கள் இப்போது அழுவது ஏனோ? 1171

அன்று ஆராய்ந்தறியாமல் தலைவரைக் கண்ட கண்கள் இன்று பரிவு கொள்ளாமல் துன்புற்று வருந்துவது ஏனோ? 1172

அன்று கண்கள் தாமாகவே திடுமெனக் காதலரைப் பார்த்துவிட்டு இன்று தாமே அழுகின்றன; இது பிறர் எள்ளி நகைத்தற்கு உரியது. 1173

என் கண்கள் பிழைக்க முடியாத தீராப் பிணியை என்னிடம் நிலைநிறுத்திவிட்டு, தாம் அழுது சிந்தவும் முடியாமல் நீர் வற்றி விட்டன. 1174

கடலினும் மிக்க காம நோயை அன்று உண்டாக்கிய என் கண்கள் இன்று தூங்க முடியாவாய்த் துன்புற்று வருந்துகின்றன. 1175

எமக்கு இத்தகைய காம நோயை உண்டாக்கிய கண்கள் தாமும் இவ்வாறு அழுது துன்புறுவது, ஓ! ஓ! மிகவும் நல்லதே! 1176

அன்று அவரை விரும்பிக் குழைந்து வேண்டுமென்று கண்டு காதலித்த கண்கள், இன்று தூங்காது துன்புற்றுத் துன்புற்று உள்ளே உள்ள நீர் முழுதும் வற்றுக. 1177

எம்மைக் காப்பாற்றாது காதல் மட்டும் கொண்டவர் எங்கோ உள்ளார், அந்தோ! மற்று அவரைக் காணாமல் எம் கண்கள் அமைதி பெற மாட்டா. 1178

எம் கண்கள் காதலர் வராதபோதும் பிரிவால் தூங்குவதில்லை; வரினும் பிரிவரோ என அஞ்சித் தூங்குவதில்லை. அவ்விரு நிலையிலும் மிக்க துயர் உறுகின்றன. 1179

அடித்துச் செய்தி அறிவிக்கும் பறைபோல அழுது துயர் வெளிப்படுத்தும் கண்களையுடைய எம் போன்றவரிடமிருந்து மறைவான செய்தியை அறிந்து கொள்ளுதல் ஊரார்க்கு அரியதன்று, எளிதே! 1180

## 119. பசப்புறு பருவரல்

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்பியார்க்கு உரைக்கோ பிற. 1181

அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு. 1182

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து. 1183

உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு. 1184

உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்பூர் வது. 1185

விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. 1186

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு. 1187

பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல். 1188

பசக்கமன் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின். 1189

பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின். 1190

# 119. உடலின் பசப்பு நிறத்தால் வருந்துதல்

விரும்பிய காதலர்க்கு அன்று பிரிவுக்கு உடன்பாடு தந்தேன்; இன்று பசப்பு நிறம் கொண்ட என் உடலின் இயல்பை மற்று யார்க்கு எடுத்துரைப்பேன். 1181

பசப்பு நிறமானது, அக் காதலர் உண்டாக்கினார் என்னும் பெருமையுடன் என் உடல்மேல் ஏறி ஊர்ந்து பரவுகிறது.
1182

எனக்குப் பதிலுதவியாகக் காம நோயையும் பசலை நிறத்தையும் தந்துவிட்டு, என்னிடமிருந்து என் அழகுச் சாயலையும் நாணத்தையும் காதலர் எடுத்துக் கொண்டார்.
1183

யான் மிகவும் அவரை நினைக்கிறேன்; பேசுவதும் அவர் பெருமையையே! இருப்பினும், எனக்குப் பசப்பு வந்தது வஞ்சனையன்றி வேறு யாதோ? 1184

இதோ பார், எம் காதலர் செல்கிறார்; இதோ பார், என் உடலில் பசலை நிறம் படர்வதை! 1185

விளக்கின் அணைவை எதிர்பார்த்திருக்கும் இருட்டைப் போல, கணவனது புணர்ச்சியின் நீக்கத்தைப் பசலை நிறம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும். 1186

காதலரை அணைத்துக் கிடந்தேன்; சிறிது அப்பால் நகர்ந்தேன்; அச்சிறு பிரிவிற்கே அள்ளிக் கொள்ளலாம் போல் பசலை வந்து படர்ந்துவிட்டது. 1187

இவள் பசப்பு கொண்டாள் என்று என்னைப் பழிக்கின்றனரே யன்றி, இவளை அவர் விட்டு நீங்கினார் என்று இரக்கப்படுபவர் எவரும் இல்லையே! 1188

ஆசை காட்டிப் பிரிந்த அவர் மீண்டும் நல்ல நிலையில் வந்து கூடுவது உறுதி எனில், என் உடல் பட்டது பட்டுப் பசந்து போகவும் செய்யலாம். 1189

ஆசை காட்டிப் போன அவர் எனக்கு அருள் புரியாமையை எவரும் பழிக்க மாட்டார் என்றால், பசப்புற்றதாக யான் பேர் பெறுவதும் நல்லதே! 1190

## 120. தனிப்படர் மிகுதி

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி. 1191

வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. 1192

வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு. 1193

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின். 1194

நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை. 1195

ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது. 1196

பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான். 1197

வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல். 1198

நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு. 1199

உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு. 1200

# 120. தனிமைத் துன்பத்தின் மிகுதி

தாம் விரும்பும் காதலர் தம்மை விரும்பும்படியான பேறு பெற்றவர், விதை கோது முதலியன இல்லாத காதல் கனியைப் பெற்றவர் ஆவர். 1191

தம்மை விரும்பும் தலைவியார்க்குத் தலைவர் செலுத்தும் அருள், உலகில் வாழ்பவர்க்கு வானம் மழை பொழிந்தாற் போன்றதாம். 1192

விரும்பிய தலைவரால் விரும்பப்படும் தலைவியர்க்கு, 'யாம் மீண்டும் வாழ முடியும்' என்னும் இறுமாந்த நிலை பொருத்தமானதே. 1193

எல்லாராலும் விரும்பப்படும் நற்பெண்டிரும், தாம் விரும்பும் தலைவரால் விரும்பப்படார் என்றால், இனி எவராலும் நட்புக் கொள்ளப்படார். 1194

நாம் காதல் கொண்ட தலைவர் அதுபோலவே நம் மேல் தாம் காதல் கொள்ளாதபோது நமக்கு அவர் என்ன நன்மை செய்வாரோ? 1195

காதல் ஓரிடத்தில் மட்டும் இருந்தால் இன்பம் தராது; காவடியைப் போல இரு பக்கங்களிலும் (இருவரிடத்தும்) இருந்தாலே இனிக்கும். 1196

காமன் (மன்மதன்) ஒருவரிடம் மட்டும் நின்று துன்பறுத்துகிறானே, அவ்வொருவருடைய துன்பத்தையும் துயரத்தையும் அவன் அறியானோ? 1197

விரும்பிய காதலரின் இன்சொல்லைப் பெறாமல் உலகில் உயிர் வாழ்பவரினும் வன்னெஞ்சம் உடையவர் எவரும் இலர். 1198

விரும்பிய காதலர் அருளாது பிரிந்தார் என்றாலும் அவரைப் பற்றிக் கூறும் புகழுரைகள் செவிக்கு இனிக்கின்றன. 1199

என் நெஞ்சமே! வீணாகக் கடலை வெறுத்து முனியாதே! உன்னைப் பொருந்தாமல் பிரிந்தவரிடம் உனக்கு உற்ற நோயை அறிவிப்பாயாக! வாழ்க நீ! 1200

## 121. நினைந்தவர் புலம்பல்

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது. 1201

எனைத்தொன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன்று இல். 1202

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும். 1203

யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து எந்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர். 1204

தந்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எந்நெஞ்சத்து ஓவா வரல். 1205

மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன். 1206

மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும். 1207

எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு. 1208

விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து. 1209

விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி. 1210

## 121. முன் நிகழ்ந்ததை நினைத்துப் புலம்புதல்

காதலரை நினைத்த அளவிலே நீங்காத பெரு மகிழ்ச்சியைக் காமம் தருவதால், குடித்தால் மட்டும் இனிமை தரும் கள்ளை விட அக்காமம் இனியது! 1201

தாம் விரும்பும் காதலரை நினைத்தாலே ஒரு துன்பமும் வராமற் போய்விடுகிறது. எனவே, எவ்வகையிலும் காமம் இனிய ஒரு பொருளே! அறிக! 1202

எனக்குத் தும்மல் தோன்றுவதுபோல் காட்டித் தோன்றாது அடங்குகிறது; அவர் என்னை நினைப்பது போல் காட்டி நினையாது விடுகிறாரோ? 1203

எம் நெஞ்சத்தில் ஓ! ஓ! அவர் இருக்கின்றாரே, அதேபோல அவர் நெஞ்சிலும் யாமும் இருக்கிறோமோ, இல்லையோ! 1204

நமது நெஞ்சிலே யாம் புகாதபடி காவல்காத்து எம்மைத் தடுக்கிற காதலர், எமது நெஞ்சில் மட்டும் ஓயாது தாம் வருவதற்காக நாணாரோ? 1205

அவரோடு யான் வாழ்ந்த நாளை நினைக்கிற இன்பத்தினால்தான் இன்னும் உயிரோடுள்ளேன்; வேறு எதனால் யான் உயிரோ டிருக்க முடியும்? ஐயோ! 1206

காதலரோடு பெற்ற இன்பத்தை மறவாமல் நினைத்துங் கூட பிரிவு நெஞ்சைச் சுடுகிறது; மறந்து விடின் என்ன ஆவேனோ? அந்தோ! 1207

காதலரை யான் எப்படியெல்லாம் நினைத்தாலும் என்மேல் சினவார்; அவர் எனக்கு அளிக்கும் பெருமை அத்தகைய தல்லவா? 1208

நாம் இருவரும் ஒருவரே யன்றி வேறு ஆகோம் என்று தேற்றிய காதலரின் இரக்கம் இன்மையை மிக மிக நினைந்து என் இனிய உயிர் சாகிறது. 1209

நிலவே! பிரிந்து சென்ற தலைவரை விடாமல் தேடி நான் கண்ணால் காணும் வரை நீ மறையாதே வாழ்க நீ! 1210

## 122. கனவுநிலை உரைத்தல்

காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து. 1211

கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்கு
உயலுண்மை சாற்றுவேன் மன். 1212

நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்டென் உயிர். 1213

கனவினான் உண்டாகும் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு. 1214

நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது. 1215

நனவென ஒன்றில்லை யாயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன். 1216

நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்எம்மைப் பீழிப் பது. 1217

துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து. 1218

நனவினால் நல்காரை நோவர் கனவினால்
காதலர்க் காணா தவர். 1219

நனவினால் நம்நீத்தார் என்பர் கனவினால்
காணார்கொல் இவ்வூ ரவர். 1220

## 122. காதலரைக் கனவில் காண்பதை உரைத்தல்

காதலரின் தூதாக வந்த கனாவுக்கு, யான் என்ன விருந்து செய்தனுப்புவேன்? 1211

என் கயல் விழிகள் தூங்குக என்று யான் கெஞ்ச உடனே தூங்குமானால், கனவில் வரும் காதலரிடத்தில் எப்படியோ யான் உயிர் பிழைத் திருப்பதை எடுத்துரைப்பேன். 1212

நனவில் அருள் புரியாத காதலரைக் கனவிலாவது காண்பதனால்தான் என் உயிர் போகாமல் இருக்கிறது. (நனவு - விழித்திருக்கும் நேரம்) 1213

நனவிலே அருளாத காதலரைத் தேடித் தருவதற்காகக் கனவிலே காமம் வேலை செய்கிறது. 1214

நனவிலே காதலரைக் கண்டு நுகரும் அவ்வின்பம் போலவே கனவு கூடத்தான் கண்ட பொழுதே இனிக்கிறது. 1215

நனவு (விழிப்பு நிலை) என ஒரு கொடுமை இல்லையென்றால், கனவிலே காதலர் பிரியாமலே இருப்பாரே, அந்தோ! 1216

நனவிலே அருளாத கொடிய காதலர் கனவிலே வந்து எம்மை வருத்துவது என்ன தொடர்பு பற்றியோ? 1217

யான் தூங்கும்போது கனவில் காதலர் என் தோள்மேல் இருக்கிறார்; விழித்துக் கொண்டாலோ விரைந்து என் நெஞ்சுக்குள் ஓடி ஒளிகிறார். 1218

கனவிலே காதலரைக் கண்டறியா தவர்கள் தான் நனவிலே அருள் புரியாத அவரை நொந்து பழிப்பர். 1219

எம் காதலர் நனவிலே எம்மை விட்டுப் பிரிந்தார் என இவ்வூரார் பழிக்கின்றனரே, கனவிலே அவர் வருவதை இவர்கள் அறியார் போலும்! 1220

## 123. பொழுதுகண்டு இரங்கல்

மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது. 1221

புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை. 1222

பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும். 1223

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும். 1224

காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. 1225

மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன். 1226

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய். 1227

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை. 1228

பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. 1229

பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர். 1230

## 123. மாலைப் பொழுது கண்டு வருந்துதல்

ஏ பொழுதே! மாலையா நீ? அல்லை; மணந்து பிரிந்த காதலர்களின் உயிரை உண்ணும் ஊழிக் கடல் நீ! நீயாவது வாழ்க! 1221

மருண்ட மாலைப் பொழுதே! நீ ஒளியிழந்துள்ளாய்; உன் துணைவரும் எம் துணைவரைப் போல் ஒரு கொடியவரோ? வாழ்க நீ! 1222

பனி பெய்வதால் பசப்புக் கொண்ட மாலையானது, எனக்கு வாழ்வில் வெறுப்புத் தோன்றித் துன்பம் மிகும்படி வருகிறது. 1223

என் காதலர் இல்லாதபோது, மாலையானது, கொலைக் களத்தில் கொல்லுகிற அயலாரைப் போல் தோன்றி வருகிறது. 1224

(விடியா பொழுதை விடியச் செய்து உதவிய) காலை நேரத்திற்கு மட்டும் யான் என்ன நன்மை செய்தேன்? வருத்துகின்ற இம் மாலை நேரத்திற்கு மட்டும் என்ன பகை செய்து விட்டேன். 1225

பிரிந்தால் மாலைப் பொழுது நோய் செய்யும் என்னும் உண்மையை, காதலர் பிரியாதிருந்தபோது யான் அறிந்திலேன். 1226

இந்தக் காம நோய், காலையில் அரும்பு விட்டு, பகல் முழுவதும் பெரிய மொட்டாய் இருந்து, மாலை நேரத்தில் மலர்கிறது. 1227

கொல்லும் கொலைக் கருவி, நெருப்புப் போன்ற இம் மாலை நேரத்திற்குத் தூதாக வந்து, ஆயனது புல்லாங்குழல் உருவத்தில் இருக்கும் போலும்! 1228

மதி மயங்கும்படி மாலை நேரம் வரும்போது, (என் துன்ப நிலையைக் கண்டு) இந்த ஊரே துன்புற்று வருந்தும். 1229

இவ்வளவு காலம் சாகாதிருந்த என் உயிர் பொருளே குறியாகப் பிரிந்து சென்ற காதலரை எண்ணி இந்த மருண்ட மாலை நேரத்தில் சாகிறது. 1230

## 124. உறுப்புநலன் அழிதல்

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண். 1231

நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண். 1232

தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள். 1233

பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். 1234

கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். 1235

தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து. 1236

பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோள் பூசல் உரைத்து. 1237

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். 1238

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். 1239

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு. 1240

# 124. உறுப்புக்களின் அழகு கெடுதல்

இழி நிலையை நமக்கு விட்டுத் தொலைவில் பிரிந்து போன காதலரை எண்ணி அழுததால் கண்கள் பொலிவு இழந்து மணம் மிக்க மலர்களுக்குத் தோற்று நாணம் கொண்டன. 1231

பசப்புற்று நீர் சொரியும் கண்கள், விரும்பிய காதலர் அருள் புரியாது பிரிந்தமையைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லுவனபோல் உள்ளன. 1232

காதலருடன் கூடியிருந்த நாளில் பூரித்திருந்த தோள்கள், இப்போது அவர் பிரிந்தமையை மிகவும் அறிவிப்பன போல் மெலிந்து விட்டன. 1233

துணைவர் நீங்கியதால் பழைய அழகும் கெட்டு வதங்கிய தோள்கள், பருமை குறைந்து, பசுமையான கடகமும் சோர்ந்து விழும்படி மெலிந்தன. 1234

கடகம் கழன்றதுடன் பழைய பொலிவும் அற்ற தோள்கள், கொடிய காதலரின் பிரிவுக் கொடுமையைப் பிறர்க்கு எடுத்துரைக்கும். 1235

தோள்கள் கடகம் கழலும்படி மெலிந்ததால், காதலர் கொடியவர் என அத்தோள்கள் அறிவிப்பதற்கு மனம் புண்பட்டு வருந்துகிறேன். 1236

நெஞ்சே! வாடிய என் தோட்களின் ஆர்ப்பாட்டத்தைக் கொடிய காதலர்க்கு எடுத்துரைத்து அதனால் நீ பெருமை பெற மாட்டாயா? 1237

(காதலன் கூறுவதாக) அவளைத் தழுவிய கைகளை யான் சிறிது நெகிழ்க்க, பசுமையான வளையலணிந்த அப்பேதைப் பெண்ணின் நெற்றி பசப்புற்றது. 1238

தழுவியபோது சிறிது இடைவெளி ஏற்படக் குளிர்ந்த காற்று புகவும் பொறுக்காத அப் பேதையின் பெரிய குளிர்ந்த கண்கள் பசப்புற்றன. 1239

அவளது ஒளியுடைய நெற்றி பசப்புற்றதைப் பார்த்து அவள் கண்ணின் பசப்பு துன்புற்றது. 1240

## 125. நெஞ்சொடு கிளத்தல்

நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து. 1241

காதல் அவரிலா ராகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு. 1242

இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல். 1243

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று. 1244

செற்றா ரெனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர். 1245

கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு. 1246

காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேன்இவ் விரண்டு. 1247

பரிந்தவர் நல்காரென்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு. 1248

உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறிஎன் நெஞ்சு. 1249

துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
இன்னும் இழத்தும் கவின். 1250

## 125. நெஞ்சத்தோடு வருந்திப் பேசுதல்

நெஞ்சமே! இத் துன்பப் பிணியை நீக்கவல்ல ஒரு மருந்தை, ஏதாவது ஒரு வகையில் நினைந்து ஆராய்ந்து சொல்ல மாட்டாயா? 1241

என் நெஞ்சே, நீ வாழ்க! அவர் நம் மேல் காதல் இல்லாதவரா யிருக்கவும் அவர்க்காக நீ வருந்துவது அறியாமையே! 1242

நெஞ்சே! நீ இங்கே இருந்து கொண்டு அவரை எண்ணி வருந்துவது ஏன்? இத் துன்பப் பிணியை நமக்கு உண்டாக்கிய அவரிடம், நம் மேல் பரிவு கொண்ட எண்ணம் இல்லையே! 1243

நெஞ்சே, நீ அவரிடம் செல்லும்போது இந்தக் கண்களையும் கொண்டு செல்! அவரைக் காண வேண்டுமென்று இவை என்னைப் பிடுங்கித் தின்கின்றன. 1244

நெஞ்சே! நாம் தம்மை அணுகினும் நம்மை அணுகாத காதலர் நம்மை வெறுத்து முனிந்து விட்டார் என அவரைக் கைவிடலாமா? 1245

என் நெஞ்சே! புணர்ந்து ஊடல் நீக்கவல்ல காதலரைக் கண்டால், அவர்மேல் பிணங்கி ஊடல் நீங்க மாட்டாய்; பொய்க் காய்ச்சல் காய்கிறாய்! 1246

நல்ல நெஞ்சே! ஒன்று காமத்தை விடு! அல்லது நாணத்தை விடு! இவ்விரண்டையும் ஒருசேர என்னாலே தாங்கவே முடியாது. 1247

என் நெஞ்சே! பரிவு கொண்டு அவர் அருளவில்லையே என்று ஏக்கமுற்று, விட்டுப் பிரிந்த அவர் பின்னே செல்கிறாய்! நீ ஒரு பேதை! 1248

என் நெஞ்சே! நம் காதலர் நம் உள்ளுக்குள்ளேயே இருக்கவும், நீ வேறு யாரை எண்ணித் தேடிச் செல்கிறாயோ, தெரியவில்லையே! 1249

நம்மைப் பொருந்தாது பிரிந்தவரை உள்ளுக்குள்ளே வைத்துக் கொண்டே மேலும் மேலும் அழகு இழந்து வருகிறோம். 1250

## 126. நிறையழிதல்

காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. 1251

காம மெனஒன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில். 1252

மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும். 1253

நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறையிறந்து மன்று படும். 1254

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன்று அன்று. 1255

செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றென்னை உற்ற துயர். 1256

நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின். 1257

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை. 1258

புலப்ப லெனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்த லுறுவது கண்டு. 1259

நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல். 1260

# 126. நெஞ்சடக்கத்தின் உறுதி தளர்தல்

நாணம் என்னும் தாழ்ப்பாள் போட்ட நிறை என்னும் கதவைக் காமம் என்னும் கோடரி உடைக்கிறது. (நிறை - நெஞ்சை அடக்கி நிறுத்துதல்) 1251

காமம் என்னும் ஒரு பாவி கண் இல்லாதது; என் நெஞ்சை நள்ளிரவிலும் அது வேலை வாங்குகிறது. 1252

யான் காமத்தை மறைக்கவே முயல்கிறேன்; ஆனாலும் அது, என் குறிப்பின்படி நடவாமல் தும்மல் போல் திடீரெனத் தானே வெளியாகி விடுகிறது. 1253

யான் நிறையுடையவள் என்றே எண்ணுகிறேன். ஆனால் என் காமமோ மறைவான அறையைக் கடந்து அம்பலத்திற்கு வந்து விடுகிறது. 1254

தம்மை வெறுத்து முனிந்தவரின் பின்னே செல்லாத வீறாப்புத் தன்மை, காம நோய் கொண்டவர்கள் அறிந்து கடைப்பிடிக்கக் கூடிய ஒன்றன்று. 1255

வெறுத்தவர்பின் செல்ல வேண்டி யிருப்பதால், என்னை அடைந்த இக் காமநோய் இரங்கத்தக்கதேயன்றி வேறு எத்தகையது! 1256

விரும்பிய காதலர் நாம் விரும்புகின்றவற்றைச் செய்வாராயின், காமத்தால் நாணுதல் என்னும் ஒரு நிலையை நாம் அறிய வேண்டி வராது. 1257

பல மாயங்கள் செய்யும் கள்வனாகிய காதலரின் பணிவான பொய்ம்மொழி, நம் பெண்மையாகிய அரணை அழிக்கும் ஒரு படைக்கலம் அல்லவா? 1258

காதலருடன் ஊடல் கொள்வேன் என்று சென்றேன்; ஆனால், என் நெஞ்சு அவருடன் கலந்து நின்றதைக் கண்டு யானும் அவரைத் தழுவிக் கொண்டேன். 1259

கொழுப்பை நெருப்பில் இட்டாற்போல் உருகுகிற கோழை உள்ளம் உடையவர்க்கு, 'காதலருடன் ஊடல் கொண்டு அவ்வூடலில் நிலைத்து நிற்போம்' என்னும் உறுதி இருக்க முடியுமா? 1260

## 127. அவர்வயின் விதும்பல்

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். 1261

இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து. 1262

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன். 1263

கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறும்என் நெஞ்சு. 1264

காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்கும்என் மென்றோள் பசப்பு. 1265

வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட. 1266

புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்அன்ன கேளிர் வரின். 1267

வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. 1268

ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு. 1269

பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறின்என்னாம்
உள்ளம் உடைந்துக்கக் கால். 1270

## 127. பிரிந்தவரை அடைய விரைதல்

என் கண்களும் அவரை எதிர்பார்த்து ஒளியிழந்து பஞ்சு பூத்தன; என் கை விரல்களோ, அவர் சென்ற நாளைக் கோடிட்டு எண்ணி எண்ணித் தேய்ந்து விட்டன. 1261

விளங்கும் அணி பூண்ட தோழியே! இப்போது காதலர் மறந்தால், என் தோள் மேல் அணிந்துள்ள கடகம் அழகு கெட்டு மெலிவால் கழலும். 1262

வெற்றியை விரும்பி மனவுறுதியே துணையாக வெளிநாடு போந்த காதலரின் வருகையை எதிர்பார்த்து இன்னும் உயிரோடு உள்ளேன். 1263

என் நெஞ்சு, கூடிய காமத்தினின்றும் பிரிந்த காதலரின் வருகையைத் தொலைவில் எதிர்பார்த்து மரக் கிளையின் மேல் ஏறிப் பார்க்கும். 1264

யான் காதலரைக் கண்ணாரக் காண்பேனாக! கண்டு விட்டால் என் மெல்லிய தோளில் உள்ள பசலை நிறம் தானே மறையும். 1265

காதலர் என்றாவது ஒருநாள் வருவாராக! வந்தால் என் துன்பப் பிணியெல்லாம் கெடும்படி அவரது அழகை நுகர்வேன். 1266

என் கண்ணான காதலர் வந்தால், யான் அவருடன் ஊடுவேனோ? அல்லது அவரைக் கட்டியணைப்பேனோ? மேலும் அவரைப் புணர்வேனோ? 1267

(தலைவன் கூறுவதாக) வேந்தன் வினையில் முனைந்து வென்று நமக்கு விடை தருவானாக! நாம் வீடு சென்று மனைவியுடன் கூடி இன்று மாலை விருந்துண்ணலாம். 1268

தொலைவில் பிரிந்துசென்ற காதலர் வரும் நாளைக்குறிக் கொண்டு ஏங்கும் காதலியர்க்கு, ஒரு நாள் ஏழு நாள் போல் நீண்டு கொண்டே போகும். 1269

காதலி உள்ளம் உடைந்து அழிந்து விட்டபின், நம்மைப் பெற முயன்றால் என்ன? பெற்று விட்டால்தான் என்ன? பெற்றுக் கூடினால்தான் என்ன? 1270

## 128. குறிப்பறிவுறுத்தல்

கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்க லுறுவதொன்று உண்டு. 1271

கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது. 1272

மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன்று உண்டு. 1273

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன்று உண்டு. 1274

செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கு மருந்தொன்று உடைத்து. 1275

பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வது உடைத்து. 1276

தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை. 1277

நெறுநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து. 1278

தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண்டு அவள்செய் தது. 1279

பெண்ணினால் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு. 1280

## 128. குறிப்பால் அறியச் செய்தல்

தலைவியே! நீ மறைத்தாலும் உன் கையைக் கடந்து நில்லாமல், உன் கண்கள் சொல்லி அறிவுறுத்தும் குறிப்பு ஒன்று தெரிகிறது. 1271

கண் நிறைந்த அழகும் மூங்கில் போன்ற மெல்லிய தோளும் உடைய என் காதலிக்கு, பெண்ணுக்கு உரிய நிறை பண்பு மிக்குள்ளது. 1272

கோக்கப்பட்ட மணிக்குள்ளே தெரியும் நூலைப் போல, இப்பெண்ணின் அழகுக்குள் அடங்கியிருக்கும் குறிப்பு ஒன்று உள்ளது. 1273

அரும்பு மொட்டுக்குள் அடங்கியிருக்கும் நறுமணத்தைப் போல், இப்பெண்ணின் புன்னகை மொட்டுக்குள் அடங்கியிருக்கும் குறிப்பு ஒன்று உண்டு. 1274

பொருத்தமான வளையலணிந்த காதலி செய்துபோன குறிப்பு, மிக்க காம நோயைத் தீர்க்கும் ஒரு வகை மருந்தை உடையது. 1275

காதலர் பெரிதும் ஆறுதல் தந்து விருப்புடன் புணர்வது, விரைவில் அரிய பிரிவை ஏற்படுத்தி அன்பின்றிப் போவார் என்பதை அறிவிக்கும் குறிப்பே. 1276

குளிர்ந்த அழகிய துறைக்குரிய காதலர் பிரிந்ததை, நமக்கும் முன்னமே நம் கை வளையல்கள் உணர்ந்து கழலத் தொடங்கி விட்டன. 1277

எம் காதலர் நேற்றுத்தான் பிரிந்து சென்றார்; யாமோ ஏழு நாளைய பசலை நிறத்தை இன்று ஒரு நாளிலேயே அடைந்துள்ளோம். 1278

தன் கழலும் வளையல்களையும் நோக்கி, மெலிந்த தோள்களையும் நோக்கி, பின் கால் அடிகளையும் நோக்கி அவள் செய்யும் குறிப்பு, தானும் உடன் வருவதாக அறிவிக்கும் அதுவே. 1279

அவள் தன் கண்ணாலேயே காம நோயைத் தெரிவித்து என்னிடம் இரப்பது, பெண்மைக்கு மேலும் சிறந்த பெண்மை உடையது என்பர். 1280

## 129. புணர்ச்சி விதும்பல்

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு. 1281

தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின். 1282

பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணாது அமையல கண். 1283

ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு. 1284

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து. 1285

காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை. 1286

உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தேன் புலந்து. 1287

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. 1288

மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார். 1289

கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று. 1290

## 129. புணர்ச்சிக்கு விரைதல்

நினைத்த அளவிலே களிப்புறுதலும், கண்ட அளவிலே மகிழ்ச்சியடைதலும் கள்ளுக்கு இல்லை; காமத்திற்குத்தான் உண்டு. 1281

பனையளவு பெரிதாகவும் காமம் மிகுமாயின், காதலரோடு தினையளவும் ஊடல் கொள்ளாதிருக்க வேண்டும். 1282

காதலர் நம்மை விரும்பாமல் அவர் விரும்பியவாறே நடந்து கொண்டாலும், அவரைக் காணாமல் கண்கள் அமைதி பெறா. 1283

தோழியே! காதலருடன் ஊடல் கொள்வதற்காக யான் சென்றேன்; ஆனால், என் நெஞ்சு அவ்வூடலை மறந்து கூடலில் முனைந்து விட்டது. 1284

கண்ணுக்கு மை தீட்டும்போது தீட்டுங் கோலைக் கண் காணாதது போல, யான் கணவரை நேரில் காணும் போது அவரது பழியைக் காண்பேனிலேன். 1285

காதலரை நேரில் கண்டால் அவர் தவறுகளை யான் காணேன்; நேரில் காணாதபோதோ, அவருடைய தவறு அல்லாத நற்பண்பைக் காணேன். 1286

இழுத்துச் சென்று விடும் என்று அறிந்தும், வெள்ளத்தில் பாய்பவரைப் போல, ஊடல் நிலைக்காமல் பொய்த்து விடும் என அறிந்தும் ஊடுவது ஏன்? 1287

காதல் திருடா! இழிந்த துன்பங்களை விளைத்தாலும் கட்குடியர்க்குக் கள் விருப்பளிப்பது போல், எனக்கு உன் மார்பு விருப்பளிக்கிறது. 1288

காமம் மென்மையான மலரை விட மென்மையானது; அதன் மென்மைத் தன்மையை அறிந்து நடப்பவர் உலகில் சிலரே. 1289

(தலைவன் கூற்று) என் காதலி புணர்வதற்கு என்னை விட விரைவு கொண்டிருந்தும், வெளிக்கு மட்டும் கண்ணால் ஊடியவள் போல் காட்டி, பின் செய்வதறியாது கலங்கினாள். 1290

## 130. நெஞ்சொடு புலத்தல்

அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது. 1291

உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனக் சேறிஎன் நெஞ்சு. 1292

கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல். 1293

இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று. 1294

பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத் தென் நெஞ்சு. 1295

தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு. 1296

நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு. 1297

எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. 1298

துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி. 1299

தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி. 1300

# 130. நெஞ்சோடு பிணங்கி வருந்துதல்

என் நெஞ்சே! அவரது நெஞ்சு எம்மிடம் வாராமல் அவருக்கே ஆன பொருளாக இருப்பதை யறிந்தும், நீ மட்டும் எமக்கு ஆனதாக இல்லாமல் அவரிடம் செல்வது ஏன்? 1291

என் நெஞ்சமே! நம்மை அணுகாத காதலரைக் கண்டவுடனே, நம்மை வெறுக்க மாட்டார் என நம்பி அவரை அடைகின்றாயே, முறையா? 1292

நெஞ்சே! என்னை விட்டு, உன் விருப்பப்படி நீ அவர்பின் செல்வது 'கெட்டழிந்தவர்க்கு நண்பர்கள் இல்லை' என்னும் முதுமொழிப்படியா? 1293

நெஞ்சே! காதலருடன் ஊடலுற்று அவ்வூடலிலுள்ள சுவை அறியாய் நீ! மற்றபடி இனி அதுபோன்ற எண்ணம் பற்றி உன்னோடு யார் கலந்து பேசுவர்? 1294

என் நெஞ்சம், அவரைப் பெற முடியாதோ என அஞ்சுகிறது; பெற்று விட்டால் பிரிவாரோ என அஞ்சுகிறது; இங்ஙனம் நீங்காத் துயருடையது. 1295

தனியே அமர்ந்து அவரைப் பற்றி நினைத்தால், அவரிடம் 'வா வா' என்று என் நெஞ்சு என்னை அரித்தெடுத்துத் தின்னும்படியா யிருக்கிறது. 1296

அவரை மறக்க முடியாத சிறப்பற்ற மடத்தனமுள்ள என் நெஞ்சின் வலையில் அகப்பட்டு, பெண்மைக்குரிய நாணத்தையும் மறந்து விட்டேன். 1297

விடாமல் உயிரை விரும்பும் என் நெஞ்சம், அவரை இகழ்ந்தால் நமக்கே இழிவு என்றெண்ணி அவரது பெருமையைப் பற்றியே நினைக்கிறது. 1298

ஒருவர்க்குத் தம் நெஞ்சே துணையாயில்லாத போது, துன்பக் காலத்தில் வேறு யார் துணை செய்ய முன்வருவர்? 1299

ஒருவர்க்குத் தம்முடைய நெஞ்சே உறவாய் இல்லாதபோது, அயலார் உறவாகத் தஞ்சம் அடைவதற்கு உரியவர் ஆகார். 1300

# 131. புலவி

புல்லா திராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது. 1301

உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். 1302

அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். 1303

ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று. 1304

நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூஅன்ன கண்ணா ரகத்து. 1305

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. 1306

ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று. 1307

நோதல் எவன்மற்று நொந்தாரென்று அஃதறியும்
காதலர் இல்லா வழி. 1308

நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. 1309

ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்
கூடுவேம் என்பது அவா. 1310

## 131. புலத்தல் (பொய்யான சிறுபிணக்கு)

நெஞ்சே! அவரைப் புணராமல் இருந்து ஊடல் கொள்வாயாக! அதனால் அவர் அடையும் துன்பப் பிணியைச் சிறிது நேரம் கண்டு சுவைக்கலாம். 1301

உணவுக்கு உப்புப் போல் ஊடல் அளவாய் அமைய வேண்டும்; ஊடலை நீள விட்டால் அந்த உப்பு சிறிது மிகுந்து விட்டதுபோல் பயனற்று விடும். 1302

தம்மேல் ஊடல் கொண்டவரை ஆற்றித் தழுவாது விடுதல், துன்புற்றிருப்பவர்க்கு மேலும் துன்பம் செய்தல் போன்றதாம். 1303

ஊடியவரைத் தணிவு செய்யாது விடுதல், முன்பே வாடிய ஒரு கொடியை மேலும் அடி அரிந்து விட்டாற் போன்றதாம். 1304

பூப்போலும் கண்ணுடைய தலைவியாரின் ஊடலைப் பெறுவது, நல்லியல்பு உடைய ஆடவர்க்கு ஒருவகை அழகாகும். 1305

நீட்டித்த ஊடலும், பின் தணியும் புலவியும் இல்லையென்றால், அளிந்த பழமும் முற்றாத உவர்ப் பிஞ்சும் போல் காமம் சுவைக்காது. 1306

புணர்ச்சி நீட்டித்து இருக்காது போலும் என்ற அச்சத்தால், ஊடலை நீட்டிப்பதிலும் ஒருவகைத் துன்பம் உள்ளது.1307

நம்மால் இவர்கள் வருந்துகிறார்கள் என்று அவ் வருத்தம் அறிந்து நடக்கும் காதலரை நாம் பெற்றில்லாதபோது நாம் மேலும் வருந்துவது ஏன்? 1308

தண்ணீரும் நிழற் பாங்கிலே உள்ளதானால்தான் குளிர்ந்து இனிக்கும்; அவ்வாறே, ஊடலும் நம்மை விரும்புவரிடத்திலேயே இனிக்கும். 1309

ஊடலைத் தணிக்காமல் காயவிடுவாரோடு கூடுவோம் என என் நெஞ்சு முயல்வது ஆசை காரணமாகவே! 1310

## 132. புலவி நுணுக்கம்

பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. 1311

ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக்கு அறிந்து. 1312

கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. 1313

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. 1314

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். 1315

உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். 1316

வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று. 1317

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. 1318

தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று. 1319

நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று. 1320

## 132. நுட்பமாய்ப் புலத்தல்

பெண்ணுருவில் உள்ள பரத்தையர் அனைவரும் தம் கண்ணால் பொதுச் சொத்தாகக் கண்டு சுவைக்கின்றன ராதலால் பரத்தமைப் பட்டுவிட்ட உன் மார்பை யான் தழுவேன். 1311

யாம் கூடியிருந்த போது, நீடுவாழ்க எனத் தம்மை வாழ்த்துவோம் என்பது அறிந்து அவர் பொய்யாகத் தும்மினார். 1312

கிளைப் பூவைக் கொய்து வந்து சூடினாலும், ஒருத்திக்குச் சூட முன் கூட்டிச் செய்து பார்ப்பதற்காகச் சூடினீர் என்று சினக்கிறாள் அவள். 1313

யாரையும் விட உன் மேல் காதல் உடையோம் என்று யாம் கூற, 'வேறு யாரை விட - வேறு யாரை விட' என்று கேட்டு ஊடினாள் அவள். 1314

'இந்தப் பிறப்பில் பிரியேம்' என்று யாம் சொன்ன அளவிலே, அடுத்த பிறப்பில் பிரிவீரோ எனக் கண் நிறைய நீர் சொரிந்தாள் அவள். 1315

'உன்னை நினைத்தேன்' என்று கூறினேன்; மறந்தால் தானே நினைக்க வேண்டும் - ஏன் மறந்தீர் என்று கேட்டு என்னைத் தழுவாமல் ஊடினாள் அவள். 1316

யான் தும்மினேன்; 'நூறு' என அவள் வாழ்த்தினாள்; உடனேயே 'உம்மை எவள் நினைத்ததால் தும்மினீர்' என்று மாறி அழுதாள். 1317

எவள் நினைத்தாள் எனச் சினப்பாள் என யான் தும்மலை அடக்க, 'உம் காதல் மகளிர் உம்மை நினைப்பதை எமக்கு மறைக்கிறீரோ'' என்று அழுதாள். 1318

அவளது ஊடலை யான் ஆற்ற முயலினும், பிற பெண்டிரிடத்தும் இத்தன்மையினராக ஆகிப் பழகியுள்ளீர் என்று என்னைக் காய்கிறாள். 1319

அமைதியாய் அமர்ந்து அவளது அழகை எண்ணி உற்று நோக்கினும் 'அவ்வளவும் எவளை எண்ணி நீர் என்னை ஒத்திட்டுப் பார்க்கிறீர்' என்று காய்கிறாள். 1320

## 133. ஊடலுவகை

இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு. 1321

ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். 1322

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. 1323

புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை. 1324

தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலி னாங்கொன்று உடைத்து. 1325

உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. 1326

ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும். 1327

ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு. 1328

ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா. 1329

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். 1330

## 133. ஊடலில் உள்ள இன்பம்

அவர்மேல் ஒரு தவறும் இல்லையாயினும் நாம் ஊடல் கொள்ளுதல் அவர் நம்மேல் மிக்க அருள் கொள்ளுமாறு செய்ய வல்லது. 1321

ஊடல் கொள்ளும்போது ஏற்படும் சிறு பிணக்கு, அவரது நல்லருள் சிறிது வாடும்படி செய்தாலும் பெருமையுற்றுச் சிறக்கும். 1322

நிலத்தோடு நீர் இணைந்தாற் போன்ற பிணைப்புடைய காதலருடன் ஊடுவதை விடச் சிறந்த இன்பம் தேவர் உலகத்தில் உள்ளதோ? 1323

என் நெஞ்சை நெகிழச் செய்யும் அன்புப்படை, அவரைத் தழுவிப் பிரியாமல் இருக்கும்படி ஊடலின் போது தோன்றி விடுகிறது. 1324

தவறான எண்ணம் இல்லாதிருந்தும், தம்மை விரும்பும் தலைவியின் மெல்லிய தோளை ஊடலால் பெறாது அகன்றிருக்கிற அதிலும் ஓர் இன்பம் உண்டு. 1325

இப்போது உண்பதைவிட முன் உண்டது செரித்திருத்தல் உண்ணும் இன்பத்தை மிகுக்கும்; அது போல, புணர்வதை விட அதற்கு முன் ஊடல் கொள்ளுதல் காம இன்பத்தை மிகுக்கும். 1326

ஊடலில் தோல்வியடைந்தவரே பின் வெற்றி யடைந்தவர் ஆவர்; அவ் வெற்றியின் உண்மை பிறகு கூடலில் அறியப்படும். 1327

நெற்றி வேர்க்கும்படிப் புணர்வதில் ஏற்படும் இந்த இன்பத்தை, இன்னும் ஒரு முறை முன்னால் ஊடிப் பின்னால் பெறுவோமோ? 1328

ஒள்ளணி பூண்ட காதலி ஊடிக் கொண்டே யிருப்பாளாக! யாம் அவளைக் கெஞ்சும்படி இந்த இராக் காலம் விடியாது நீண்டு கொண்டே இருப்பதாக! 1329

ஊடுவது காமத்திற்குப் பேரின்பம்; பின் தழுவிப் புணரப் பெற்றால் அப்பேரின்பத்திற்கு மிகப் பேரின்பமாகும். 1330

# இன்பத்துப் பால்

முற்றும்

# குறள் முதற்குறிப்பு அகரவரிசை


| குறள் | பக்கம் |
|---|---|
| அஃகாமை | 46 |
| அஃகி அகன்ற | 46 |
| அகடாரார் | 200 |
| அகப்பட்டி | 228 |
| அகரமுதல | 12 |
| அகலாது அணு | 152 |
| அகழ்வாரைத் | 42 |
| அகனமர்ந்து ஈதலின் | 30 |
| அகனமர்ந்து செய்யாள் | 28 |
| அங்கணத்துள் | 156 |
| அசையியற்கு | 234 |
| அச்ச முடையார்க்கு | 120 |
| அச்சமே கீழ் | 228 |
| அஞ்சாமை ஈகை | 90 |
| அஞ்சாமை அல்லால் | 112 |
| அஞ்சும் அறியான் | 186 |
| அஞ்சுவ தஞ்சாமை | 98 |
| அஞ்சுவ தோரும் | 84 |
| அடக்கம் அமரருள் | 36 |
| அடல்வேண்டும் | 80 |
| அடற்றகையும் | 166 |
| அடுக்கிய கோடி | 204 |
| அடுக்கி வரினும் | 138 |
| அடுத்தது காட்டும் | 154 |
| அணங்குகொல் | 232 |
| அணி அன்றோ | 216 |
| அந்தணர் என்போர் | 16 |
| அந்தணர் நூற்கும் | 122 |
| அமரகத்து ஆற்றறு | 176 |
| அமரகத்து வன் | 218 |
| அமிழ்தினும் | 24 |
| அமைந்தாங் | 108 |
| அரங்கின்றி | 94 |
| அரம்பொருத | 190 |
| அரம்போலும் | 212 |
| அரிதரோ | 246 |
| அரிதாற்றி | 246 |
| அரியஎன்று | 120 |
| அரியகற்று | 114 |
| அரியவற்று | 102 |
| அருங்கேடன் | 52 |
| அருஞ்செவ்வி | 126 |
| அருட்செல்வம் | 60 |
| அருமறை | 182 |
| அருமை உடைத் | 136 |
| அரும்பயன் | 50 |
| அருவினை | 110 |
| அருளல்லது | 62 |
| அருளில்லார்க்கு | 60 |
| அருளென்னும் | 164 |
| அருளொடும் | 164 |
| அருள் கருதி | 68 |
| அருள்சேர்ந்த | 60 |

| குறள் | பக்கம் |
|---|---|
| அருள்வெஃகி | 46 |
| அலந்தாரை | 276 |
| அலரெழ | 284 |
| அலர்நாண | 244 |
| அல்லல் அருளாள் | 60 |
| அல்லவை தேய | 30 |
| அல்லற்பட்டு | 124 |
| அவர் தந்தார் | 252 |
| அவர்நெஞ்சு | 274 |
| அவா இல்லார்க் | 84 |
| அவா என்ப | 84. |
| அவாவினை | 84 |
| அவிசொரிந் | 62 |
| அவையறிந்து | 156 |
| அவையறியார் | 156 |
| அவ்வித்து அழுக் | 44 |
| அவ்விய நெஞ் | 44 |
| அழக்கொண்ட | 144 |
| அழச்சொல்லி | 172 |
| அழல்போலும் | 260 |
| அழிவதூஉம் | 106 |
| அழிவந்த | 174 |
| அழிவி னவை | 170 |
| அழிவின்று அறை | 166 |
| அழுக்கற்று | 44 |
| அழுக்காறு அவா | 18 |
| அழுக்காறு உடை | 44 |
| அழுக்காறு என | 44 |
| அழுக்கா றுடையான் | 38 |
| அழுக்காற்றின் | 44 |

| குறள் | பக்கம் |
|---|---|
| அளவல்ல | 68 |
| அளவளா வில்லா | 118 |
| அளவறிந்தார் | 68 |
| அளவறிந்து | 108 |
| அளவின்கண் | 68 |
| அளித்தஞ்சல் | 246 |
| அறங்கூறான் | 48 |
| அறஞ்சாரா | 222 |
| அறஞ்சொல்லும் | 48 |
| அறத்தாறு இது | 18 |
| அறத்தாற்றின் | 20 |
| அறத்தான் | 18 |
| அறத்திற்கே | 26 |
| அறத்தினூஉங்கு | 18 |
| அறம்பொருள் | 114 |
| அறவாழி | 12 |
| அறவினை யாதெனில் | 76 |
| அறவினையும் | 194 |
| அறனழீஇ | 48 |
| அறனறிந்து ஆன் | 140 |
| அறனறிந்து மூத்த | 102 |
| அறனறிந்து வெஃகா | 46 |
| அறனியலான் | 40 |
| அறனிழுக்கா | 90 |
| அறனெனப் | 20 |
| அறன்ஆக்கம் | 44 |
| அறன்ஈனும் | 164 |
| அறன்கடை | 40 |
| அறன்நோக்கி | 48 |
| அறன்வரையான் | 40 |

| குறள் | பக்கம் |
|---|---|
| அறிகிலார் | 242 |
| அறிகொன்று | 140 |
| அறிதோறு அறியாமை | 236 |
| அறிந்தாற்றிச் | 116 |
| அறிவற்றங் | 98 |
| அறிவிலார் | 182 |
| அறிவிலான் | 182 |
| அறிவினான் | 74 |
| அறிவினுள் எல்லாந் | 52 |
| அறிவின்மை | 182 |
| அறிவுடையார் ஆவ | 98 |
| அறிவுடையார் எல்லா | 98 |
| அறிவுரு ஆராய்ந்த | 150 |
| அறுவாய் | 238 |
| அறைபறை | 228 |
| அற்கா இயல்பிற்றுச் | 78 |
| அற்றது அறிந்து | 112 |
| அற்றம் மறைக்கும் | 208 |
| அற்றம் மறைத்தலோ | 182 |
| அற்றவர் என்பார் | 84 |
| அற்றாரைத் | 114 |
| அற்றார் அழிபசி | 56 |
| அற்றார்க்கொன்று | 214 |
| அற்றால் அளவறிந்து | 202 |
| அற்றேமென்று | 138 |
| அளிச்சப்பூக் | 238 |
| அனிச்சமும் | 238 |
| அன்பகத்தில்லா | 26 |
| அன்பறிவு ஆராய்ந்த | 150 |

| குறள் | பக்கம் |
|---|---|
| அன்பறிவு தேற்றம் | 118 |
| அன்பிலன் | 186 |
| அன்பிலார் | 26 |
| அன்பிற்கும் | 26 |
| அன்பின் வழியது | 26 |
| அன்பின் விழையார் | 196 |
| அன்புஈனும் | 26 |
| அன்புடை-இவ் | 212 |
| அன்புடை-வேந் | 150 |
| அன்புநாண் | 210 |
| அன்பும் அறனும் | 20 |
| அன்புற்று அமர்ந்த | 26 |
| அல்பொரீ இத் | 214 |
| அன்பொடு இயைந்த | 26 |
| அன்றறிவாம் | 18 |
| ஆகாறு அளவிட்டி | 108 |
| அகூழால் | 86 |
| ஆக்கமுங் | 142 |
| ஆக்கம் அதர்வினாய்ச் | 132 |
| ஆக்கம்இழந்தே | 132 |
| ஆக்கம் கருதி | 106 |
| ஆங்கமை | 160 |
| ஆபயன் குன்றும் | 124 |
| ஆயும் அறிவினர் | 196 |
| ஆய்ந்தாய்ந்து | 172 |
| ஆரா இயற்கை | 84 |
| ஆவிற்கு நீரென்று | 226 |
| ஆள்வினையும் | 218 |
| ஆற்றாரும் | 112 |
| ஆற்றின் அளவறிந்துஈக | 108 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| ஆற்றின் அளவறிந்து கற்க | 158 | இதனை இதனால் | 116 |
| ஆற்றின் ஒழுக்கி | 20 | இமைப்பின் கரப்பா | 240 |
| ஆற்றின் நிலைதளர்ந் | 156 | இமையாரின் | 194 |
| ஆற்றின் வருந்தா | 106 | இம்மைப் பிறப்பில் | 278 |
| ஆற்று பவர்க்கும் | 162 | இயல்பாகும் | 80 |
| ஆற்றுவார் - இக | 192 | இயல்பினான் | 20 |
| ஆற்றுவார் - பசி | 56 | இயல்புளிக் | 122 |
| ஆற்றுவார் - பணி | 210 | இயற்றலும் | 90 |
| இகலானாம் | 184 | இரக்க இரத்தக்கார்க் | 224 |
| இகலிற்கு எதிற் | 184 | இரத்தலின் | 56 |
| இகலின் மிக | 184 | இரத்தலும் | 224 |
| இகலெதிர் | 184 | இரந்தும் | 226 |
| இகலென்ப | 184 | இரப்பன் இரப்பாரை | 226 |
| இகலென்னும் | 184 | இரப்பாரை | 224 |
| இகல்காணான் | 184 | இரப்பான் | 224 |
| இகழ்ச்சியின் | 120 | இரவார் இரப் | 220 |
| இகழ்ந்தெள்ளாது | 224 | இரவுள்ள | 226 |
| இடமெல்லாம் | 226 | இரவென்னும் | 226 |
| இடனில் பருவத்தும் | 54 | இருநோக்கு | 234 |
| இடிக்குந் துணை | 102 | இருந்துள்ளி | 264 |
| இடிபுரிந்து எள்ளுஞ் | 134 | இருந்தோம்பி | 28 |
| இடிப்பாரை | 102 | இருபுனலும் | 160 |
| இடுக்கட் படினும் | 144 | இருமனப் பெண்டிரும் | 196 |
| இடுக்கண்கால் | 218 | இருமை வகைதெரிந்து | 16 |
| இடுக்கண் வருங்கால் | 138 | இருவேறு உலகத்து | 86 |
| இடும்பைக்கு இடும் | 138 | இருள்சேர் | 12 |
| இடும்பைக்கே | 218 | இருள்நீங்கி | 82 |
| இடைதெரிந்து | 156 | இலக்கம் | 138 |
| இணரூழ்த்தும் | 142 | இலங்கிழாய் | 268 |
| இணர்எரி தோய் | 72 | இலமென்று அசைஇ | 220 |

| குறள் | பக்கம் |
|---|---|
| இலமென்று வெஃகு | 46 |
| இலர்பல ராகிய | 64 |
| இலனென்னும் | 56 |
| இலன்என்று | 52 |
| இல்லதென் | 22 |
| இல்லாரை | 164 |
| இல்லாளை | 194 |
| இல்லாள் கண் | 194 |
| இல்லை தவறவர்க்கு | 280 |
| இல்வாழ்வான் | 20 |
| இவறலும் | 100 |
| இழத்தொறூஉம் | 200 |
| இழிவறிந்துஉண்பான் | 20 |
| இழுக்கல் | 96 |
| இழுக்காமை | 120 |
| இழைத்தது | 162 |
| இளித்தக்க | 272 |
| இளிவரின் | 206 |
| இளைதாக | 188 |
| இளையர் இன | 152 |
| இறந்தமைந்த | 192 |
| இறந்த வெகுளியின் | 120 |
| இறந்தார் | 72 |
| இறப்பே புரிந்த | 208 |
| இறல் ஈனும் | 46 |
| இறுதி பயப்பினும் | 150 |
| இறைகடியன் | 126 |
| இறைகாக்கும் | 122 |
| இற்பிற - கண் அல்லது | 204 |
| இற்பிற - கண்ணேயும் | 222 |
| இனத்தாற்றி | 126 |
| இனம்போன்று | 178 |
| இனி அன்ன | 274 |
| இனிய உளவாக | 30 |
| இனைத்துணைத் | 28 |
| இனையர் | 170 |
| இன்கண் உடைத்தவர் | 246 |
| இன்சொலால் ஈத் | 90 |
| இன்சொலால் ஈரம் | 30 |
| இன்சொல் இனி | 30 |
| இன்பத்துள் - பய | 184 |
| இன்பத்துள் - விழை | 138 |
| இன்பம் இடையறா | 84 |
| இன்பம் ஒருவற்கு | 224 |
| இன்பம் கடல் | 248 |
| இன்பம் விழை - இ | 138 |
| இன்பம் விழை - வினை | 136 |
| இன்மை என | 222 |
| இன்மை ஒருவற்கு | 210 |
| இன்மை இடும்பை | 226 |
| இன்மையின் - இன்னாதது | 222 |
| இன்மையின் இன்னாது | 124 |
| இன்மையுள் இன்மை | 42 |
| இன்றி யமையாச் | 206 |
| இன்னா எனத்தான் | 74 |
| இன்றும் வருவது | 222 |
| இன்னாசெய் தாரை | 74 |
| இன்னாசெய் தார்க்கும் | 210 |
| இன்னாது இரக்கப் | 56 |
| இன்னாது இனன் | 246 |

| குறள் | பக்கம் |
|---|---|
| இன்னாமை இன்பம் | 138 |
| ஈட்டம் இவறி | 214 |
| ஈதல் இசைபட | 58 |
| ஈத்துவக்கும் | 56 |
| ஈர்ங்கைவிதிரார் | 228 |
| ஈவார்கண் | 224 |
| ஈன்றபொழுதிற் | 24 |
| ஈன்றாள் பசி | 144 |
| ஈன்றாள் முகத்தேயும் | 198 |
| உடம்பாடு இலா | 190 |
| உடம்பொடு | 240 |
| உடுக்கை | 170 |
| உடுப்பதூஉம் | 228 |
| உடைசெல்வம் | 200 |
| உடைத்தம் | 108 |
| உடைமையுள் | 28 |
| உடைய ரெனப்படு | 132 |
| உடையார்முன் | 92 |
| உட்கப்படாஅர் | 198 |
| உட்பகை | 190 |
| உணர்வ துடையார் | 156 |
| உணலினும் | 280 |
| உண்டார்கண் | 232 |
| உண்ணற்க | 198 |
| உண்ணாது | 42 |
| உண்ணாமை உள்ளது | 62 |
| உண்ணாமை வேண்டும் | 62 |
| உதவி வரைத்தன்று | 32 |
| உப்பமைந் | 276 |
| உயர்வகலம் | 162 |
| உயிர் உடம்பின் | 76 |
| உயிர்ப்ப உளரல்லர் | 188 |
| உய்த்தல் | 272 |
| உரமொருவற்கு | 132 |
| உரனென்னும் | 16 |
| உரன்நசைஇ | 268 |
| உருவுகண்டு | 146 |
| உருளாயம் | 200 |
| உரைப்பார் | 58 |
| உலகத்தார் | 182 |
| உலகத்தோடு | 38 |
| உலகம் தழீஇய | 98 |
| உலைவிடத்து | 166 |
| உவக்காண்எம் | 252 |
| உவந்துறைவர் | 240 |
| உவப்பத் தலைக்கூடி | 92 |
| உழந்துழந்து | 250 |
| உழவினார் | 220 |
| உழுதுண்டு | 220 |
| உழுவார் | 220 |
| உழைப்பிரிந்து | 118 |
| உளபோல் | 228 |
| உளரெனினும் | 158 |
| உளரென்னும் | 94 |
| உளவரை தூக்காத | 118 |
| உள்ளக் களித்தலும் | 272 |
| உள்ளத்தார் | 264 |
| உள்ளத்தால் உள் | 68 |
| உள்ளத்தால் பொய் | 70 |
| உள்ளம் இலர் | 132 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளம் உடைமை | 132 | ஊக்கமுடையான் | 110 |
| உள்ளம் போன்று | 248 | ஊடலில் தோற்றவர் | 280 |
| உள்ளற்க | 172 | ஊடலில் தோன்றும் | 280 |
| உள்ளியது எய்தல் | 120 | ஊடலின் உண்டாங் | 276 |
| உள்ளிய் தெல்லாம் | 72 | ஊடல் உணங்க | 276 |
| உள்ளினும் | 256 | ஊடல் உணர்தல் | 236 |
| உள்ளினேன் | 278 | ஊடற்கண் | 272 |
| உள்ளுவ தெல்லாம் | 132 | ஊடப் பெருங்குவங் | 280 |
| உள்ளுவன் - உரை | 252 | ஊடி யவரை | 276 |
| உள்ளுவன் - மறப்பின் | 240 | ஊடி யிருந்தேமாத் | 278 |
| உள்ளொற்றி | 198 | ஊடுக மன்னோ | 280 |
| உறங்குவது | 78 | ஊடுதல் | 280 |
| உறல்முறையான் | 190 | ஊணுடை | 216 |
| உறாஅதவர்க் கண்ட | 274 | ஊதியம் என்பது | 172 |
| உறாஅதவர்போல் | 234 | ஊரவர் கௌவை | 244 |
| உறாஅதோ | 244 | ஊருணி நீர்நிறைந் | 54 |
| உறாஅர்க்கு | 254 | ஊழி- பெயரினும் | 210 |
| உறின்உயிர் | 168 | ஊழிற் பெருவலி | 86 |
| உறின்நட்டு | 176 | ஊழையும் | 136 |
| உறுதோறு உயிர் | 236 | ஊறொரால் | 146 |
| உறுபசியும் | 160 | ஊனைக் குறித்த | 216 |
| உறுபொருளும் | 164 | எச்சமென்று | 214 |
| உறுப்பமைந்து | 166 | எட்பக வன்ன | 190 |
| உறுப்பொத்தல் | 212 | எண்சேர்ந்த | 194 |
| உறுவது சீர் | 176 | எண்ணித் துணிக | 106 |
| உறைசிறியோர் | 148 | எண்ணிய எண்ணி | 146 |
| உற்றநோய் நீக்கி | 102 | எண்ணியார் | 112 |
| உற்றநோய் நோன்றல் | 64 | எண்ணென்ப | 92 |
| உற்றவன் | 202 | எண்பதத்தால் | 212 |
| உற்றான் அளவும் | 202 | எண்பதத்தான் | 222 |

| குறள் | பக்கம் |
|---|---|
| எண்பொருள் | 98 |
| எதிரதாக் காக்கும் | 98 |
| எந்நன்றி | 32 |
| எப்பொருளும் ஓரார் | 152 |
| எப்பொருள் எத் | 82 |
| எப்பொருள் யார் | 98 |
| எய்தற் கரியது | 110 |
| எரியால் சுடப் | 192 |
| எல்லாப் பொருளும் | 162 |
| எல்லார்க்கும் எல்லாம் | 130 |
| எல்லார்க்கும் நன்றாம் | 36 |
| எல்லா விளக்கும் | 70 |
| எல்லைக்கண் | 174 |
| எவ்வதுறைவது | 98 |
| எழுதுங்கால் | 272 |
| எழுபிறப்பும் | 24 |
| எழுமை எழுபிறப்பும் | 32 |
| எளிதென | 40 |
| எள்ளாத எண்ணிச் | 106 |
| எள்ளாமை | 68 |
| எள்ளின் இளிவாம் | 274 |
| எற்றிற் குரியர் | 228 |
| எற்றென்று | 144 |
| எனைத்தானும் எஞ் | 74 |
| எனைத்தானும் நல்லவை | 96 |
| எனைத் திட்பம் | 146 |
| எனைத்துணையர் | 40 |
| எனைத்து நினைப்பினும் | 256 |

| குறள் | பக்கம் |
|---|---|
| எனைத்தும் | 176 |
| எனைத்தொன்று | 256 |
| எனைப்பகை | 52 |
| எனைமாட்சித் | 162 |
| எனைவகையான் | 116 |
| என்பி லதனை | 26 |
| என்றும் ஒருவுதல் | 144 |
| என்னைமுன் | 168 |
| ஏதம்பெருஞ் | 214 |
| ஏதிலார் ஆரத் | 180 |
| ஏதிலார் குற்றம் | 48 |
| ஏதிலார் போலப் | 234 |
| ஏந்திய கொள்கையா | 192 |
| ஏமுற்றவரினும் | 188 |
| ஏரினும் நன்றால் | 220 |
| ஏரின் உழாஅர் | 14 |
| ஏவவும் செய்கலான் | 182 |
| ஐந்தவித்தான் | 16 |
| ஐயத்தின் நீங்கித் | 82 |
| ஐயப்படா அது | 154 |
| ஐயுணர்வு | 82 |
| ஒட்டார்பின் | 216 |
| ஒண்ணுதற் | 232 |
| ஒண்பொருள் | 164 |
| ஒத்த தறிவான் | 54 |
| ஒப்புரவி னால்வரும் | 54 |
| ஒரு தலையான் | 284 |
| ஒருநாள் எழுநாள் | 268 |
| ஒருபொழுதும் | 78 |
| ஒருமைக்கண் | 92 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| ஒருமைச் செய | 180 | ஒன்னார்த் | 64 |
| ஒருமை மகளிரே | 208 | ஓஒதல் வேண்டும் | 144 |
| ஒருமையுள் | 36 | ஓதி உணர்ந்தும் | 180 |
| ஒலித்தக்கால் | 166 | ஓம்பின் அமைந்தார் | 246 |
| ஒல்லும் கருமம் | 176 | ஓர்த் துள்ளம் | 82 |
| ஒல்லும் வகையான் | 18 | ஓர்ந்துகண் | 122 |
| ஒல்லும்வா யெல்லாம் | 148 | ஓஒ இனிதே | 250 |
| ஒல்வ தறிவது | 108 | கடலன்ன | 242 |
| ஒழுக்கத்தின் எய்துவர் | 38 | கடலோடா | 112 |
| ஒழுக்கத்தின் ஒல்கார் | 38 | கடனறிந்து | 150 |
| ஒழுக்கத்து | 16 | கடன்என்ப | 210 |
| ஒழுக்க முடையவர்க்கு | 38 | கடாஅஉரு | 130 |
| ஒழுக்கமும் | 214 | கடாஅக் களிற் | 232 |
| ஒழுக்கம் உடைமை | 38 | கடிதோச்சி | 126 |
| ஒழுக்கம் விழுப்பம் | 38 | கடிந்த கடிந் | 144 |
| ஒழுக்காறாக் | 44 | கடுஞ் சொல்லன் | 126 |
| ஒளியார்முன் | 156 | கடுமொழியும் | 126 |
| ஒளிஒருவற்கு | 208 | கடைக்கொட்கச் | 146 |
| ஒறுத்தாரை | 42 | கணைகொடிது | 66 |
| ஒறுத்தார்க்கு | 42 | கண்களவு | 234 |
| ஒறுத்தாற்றும் | 128 | கண்டது மன்னும் | 244 |
| ஒற்றினான் ஒற்றிப் | 130 | கண்டார் | 232 |
| ஒற்றும் உரைசான்ற | 130 | கண்டுகேட்டு | 236 |
| ஒற்றொற்றித் | 130 | கண்ணிற்கு அணிகலம் | 128 |
| ஒற்றொற் றுண | 130 | கண்ணின் துனி | 272 |
| ஒன்றா உலகத்து | 58 | கண்ணின் பசப்போ | 262 |
| ஒன்றாக நல்லது | 76 | கண்ணுடையர் | 92 |
| ஒன்றாமை | 190 | கண்ணும் கொளச் | 264 |
| ஒன்றானும் | 36 | கண்ணுள்ளார் | 240 |
| ஒன்றெய்தி | 200 | கண்ணுள்ளின் | 240 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| கண்ணொடு கண் | 234 | கல்லார்ப் பிணிக் | 126 |
| கண்ணோட்டத் | 128 | கல்லான் வெகுளும் | 286 |
| கண்ணோட்டம் இல் | 128 | கவறும் கழகமும் | 200 |
| கண்ணோட்டம் என் | 128 | கவ்வையால் | 244 |
| கண்தாம் கலுழ்வ | 250 | கழாஅக்கால் | 180 |
| கண்நிறைந்த | 260 | களவினால் ஆகிய | 68 |
| கண்நின்றுகண் | 48 | களவின்கண் | 68 |
| கதங்காத்துக் | 36 | களவென்னும் | 68 |
| கதுமெனத் தாம் | 250 | களித்தறியேன் | 198 |
| கயலுண்கண் | 258 | களித்தானைக் | 198 |
| கரத்தலும் | 248 | களித்தொறும் | 244 |
| கரப்பவர்க்கு | 226 | கள்வார்க்குத் | 68 |
| கரப்பிடும்பை | 224 | கள்ளுண்ணாப் | 198 |
| கரப்பிலா நெஞ்சின் | 224 | கறுத்து இன்னா | 74 |
| கரப்பிலார் வை | 224 | கற்க கசடறக் | 92 |
| கரப்பினுங் | 270 | கற்றதனா லாய | 12 |
| கரவாது உவந் | 226 | கற்றறிந்தார் | 156 |
| கருமஞ் சிதையாமல் | 128 | கற்றாருள் கற்றார் | 158 |
| கருமணியிற் | 240 | கற்றார்முன் | 158 |
| கருமத்தால் | 216 | கற்றில னாயினும் | 96 |
| கருமம் செய | 218 | கற்றீண்டு | 82 |
| கருவியும் காலமும் | 140 | கற்றுக்கண் | 150 |
| கலங்காது கண்ட | 146 | கனவினான் | 258 |
| கலந்துணர்த்தும் | 264 | கனவினும் | 176 |
| கல்லா ஒருவன் | 94 | காக்க பொருளா | 36 |
| கல்லாத மேற் | 182 | காக்கை கரவா | 118 |
| கல்லாதவரின் | 158 | காட்சிக் கெளியன் | 90 |
| கல்லா தவரும் | 94 | காணாச் சினத்தான் | 186 |
| கல்லாதான் ஒட்பம் | 94 | காணாதான் | 182 |
| கல்லாதான் சொற் | 94 | காணிற் குவளை | 238 |

| குறள் | பக்கம் |
|---|---|
| காணுங்கால் | 272 |
| காண்கமன் | 268 |
| காதல காதல் | 100 |
| காதலர் இல்வழி | 260 |
| காதலர் தூதொடு | 258 |
| காதல் அவரில ராக | 264 |
| காதன்மை | 114 |
| காமக் கடல் | 248 |
| காமக் கடும்-உய் | 242 |
| காமக் கடும் -நீந் | 242 |
| காமக் கணிச்சி | 256 |
| காமமும் நாணும் | 248 |
| காமமென | 266 |
| காமம் உழந்து | 242 |
| காமம் விடு | 264 |
| காமம் வெகுளி | 82 |
| காலத்தி னாற் | 32 |
| காலம் கருதி | 110 |
| காலாழ் களரில் | 112 |
| காலை அரும்பிப் | 260 |
| காலைக்குச் | 260 |
| கான முயலெய்த | 268 |
| குடம்பை | 78 |
| குடிசெய்வல் | 218 |
| குடிசெய்வார்க்கு | 218 |
| குடிதழீஇக் | 122 |
| குடிபுறங் காத் | 122 |
| குடிப்பிறந்தார் | 204 |
| குடிப்பிறந்து - குற் | 114 |
| குடிப்பிறந்து- தன் | 172 |
| குடிமடிந்து | 134 |
| குடியாண்மை | 134 |
| குடியென்னும் | 134 |
| குணநலம் | 210 |
| குணமென்னும் | 16 |
| குணம்நாடிக் | 114 |
| குணனிலனாய்க் | 186 |
| குணனும் குடிமை | 172 |
| குலஞ்சுடும் | 216 |
| குழல் இனிது | 24 |
| குறிக்கொண்டு | 234 |
| குறித்தது | 156 |
| குறிப்பறிந்து | 152 |
| குறிப்பிற் - ராவாயின் | 154 |
| குறிப்பிற்-ர்வாரை | 154 |
| குற்றமே காக்க | 100 |
| குற்றம் இலனாய்க் | 218 |
| குன்றன்னார் | 192 |
| குன்றின் அனையாரும் | 206 |
| குன்றேறி | 164 |
| கூடியகாமம் | 268 |
| கூத்தாட்டு | 78 |
| கூழும் குடியும் | 124 |
| கூறாமை நோக்கிக் | 154 |
| கூற்றத்தைக் | 192 |
| கூற்றமோ | 232 |
| கூற்றம் குதித் | 64 |
| கூற்றுடன்று | 166 |
| கெடல் வேண்டின் | 192 |

| குறள் | பக்கம் |
|---|---|
| கெடாஅ வழி | 174 |
| கெடுங்காலைக் | 172 |
| கெடுப்பதூஉங் | 14 |
| கெடுவல்யான் | 34 |
| கெடுவாக | 34 |
| கெட்டார்க்கு | 274 |
| கேடறியாக் | 160 |
| கேடில் விழுச் | 92 |
| கேடும் பெரு | 34 |
| கேட்டார்ப் | 142 |
| கேட்டினும் | 172 |
| கேட்பினும் | 96 |
| கேளிழுக்கம் | 174 |
| கைம்மாறு வேண்டா | 54 |
| கையறி யாமை | 198 |
| கைவேல் களிற்றொடு | 168 |
| கொக்கொக்க | 110 |
| கொடியார் - யின் | 248 |
| கொடியார் - உரை | 262 |
| கொடுத்தலும் | 118 |
| கொடுத்தும் | 186 |
| கொடுப்பது அழுக் | 44 |
| கொடுப்பதூஉம் | 214 |
| கொடும்புருவம் | 232 |
| கொடையளி | 90 |
| கொலைமேற் கொண் | 124 |
| கொலையிற் | 122 |
| கொலை வினைய | 76 |
| கொல்லா நல | 210 |
| கொல்லாமை | 76 |
| கொல்லான் | 62 |
| கொளப்பட்டேம் | 152 |
| கொளற்கரி தாய்க் | 162 |
| கொன்றன்ன | 32 |
| கோட்டுப் பூச் | 278 |
| கோளில் | 12 |
| சமன் செய்து | 34 |
| சலத்தால் | 144 |
| சலம்பற்றிச் | 204 |
| சாதலின் இன்னாத | 56 |
| சாயலும் | 252 |
| சார்புணர்ந்து | 82 |
| சால்பிற்குக் | 210 |
| சான்றவர் | 210 |
| சிதைவிடத்து | 132 |
| சிறப்பறிய | 130 |
| சிறப்புஈனும் செல்வமு | 18 |
| சிறப்புஈனும் செல்வம் | 74 |
| சிறப்பொடு | 14 |
| சிறியார்உணர் | 208 |
| சிறுகாப்பிற் | 162 |
| சிறுபடையான் | 112 |
| சிறுமை நமக் | 262 |
| சிறுமை பல | 200 |
| சிறுமையும் | 166 |
| சிறுமையுள் | 30 |
| சிறைகாக்குங் | 22 |
| சிறைநலனும் | 112 |
| சிற்றினம் | 104 |
| சிற்றின்பம் | 46 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| சினத்தைப் | 72 | செருவந்த | 126 |
| சினமென்னும் | 72 | செல்லா இடத்துச் | 72 |
| சீரிடம் காணின் | 178 | செல்லாமை | 246 |
| சீரினும் சீரல்ல | 206 | செல்லான் | 220 |
| சீருடைச் செல்வர் | 214 | செல்லிடத்துக் | 72 |
| சீர்மை சிறப் | 50 | செல்வத்துள் | 96 |
| சுடச் சுடரும் | 64 | செல்விருந்து | 28 |
| சுவை ஒளி | 16 | செவிகைப்பச் | 90 |
| சுழலும் இசைவேண்டி | 168 | செவிக்குண | 96 |
| சுழன்றும் ஏர்ப் | 220 | செவிச்சொல்லும் | 152 |
| சுற்றத்தால் | 118 | செவியிற்சுவை | 96 |
| சூழாமல் | 218 | செவியுணவிற் | 96 |
| சூழ்ச்சி முடிவு | 148 | செறாஅச் சிறு | 270 |
| சூழ்வார்கண் | 102 | செறிதொடி | 234 |
| செப்பம் உடை | 34 | செறிவறிந்து | 36 |
| செப்பின் | 190 | செறுநரைக் | 110 |
| செயற்கரிய செய் | 16 | செறுவார்க்குச் | 186 |
| செயற்கரிய யாஉள | 170 | செற்றவர் பின் | 266 |
| செயற்கை அறிந் | 140 | செற்றா ரெனக்கை | 264 |
| செயற்பால செய்யா | 100 | செற்றார் பின் | 266 |
| செயற்பால தோரும் | 18 | சென்ற இடத் | 91 |
| செயிரின் தலைப் | 62 | சொலல் வல்லன் | 142 |
| செய்க பொருளைச் | 164 | சொல்லப் பயன் | 228 |
| செய்தக்க | 106 | சொல்லுக சொல்லிற் | 50 |
| செய்தேமஞ் | 176 | சொல்லுக சொல்லைப் | 142 |
| செய்யாமற் செய்த | 32 | சொல்லுதல் | 146 |
| செய்யாமல் செற் | 74 | சொல்வணக்கம் | 178 |
| செய்வானை | 116 | சொற்கோட்டம் | 34 |
| செய்வினை | 148 | ஞாலங் கருதி | 110 |
| செருக்குஞ் | 100 | தகுதி என | 34 |

| குறள் | பக்கம் |
|---|---|
| தக்காங்கு | 126 |
| தக்கா ரினத் | 102 |
| தக்கார் தகவிலர் | 34 |
| தஞ்சம் தமரல்லர் | 274 |
| தணந்தமை | 262 |
| தண்ணந் துறைவன் | 270 |
| தந்தை மகற்கு | 24 |
| தந்நலம் | 196 |
| நந்நெஞ்சத்து | 256 |
| தமராகித் தற் | 118 |
| தம்பொருள் | 24 |
| தம்மில் இருந்து | 236 |
| தம்மிற் பெரியார் | 102 |
| தம்மின் தம் | 24 |
| தலைப்பட்டார் | 80 |
| தலையின் இழிந்த | 206 |
| தவஞ் செய்வார் | 64 |
| தவமறைந்து | 66 |
| தவமும் தவமுடை | 64 |
| தவறில ராயினும் | 280 |
| தள்ளா விளையுளும் | 160 |
| தற்காத்துத் | 22 |
| தனக்குவமை | 12 |
| தனியே இருந்து | 274 |
| தன்குற்றம் நீக்கிப் | 100 |
| தன்துணை இன்றால் | 188 |
| தன்னுயிர்க்கு இன் | 74 |
| தன்னுயிர் தான் | 64 |
| தன்னுயிர் நீப்பினும் | 76 |
| தன்னூன் பெருக் | 62 |
| தன்னெஞ் சறிவது | 70 |
| தன்னை உணர்த் | 278 |
| தன்னைத்தான் காக்கின் | 72 |
| தன்னைத்தான் காதல | 52 |
| தாமின் புறுவது | 92 |
| தாம்வீழ்வார் தம்வீழ | 254 |
| தாம்வீழ்வார் மென் | 236 |
| தாம்வேண்டின் | 244 |
| தார்தாங்கிச் | 166 |
| தாளாண்மை இல் | 136 |
| தாளாண்மை என்னும் | 136 |
| தாளாற்றித் தந்த | 54 |
| தானம் தவம் | 14 |
| திறனல்ல | 42 |
| திறனறிந்து | 142 |
| தினற்பொருட்டால் | 62 |
| தினைத்துணை நன்றி | 32 |
| தினைத்துணையாங் | 100 |
| தினைத்துணையும் | 272 |
| தீப்பால தான் | 52 |
| தீயவை செய்தார் | 52 |
| தீயவை தீய | 52 |
| தீயள வன்றித் | 202 |
| தீயினாற்சுட்ட | 36 |
| தீவினையார் | 52 |
| துஞ்சினார் செத் | 198 |
| துஞ்சுங்கால் | 258 |
| துணைநலம் | 144 |
| துப்பார்க்குத் | 14 |
| துப்பின் எவனாவர் | 248 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| துப்புரவு இல்லார் | 222 | தேரான் பிறனைத் | 114 |
| தும்முச் செறுப்ப | 278 | தேவர் அனையர் | 228 |
| துளியின்மை | 124 | தேறற்க | 116 |
| துறந்தாரின் | 42 | தேறினும் தேறா | 188 |
| துறந்தார்க்குத் | 64 | தொகச் சொல்லித் | 150 |
| துறந்தார்க்கும் | 20 | தொடங்கற்க | 112 |
| துறந்தார் படி | 130 | தொடலைக் குறுந் | 242 |
| துறந்தார் பெருமை | 16 | தொடிநோக்கி | 270 |
| துறப்பார்மன் | 86 | தொடிப்புழுதி | 220 |
| துறைவன் | 246 | தொடியோடு | 262 |
| துனியும் புலவியும் | 276 | தொடிற்சுடின் | 246 |
| துன்பத்திற்கு | 274 | தொட்டனைத் தூறும் | 92 |
| துன்பம் உறவரினும் | 146 | தொல்வரவும் | 222 |
| துன்புறூஉந் | 30 | தொழுதகை யுள்ளும் | 178 |
| துன்னாத் துறந் | 264 | தோன்றின் | 58 |
| துன்னியார் | 48 | நகல்வல்லர் | 212 |
| தூங்காமை | 90 | நகுதற் பொருட் | 176 |
| தூங்குக தூங்கிச் | 148 | நகைஈகை | 204 |
| தூஉய்மை என் | 84 | நகையும் | 72 |
| தூய்மை துணைமை | 150 | நகையுள்ளும் | 212 |
| தெண்ணீர் அடு | 226 | நகைவகைய ராகிய | 176 |
| தெய்வத்தான் | 136 | நசை இயார் | 254 |
| தெய்வந் தொழா | 22 | நச்சப் படாதவன் | 214 |
| தெரிதலும் | 140 | நடுவின்றி | 46 |
| தெரிந்தஇனத் | 106 | நட்டார் குறை | 194 |
| தெரிந்துணரா | 250 | நட்டார்க்கு | 148 |
| தெருளாதான் | 60 | நட்டார்போல் | 178 |
| தெளிவி லதனைத் | 106 | நட்பிற்கு வீற் | 170 |
| தென்புலத்தார் | 20 | நட்பிற் குறுப்புக் | 174 |
| தேரான் தெளிவும் | 114 | நண்பாற்றா ராகி | 212 |

| குறள் | பக்கம் |
|---|---|
| நத்தம்போல் | 58 |
| நயந்தவர்க்கு | 252 |
| நயந்தவர் நல்காமை | 262 |
| நயனில சொல்லினுஞ் | 50 |
| நயனிலன் | 50 |
| நய்னுடையான் | 54 |
| நயனொடு நன்று | 212 |
| நயன் ஈன்று | 30 |
| நயன்சாரா | 50 |
| நலக்குரியார் | 40 |
| நலத்தகை | 276 |
| நலத்தின்கண் | 204 |
| நலன் வேண்டின் | 204 |
| நல்குரவு என்னும் | 222 |
| நல்லவை | 86 |
| நல்லாண்மை | 218 |
| நல்லார்கண் | 94 |
| நல்லாறு எனப் | 76 |
| நல்லாறு எனினும் | 56 |
| நல்லாற்றால் | 60 |
| நல்லினத்தி னூங்குந் | 104 |
| நவில்தொறும் | 170 |
| நற்பொருள் | 222 |
| நனவினால் கண்டதூ | 258 |
| நனவினால் நம் | 258 |
| நனவினால் நல்காக் | 258 |
| நனவினால் நல்காத | 258 |
| நனவினால் நல்காரை | 258 |
| நனவென | 258 |
| நன்மையும் | 116 |
| நன்றறி வாரிற் | 228 |
| நன்றாகும் ஆக்கம் | 76 |
| நன்றாங்கால் | 86 |
| நன்றாற்ற லுள்ளுந் | 106 |
| நன்றிக்கு வித் | 38 |
| நன்றி மறப்பது | 32 |
| நன்றென்ற | 156 |
| நன்றே தரினும் | 34 |
| நன்னீரை வாழி | 238 |
| நாச்செற்று | 78 |
| நாடாது நட்டலிற் | 172 |
| நாடென்ப | 160 |
| நாடொறும் நாடி | 124 |
| நாடொறும் நாடுக | 116 |
| நாணாமை | 180 |
| நாணால் உயிரைத் | 216 |
| நாணும் மறந் | 274 |
| நாணென ஒன்றோ | 266 |
| நாண் அகத் தில்லார் | 216 |
| நாணொடுநல் | 242 |
| நாண் என்னும் | 198 |
| நாண்வேலி | 216 |
| நாநலம் என்னும் | 142 |
| நாம் காதல் | 254 |
| நாளென ஒன்று | 78 |
| நிணந்தீயில் | 266 |
| நிலத்தியல்பால் | 104 |
| நிலத்தில் | 204 |
| நிலவரை நீள் | 58 |
| நிலை அஞ்சி | 76 |
| நிலைமக்கள் | 166 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| நிலையில் திரியாது | 36 | நெருப்பினுள் | 222 |
| நில்லாதவற்றை | 78 | நோக்கினாள் நோக்கி | 234 |
| நிழல் நீரும் | 190 | நோக்கினாள் நோக்கெ | 232 |
| நிறைநீர | 170 | நோதல் எவன் | 276 |
| நிறைநெஞ்சம் | 196 | நோய் எல்லாம் | 74 |
| நிறைமொழி | 16 | நோய் நாடி | 102 |
| நிறையரியர் | 242 | நோவற்க | 188 |
| நிறையுடைமை | 42 | நோனா உடம்பும் | 242 |
| நிறையுடையேன் | 266 | பகச்சொல்லிக் | 48 |
| நினைத்திருந்து | 278 | பகல்கருதிப் | 184 |
| நினைத்தொன்று | 264 | பகல்வெல்லும் | 110 |
| நினைப்பவர் | 256 | பகுத்துண்டு | 76 |
| நீங்கான் வெகுளி | 186 | பகை என்னும் | 188 |
| நீங்கின் தெறூஉம் | 236 | பகைநட்பாக் | 188 |
| நீரும் நிழலது | 276 | பகைநட்பாம் | 178 |
| நீர்இன்று அமை | 14 | பகைபாவம் | 140 |
| நுணங்கிய | 96 | பகைமையும் | 40 |
| நுண்ணிய நூல் | 86 | பகையகத்துச் | 158 |
| நுண்ணியம் | 154 | பகையகத்துப் | 158 |
| நுண்மாண் | 94 | பசக்கமன் | 252 |
| நுனிக்கொம்பர் | 108 | பசந்தாள் | 252 |
| நூலாருள் நூல் | 150 | பசப்பெனப் | 252 |
| நெஞ்சத்தார் | 140 | படலாற்றா | 250 |
| நெஞ்சில் துறவார் | 66 | படியுடையார் | 134 |
| நெடுங்கடலும் | 14 | படுபயன் | 46 |
| நெடுவீர் மறவி | 134 | படைகுடி | 90 |
| நெடும்புனலுள் | 112 | படைகொண்டார் | 62 |
| நெய்யால் | 244 | பணியுமாம் | 208 |
| நெருநல் உள | 78 | பணிவுடையன் | 30 |
| நெருநற்றுச் | 270 | பணைநீங்கிப் | 262 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| பண்என்னாம் | 128 | பழையம் எனக் | 152 |
| பண்டறியேன் | 232 | பற்றற்ற கண்ணும் | 118 |
| பண்பிலான் | 212 | பற்றற்ற கண்ணே | 80 |
| பண்புடையார்ப் | 212 | பற்றற்றேம் | 66 |
| பதிமருண்டு | 260 | பற்றி விடாஅ | 80 |
| பயனில பல்லார் | 50 | பற்றுக பற் | 80 |
| பயனில் சொல் | 50 | பற்றுள்ளம் | 100 |
| பயன் தூக்கார் | 32 | பனிஅரும்பிப் | 260 |
| பயன் தூக்கிப் | 196 | பன்மாயக் கள்வன் | 266 |
| பயன்மரம் | 54 | பாடு பெறுதியோ | 262 |
| பரிந்தவர் நல்கா | 264 | பாத்தூண் | 56 |
| பரிந்தோம்பிக் | 38 | பாலொடு | 240 |
| பரிந்தோம்பிப் | 28 | பிணிக்கு மருந்து | 236 |
| பரியது கூர்ங் | 132 | பிணியின்மை | 160 |
| பரியினும் | 86 | பிணையேர் | 232 |
| பருகுவார் | 176 | பிரித்தலும் | 240 |
| பருவத்தோடு | 110 | பிரிவுரைக்கும் | 246 |
| பருவரலும் | 254 | பிழைத்துணர்ந்தும் | 96 |
| பலகுடை நீழலும் | 220 | பிறப்பென்னும் | 82 |
| பலசொல்லக் | 142 | பிறப்பொக்கும் | 208 |
| பலநல்ல கற்றக் | 178 | பிறர்க்குஇன்னா | 74 |
| பல்குழுவும் | 160 | பிறர்நாணத் | 216 |
| பல்லவை கற்றும் | 158 | பிறர்பழியும் | 216 |
| பல்லார் பகை | 102 | பிறவிப் | 12 |
| பல்லார் முனியப் | 50 | பிறன்பழி | 8 |
| பழகிய செல்வ | 200 | பிறன் பொருளாள் | 40 |
| பழகிய நட்பெவன் | 174 | பிறன்மனை | 40 |
| பழிமலைந்து | 144 | பீலிபெய் | 108 |
| பழியஞ்சிப் | 20 | புகழ்இன்றால் | 206 |
| பழுதெண்ணும் | 140 | புகழ்ந்தவை | 120 |
| பழைமை எனப் | 174 | புகழ்பட வாழா | 58 |

| குறள் | பக்கம் |
|---|---|
| புகழ்புரிந்த | 22 |
| புக்கில் | 78 |
| புணர்ச்சி பழகுதல் | 170 |
| புத்தே ளுலகத் | 54 |
| புரந்தார்கண் | 168 |
| புலத்தலின் | 280 |
| புலப்ப லெனச் | 266 |
| புலப்பேன்கொல் | 268 |
| புல்லவையுள் | 156 |
| புல்லா திராஅப் | 276 |
| புல்லிக் கிடந்தேன் | 252 |
| புல்லி விடாஅப் | 280 |
| புறங்குன்றி | 66 |
| பிறங்கூறிப் | 48 |
| புறத்துறுப்பு | 26 |
| புறந்தூய்மை | 70 |
| புன்கண்ணை | 260 |
| பெண்ணியலார் | 278 |
| பெண்ணிற் | 22 |
| பெண்ணினால் | 270 |
| பெண்ணேவல் | 194 |
| பெயக்கண்டும் | 128 |
| பெயலாற்றா | 250 |
| பெரிதாற்றிப் | 270 |
| பெரிதினிது | 180 |
| பெரியாரைப் | 192 |
| பெருக்கத்து | 206 |
| பெருங்கொடையான் | 118 |
| பெருமை உடை | 208 |
| பெருமைக்கும் | 114 |

| குறள் | பக்கம் |
|---|---|
| பெருமை பெரு | 208 |
| பெரும் பொருளால் | 160 |
| பெறாஅமை | 274 |
| பெறின் என்னாம் | 268 |
| பெறுமவற்றுள் | 24 |
| பெற்றான் பெறின் | 22 |
| பேணாது பெட்டார் | 250 |
| பேணாது பெட்பவே | 272 |
| பேணாது பெண் | 194 |
| பேதை பெருங் | 176 |
| பேதைப் படுக்கும் | 86 |
| பேதைமையு | 180 |
| பேதைமை என்ப | 180 |
| பேதைமை ஒன்றோ | 174 |
| பேராண்மை | 168 |
| பொச்சாப்பார்க்கு | 120 |
| பொச்சாப்புக் | 120 |
| பொதுநலத்தார் | 196 |
| பொதுநோக்கான் | 118 |
| பொய்படும் | 180 |
| பொய்ம்மையும் | 70 |
| பொய்யாமை அன்ன | 70 |
| பொய்யாமை பொய் | 70 |
| பொருள் தீர்ந்த | 50 |
| பொருட்பெண்டிர் | 196 |
| பொருட்பொருளாளர் | 196 |
| பொருளல் லவரைப் | 164 |
| பொருளல்ல வற்றைப் | 82 |
| பொருளற்றார் | 60 |
| பொருளாட்சி | 62 |
| பொருளானாம் | 214 |
| பொருளென்னும் | 164 |

| குறள் | பக்கம் |
|---|---|
| பொருள்கருவி | 148 |
| பொருள்கெடுத்துப் | 200 |
| பொருள்நீங்கிப் | 60 |
| பொருள்மாலை | 260 |
| பொள்ளென | 110 |
| பொறியின்மை | 136 |
| பொறிவாயில் | 12 |
| பொறுத்தல் | 42 |
| பொறையொருங்கு | 160 |
| போற்றின் | 152 |
| மகன் தந்தைக்கு | 24 |
| மக்களே போல்வர் | 228 |
| மக்கள்மெய் | 24 |
| மங்கலம் என்ப | 22 |
| மடலூர் தல் | 242 |
| மடிமடிக் | 134 |
| மடிமை குடிமைக் | 134 |
| மடியிலா | 134 |
| மடியுளாள் | 136 |
| மடியை மடியா | 134 |
| மடுத்தவா | 138 |
| மணிநீரும் | 162 |
| மணியில் திகழ்தரு | 270 |
| மண்ணோ டியைந்த | 128 |
| மதிநுட்பம் | 140 |
| மதியும் மடந்தை | 238 |
| மயிர்நீப்பின் | 206 |
| மருந்தாகித் | 54 |
| மருந்தென | 202 |
| மருந்தோமற்று | 206 |
| மருவுக மாசற்றார் | 172 |
| மலரன்ன - அரு | 244 |
| மலரன்ன - முக | 238 |
| மலரினும் | 272 |

| குறள் | பக்கம் |
|---|---|
| மலர்காணின் | 238 |
| மலர்மிசை | 12 |
| மழித்தலும் நீட் | 66 |
| மறத்தல் வெகு | 72 |
| மறந்தும் பிறன் | 52 |
| மறப்பினும் | 38 |
| மறப்பின் | 256 |
| மறமானம் | 166 |
| மறவற்க | 32 |
| மறைந்தவை | 130 |
| மறைபெறல் | 250 |
| மறைப்பேன்மற் | 266 |
| மறைப்பேன்மன் | 248 |
| மற்றியான் | 256 |
| மற்றும் தொடர்ப் | 80 |
| மனத்தது மாசாக | 66 |
| மனத்தானாம் | 104 |
| மனத்தின் அமையா | 178 |
| மனத்துக்கண் | 18 |
| மனத் துளது | 104 |
| மனத்தொடு | 70 |
| மனநலத்தின் | 104 |
| மனநலம் நன்கு | 104 |
| மனநலம் மன் | 104 |
| மனந்தூயார்க் | 104 |
| மனந்தூய்மை | 104 |
| மனம்மாணா | 190 |
| மனைத்தக்க | 22 |
| மனைமாட்சி | 22 |
| மனையாளை | 194 |
| மனைவிழைவார் | 194 |
| மன்னர்க்கு | 124 |
| மன்னர் விழைப | 152 |
| மன்னுயி ரெல்லாம் | 248 |


| குறள் | பக்கம் |
|---|---|
| மன்னுயிர் ஓம்பி | 60 |
| மாதர் முகம்போல் | 238 |
| மாலைநோய் | 260 |
| மாலையோ | 260 |
| மாறுபாடு இல் | 202 |
| மிகச் செய்து | 178 |
| மிகன்மேவல் | 184 |
| மிகினும் குறை | 202 |
| மிகுதியான் | 42 |
| முகத்தான் அமர்ந் | 30 |
| முகத்தின் இனிய | 178 |
| முகத்தின் முதுக்கு | 154 |
| முகநக நட்பது | 170 |
| முகம்நோக்கி | 154 |
| முகைமொக்குள் | 270 |
| முடிவும் இடை | 148 |
| முதலிலார்க்கு | 102 |
| முயக்கிடைத் | 262 |
| முயங்கிய | 262 |
| முயற்சி திருவினை | 136 |
| முரண்சேர்ந்த | 112 |
| முறிமேனி | 238 |
| முறைகோடி | 124 |
| முறைசெய்து | 90 |
| முறைப்படச் | 140 |
| முற்றாற்றி | 162 |
| முற்றியும் | 162 |
| முனைமுகத்து | 162 |
| முன்னுறக் | 120 |
| மேலிருந்தும் | 208 |
| மேற்பிறந்தா | 94 |
| மையல் ஒருவன் | 180 |
| மோப்பக் குழையும் | 28 |
| யாகாவா ராயினும் | 36 |
| யாங்கண்ணின் | 242 |
| யாண்டுச் சென்று | 192 |
| யாதனின் யாதனின் | 80 |
| யாதானும் நாடா | 92 |
| யாமும் உளேங்கொல் | 256 |
| யாமெய்யாக் | 70 |
| யாரினும் காதலம் | 278 |
| யான்எனது | 80 |
| யான்நோக்குங் | 234 |
| வகுத்தான் | 86 |
| வகைமாண்ட | 192 |
| வகையறச் | 106 |
| வகையறிந்து தற் | 188 |
| வகையறிந்து வல்ல | 158 |
| வசைஒழிய | 58 |
| வசையிலா வண்பயன் | 58 |
| வசையென்ப | 58 |
| வஞ்ச மனத்தான் | 66 |
| வருகமன் கொண்கன் | 268 |
| வருமுன்னர் | 100 |
| வருவிருந்து | 28 |
| வரைவிலா | 196 |
| வலியார்க்கு | 186 |
| வலியார்முன் | 60 |
| வலியில் நிலைமையான் | 66 |
| வழங்குவ | 204 |
| வழிநோக்கான் | 186 |
| வழுத்தினாள் | 278 |
| வறியார்க்கொன்று | 56 |
| வன்கண் குடி | 140 |
| வாணிகஞ் செய் | 34 |
| வாய்மை | 70 |

| குறள் | பக்கம் | குறள் | பக்கம் |
|---|---|---|---|
| வாராக்கால் | 250 | வினைக்கண் வினையுடை | 116 |
| வாரி பெருக்கி | 116 | வினைக்குரிமை | 116 |
| வாழ்தல் உயிர்க் | 240 | வினைசெய்வார் | 130 |
| வாழ்வார்க்கு | 254 | வினைத்திட்பம் | 146 |
| வாளற்றுப் | 268 | வினைபகை | 148 |
| வாளொடென் | 158 | வினையால் | 148 |
| வான்போல் | 190 | வினைவலியும் | 108 |
| வான்நின்று | 14 | வீழப் படுவார் | 254 |
| வானுயர் தோற்றம் | 66 | வீழுநர் வீழப் | 254 |
| வானோக்கி | 122 | வீழும் இருவர்க்கு | 236 |
| விசும்பின் | 14 | வீழ்நாள் படா | 18 |
| விடாஅது | 256 | வீழ்வாரின் | 254 |
| விடுமாற்றம் | 150 | வீறெய்தி | 146 |
| விண்இன்று | 14 | வெண்மை | 182 |
| வித்தும் இடல் | 28 | வெருவந்த | 126 |
| வியவற்க | 100 | வெள்ளத் தனையஇடும் | 138 |
| விருந்துபுறத் | 28 | வெள்ளத் தனையமலர் | 132 |
| விருப்பறாச் | 118 | வேட்ட பொழு | 236 |
| விரைந்து | 142 | வேட்பத்தாஞ் | 142 |
| விலங்கொடு | 94 | வேட்பன | 152 |
| வில்லேருழவர் | 188 | வேண்டற்க வெஃகி | 46 |
| விழித்தகண் | 168 | வேண்டற்க வென்றி | 200 |
| விழுப்புண் | 168 | வேண்டாமை | 84 |
| விழுப்பேற்றின் | 44 | வேண்டிய வேண்டிய | 64 |
| விழைதகையான் | 174 | வேண்டின் உண்டாகத் | 80 |
| விழையார் | 174 | வேண்டுங்கால் | 84 |
| விளக்கற்றம் | 152 | வேண்டுதல் | 12 |
| விளிந்தாரின் | 40 | வேலன்று | 122 |
| விளியுமென் | 256 | வேலொடு | 124 |
| வினைகலந்து | 268 | வைத்தான்வாய் | 214 |
| வினைக்கண் வினைகெ | 136 | வையத்துள் | 20 |


**திருக்குறள் தெளிவு (குறளும் உரையும்) முற்றும்**

# நல்லுரை

பேராசிரியர் சுந்தர சண்முகனார் 1958, 1959 ஆம் ஆண்டுகளில் ‘தெவிட்டாத திருக்குறள்’ என்னும் பெயரில் எழுதி வெளியிட்டு வந்த திருக்குறள் உரை விளக்கங் களுக்கு மலேயா நாட்டு ‘தமிழ் முரசு’, மே, 1959 இதழில் வந்த மதிப்புரையிலிருந்து ஒரு பகுதி:



உரை எழுத அஞ்சுதல் வேண்டு மென்பர் ஆன்றோர். பழுத்த இலக்கண, இலக்கியப் புலமையும், பரந்த பட்டறி வும், காய்தல் உவத்தல் இல்லாமையும் உரையாசிரிய னுக்கு இன்றியமையாதன என்பது கருதியே ஆன்றோர் இவ்வாறு கூறிச் சென்றனர். ‘தானவனாகும்’ ஆற்றல் உரையாசிரியனுக்கு மிக மிக இன்றியமையாததாகும். இதனை ஆங்கில முருகியல் நூலார் **EMPATHY** என்பர். உரையொற்றுமையும் வேற்றுமையும் இந்த ஆற்றலின் வன்மை, மென்மைகட்கு ஏற்ப அமைவனவேயாம். உரையாசிரியனுக்கு இத்தகைய தகுதி வரையறுக்கப் பட்டிருக்கையில் இன்று தகுதி இல்லாரும் திருக் குறளுக்கு உரை எழுத முற்பட்டுள்ளனர். அவ்வுரை களை ஆராய்வது நமது நோக்கமன்று. இங்ஙனம் போலி உரைகள் தோன்றியுள்ள இக்காலத்தே சண்முகனாரின் உரை போன்ற நல்லுரைகள் தோன்றி வருவது நமக்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது.... சண்முகனார் உரையில் பல நயங்கள் காணப்படுகின்றன. ஆங்காங்கே தற்புதுமை **(ORIGINALITY)** புலப்படுகிறது..... இத்தகைய நல்லுரைக்குத் தமிழ்ப் பெருமக்கள் பேராதரவு அளித்தல் வேண்டும்.